# உலர்ந்த தலைகள்

முனா சு. ஜெயந்தி

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உயிரில் கலந்தது.

# பதிப்புரை

பூவை ஆறுமுகம்

75

இன்றையத் தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் திரு. பூவை. எஸ். ஆறுமுகமும் ஒருவர் என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை. மக்கள் விருப்போடு படிக்கும்படியுள்ள கற்பனையும் செந்தமிழும் குழைந்துள்ளது அவர் நடை. உமா பத்திரிகையில் தொடர்ப் புதினமாக வெளிவந்த இதனை நூல் வடிவமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

உலகிலே இதுவரை படைக்கப் பெற்றவைகளிலும், இனி படைக்கப் பெறுபவைகளிலும் மனிதனே தலைசிறந்த படைப்பு என்று ருக்வேதம் கூறுகின்றது. வேத முனிவர்களிலிருந்து ஔவையார், திருவள்ளுவர் வரை மானிடப் பிறவியின் மேன்மையை உறுதி செய்துள்ளனர். 'மனிதன்' என்றால், ஆடவர் பெண்டிர் இருவரையும் குறிக்கும். இவர்கள் இருவருள்ளும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதில்தான் கஷ்டம் இருக்கிறது. ஆடவரை யாவது ஓரளவு புரிந்துகொள்ளலாம், பெண்டிர் மனத்தை அறிவது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அரிதாகவேயிருக்கிறது. அதை நமக்குப் புரியவைப்பதற்காக ஒவ்வொரு மொழியிலும் ஆயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. இந்தப் புதினமும் அவ்வுள்ளத்தில் ஒளிபாய்ச்சி நாம் அதில் சில பகுதிகளைக் கண்டுகொள்ளும்படி உதவுகின்றது.

உலகமுள்ளவரை இத்தகைய நூல்கள் வந்து கொண்டேயிருக்கும் என்றுதான் தோன்றுகின்றது.

—பதிப்பகத்தார்.

# அறிமுகம்

'வாழ்வாவது மாயம்' என்றார்கள் சித்தர்கள்; 'மண்ணாவது திண்ணம்' என்றும் உறுதி பூண்டார்கள் அவர்கள். ஆதலால்தான், உடலையும் மாயையெனக் கொள்ளத் தலைப்பட்டார்கள். இவ்வரிசையில், பெண்ணையும் சேர்த்துக்கொண்டார்கள். இவர்கள் கண் கட்டு வித்தைக்காரர்கள்!

வாழ்க்கையை வாழ்க்கையாகக் கணிக்கவும் காணவும், பண்பான - பரந்த மனம் வேண்டும். இத்தகைய மனப்பக்குவம் வாய்க்கப் பெற்றால், பெண்ணைப் புதிர் எனவும், பெண்ணை மாயை எனவும் பேசமாட்டோம்!

பெண் எனும் பிறவி, புனிதப்பூ!

அவளுக்கு ஒரு பிறவி, ஆனால் பல அவதாரங்கள்!

அவளுக்கு உயிர் ஒன்று; உயிர்ப்புக்கள் பல உண்டு!

பெண் மனத்தைச் சொல்லிக் காட்டாத பேனாக்கள் இல்லை.

ஆனால், நான் அறிமுகப்படுத்தப் போகிறவள் பொற்புடைப் பூவை.

அந்தப் பெண்ணைக் கையெடுத்துக் கும்பிடுகின்றேன் நான்.

என்னுடைய தனித்தன்மையை நீங்கள் உணர்வீர்கள்.

ஆகவே, இப்புதினத்தின் புத்தம் புதிய தத்துவ அழுத்தத்தையும் உங்களால் அனுமானம் செய்து கொள்ள முடியுமென்றும் நம்புகிறேன்.

பூவை. எஸ். ஆறுமுகம்.

# 1. ரிஷிமூலம் - நதிமூலம்!

எழுதி முடித்த தாள்களை ஒன்றாக இணைத்துக் குண்டூசி யால் தைத்து, பக்க எண்களை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து முடித்து, மேஜைமீதிருந்த அழைக்கும் மணியை எழுப்பினார் ஞானசீலன். அந்த வாரத்துக்குரிய தம் கடமை முடிந்தது என்ற அளவில் அவரிடமிருந்து ஆறுதல் பெருமூச்சு புறப் பட்டது. தன் கடமைகள் ஓயாது என்று எடுத்துரைப்பவன் போல, ஆபீஸ் பையன் அறைக்கதவை இழுத்து மூடிக்கொண்டு ஓட்டமாக ஓடிவந்து நின்றான். "அண்ணா!" என்றான்.

ஞானசீலனின் சிந்தனை வசப்பட்ட முகம் நிமிர்ந்தது. வாய் திறக்காமல், மேஜைமீதிருந்த கற்றைக் காகிதங்களை எடுத்து அந்தப் பையனிடம் நீட்டினார். "ஆனந்தனிடம் சொல்லி, இன்றைக்குச் சாயந்திரத்துக்குள் எல்லாம் கம்போஸ் ஆகி வரவேண்டுமென்று நினைப்பூட்டு, தம்பி!" என்று நினைவுக்குச் சிவப்புக்கோடு கிழித்துப் பேசினார் அவர்.

"சரிங்க," என்று தலையை உலுக்கிக்கொண்டே அங்கிருந்து நகரத் தொடங்கினான் சிறுவன்.

"ராதா!" என்று கூப்பிட்டார் ஞானசீலன்.

"காப்பி வேணுங்களா" என்று கேட்டான் ராதா.

ஞானசீலனுக்குச் சிரிப்பு தாளவில்லை. "ஊம்...ஊம். எனக்குக் காப்பி வேணுமிங்கிறதை மட்டும் குறிபார்த்து வச்ச மாதிரி கச்சிதமாச் சொல்லிப்பிடுறியே, தம்பி?" என்றார் அவர்.

"மணி நாலு ஆகப் போகுதுங்களே, அதுதான் கேட்டேன். உங்களுக்கு காப்பி டயமின்னு, எனக்கும் அப்படித் தானுங்களே?"

சிரிக்காமல் சொல்வதற்கும் பக்குவம் வேண்டும். பையன் அந்த ரகம்!

சிரிக்காமல் கேட்பதற்கும் கெட்டிக்காரத்தனம் வேண்டும். துணை ஆசிரியர் இந்த வகை!

பையன் காப்பியும் கையுமாக வந்தான். வாடை வளர்ந்தது.

அதே வேளையில், மூத்தவர் ஒருவர் இளம் எழுத்தாளர் என்ற அறிமுகத்துடன் தன் படைப்பு ஒன்றை ஞானசீலன் கையில் ஒப்படைத்தார்.

ஞானசீலனுடைய பார்வையில் இரைதேடும் கழுகின் தீட்சண்யம் இருந்தது. நல்ல கதைகளைத் தேடுவதில் அவருக்கு மிகுந்த பற்றுதல் உண்டு. மேலோட்டமாகச் சென்ற அவரது திருஷ்டி, வந்தவரது சிருஷ்டியில் ஊர்ந்த போது, அவருடைய இதழ்க் கடையில் நமட்டுச் சிரிப்பு ஊர்ந்தது. 'மூன்று முரடர்களின் கையில் ஒரு கன்னி!' என்று கதைக்கு தலைப்பு சூட்டப்பட்டிருந்தது. "ஈஸ்வரா!" என்ற ஆயாசப் பெருமூச்சு அவரை அறிந்தே வெளிவந்தது. வந்தவருக்கு முகத்தில் ஈயாடவில்லை. காத்திருந்த காப்பியினைச் சுற்றி ஈ ஆடியது.

"ஸார்......"

"ஓ......நீங்கள்......"

"ஆமாங்க என் பெயர் சிவக்கொழுந்து. என் கதையைப் பிரசுரம் செய்து ஆதரவு கொடுத்தால்தானுங்க என்னைப் போன்றவர்கள் கடைத்தேற முடியும். தயவு பண்ணி..."

"தயவு பண்ணி ஒரு காரியம் செய்யுறீங்களா?"

"சொல்லுங்க, ஸார்!"

"இந்தமாரிக் கதைகளைப் போடறதுக்கின்னு தமிழ் நாட்டிலே சில பத்திரிகைங்க இருக்கு. அங்கே போய்க் கொடுங்க!"

"இந்த ஏமாற்றத்தை என்னாலே தாங்க முடியலேங்க. உங்களை ரொம்ப நம்பி வந்தேன் ஸார்!"

"மன்னிக்கணும்!"

"எனக்குப் பணம் எதுவும் வேண்டாம், ஸார்!"

"எதற்கு...?"

"என்னுடைய இந்தக் கதையைப் போடுவதற்கு...!"

"நல்ல மனிதர் ஐயா நீர்! புதுமைப்பித்தன் காலத்தில் எழுதியிருக்கவேண்டிய புள்ளி ஐயா நீர்!"

"நூற்றிலொரு வார்த்தை ஸார்!"

"ஊம்...!"

"உங்க கதைங்கன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். காலேஜிலே படிக்கிற என் ஸிஸ்டர்கூட உங்க கதைகளை விடாமல் படிக்கும், ஸார்!"

"அப்படியா? சந்தோஷம்...இந்தாருங்கள் காப்பி!"

"எனக்குக் காப்பி வேண்டாங்க; என் கதை..."

"உங்க கதைதானே?...இந்தாருங்கள்...!"

நீர்த்தடாகத்தின் அடியிலிருந்து எம்பிக் குதித்து விளையாடும் கெண்டைமீன், மீண்டும் நீரடிக்கே திரும்பிச் செல்வதுபோல, அந்தக் கதை அதற்கு உரித்தானவரிடமே சரண் புகுந்தது.

மெல்லிய நகைப்புச் சத்தத்தை ஓசைப்படுத்தாமல் உண்டாக்கினான் பையன்.

ஞானசீலன் நெற்றிப் பொட்டில் கையைப் பதித்து அழுத்திக் கொண்டார். வந்தவர் தந்த கதையைப் படித்த தன் பலன் கைமேல்-அல்ல, தலைமேல் கிட்டியது. 'சிருஷ்டி

-எனும் புனிதப்பணி எப்படி எப்படியெல்லாம் அலைக்கழியத் தொடங்கிவிட்டது. முரடர்களையும் கன்னியையும் வைத்துக் கொண்டு அயல் நாட்டவரான எ. ஜி. கார்ட்னரின் தலையில் கையை வைத்திருக்கிறரே இந்த மனிதர்?...இம்மாதிரி இலக்கியத் திருடர்களை சமுதாயத்தில் அனுமதிக்கவே கூடாது. பேராசிரியர் கல்கி போன்றவர்கள்கூட இப்போது இல்லையே?' ஒன்றிலிருந்து வேறு ஒரு சிந்தனை பிடிப்புக் காட்டிற்று. கதை எழுதவேண்டும், தாம் எழுதும் எழுத்துக் கள் எல்லாம் அச்சில் ஏறிவிடவேண்டும் என்று இதே நினை வாகச் சுற்றி அலைந்து தம்மைத் தொந்தரவு செய்த ஊர்க் காரர்கள், வேண்டியவர்கள், அறிமுகம் அற்றவர்களின் ஞாப கத்தைக் குழப்பிவிட்டது, காலம்-பழங்காலம்! 'கல்கி' அவர்கள் சொன்னது இன்றும் பசுமையாக நினைவில் இருக்கி றது. எழுத்தாளன் என்ற தகுதிக்கு ஒருவன் லாயக்கா, இல்லையா என்பதைப் பார்க்கவேண்டுமானல், அவனுடன் ஒரு நிமிஷம் சம்பாஷணை செய்து பார்த்தாலே, புரிந்துவிடும் என்பார்கள். எழுத்தாளர்கள் பெருகவேண்டும், அவர்களுக் குத் தகுதியும் பக்தியும் பண்பும் இருக்கும் பட்சத்தில், எழுத் தாளன் என்றல் அவன் இரண்டாவது பிரம்மாபோல. ஊம், இப்போதுதான் யார் யாரோ கிறுக்கத் தொடங்கிவிட்டார் கள். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் கதைதான்!" வரட்டும், வரட்டும்! புதிய அமைப்பு ஒன்றை நிறுவி, எழுத் தாளச் சகோதரர்களை ஒன்றுகூட்டி இதுபற்றி விவாதிக்க வழி செய்தால்தான் நல்லது!"

தீ பிடித்தது - சிகரெட்டில்.

புகை கலந்தது - நெஞ்சில்.

இருந்த இடத்தில் இருந்துகொண்டு நீலத்திரையை ஒதுக்கினர் அவர். ஒதுங்கிக் கிடந்தன பஞ்சுப் பொதிகள்; பெல்ஜியம் நிலைக்கண்ணாடி பிரதிபலித்துக் காட்டுகின்ற]பஞ்சுக் கூட்டங்களின் நினைவை எண்ணமிட்டார். ஒட்டிக் கிடந்தது நீலவண்ணக் குழம்பு. ஐந்தாறு நீலோத்பல மலர்களை

வெள்ளித் தட்டில் அடுக்கி வைத்துவிட்டு, அவற்றைத் தொலைவிலிருந்து படம் பிடித்தாற் போன்ற பாவனை ஓடியது அவருள். எஞ்சிய விதானத்திரை முழுவதும் ஒரே சிவப்பு. நஞ்சுக் கொடியின் உறவை விடாமல், தாயைத் தஞ்சமடைந்த அந்தப் பாசக் கொடியைத் துணை கொள்ளாமல், பிரசவ அறையிலே கிடந்து 'குவா, குவா' என்று குரலெழுப்பி, கால் உயர்த்திக் கிடக்கும் பச்சை மண்ணின் குதிகால்ச் சிவப்பின் உவமையை உருவகப்படுத்திக் காட்டிற்று அவருக்குரிய இலக்கிய மனம்.

காப்பி குடித்ததாக அவர் தம்முள் நினைத்துக் கொண்டார். ஏனென்றால் சுவர்க் கடிகாரம் மணி நான்கு-இருபது என்று உரைத்தது. காலியாக இருந்த கண்ணாடிக் கிளாசை எடுக்க ராதா வந்து நின்றான். ஒவ்வொன்றுக்கும் மண்டையைப் போட்டு உருட்டிக் கொள்ளலாமா? இல்லை, அப்படி உருட்டிக் கொள்ளத்தான் முடிகிறதா?

புறப்படவேண்டிய நேரம் வந்து விட்டது.

"அண்ணா, ஆபீஸ் தபால் ஏதாகிலும் இருக்கா? உங்க சொந்த லெட்டர்..."

'சொந்த லெட்டர்' என்றதும் தான், ஞானசீலனுக்கு ஒரு விஷயம் சிந்தையில் குதித்தது. கடலூரிலிருந்து உறவினர் ஒருவர் கடிதம் போட்டிருந்தார். விஷயம் முக்கியந்தான்—அதாவது அவர் வரையில்! விளைவும் முக்கியந்தான்—இவர் வரையில்! ஆனால் இருவர் கணிப்பும் முடிவும் நேரெதிராக இயங்கின.

தோல்ப்பையை பையத் திறந்தார் அவர். ஒரு காகிதத் தாள் துருத்திக்கொண்டு வந்தது. ஏற்கனவே பார்த்து முடித்த உள்ளடக்கமானதால், மீண்டும் அதைப் படிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனாலும் இத்தகைய இயல்பான நியமங்களுக்கு இந்த மனித மனம் எப்போதுமே அமரிக்கையாகத் தலைவணங்கி விடுமென்று சொல்லமுடிகின்றதா, என்ன? ஞானசீலன் அக்கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தார்;

படித்தார். 'இதைப் படிக்கிற ஒவ்வொரு தரமும் என் மனசு ஏன் இப்படி சந்தோஷப்படுது?...' மன உணர்வுகளின் கலக்கமடையாத நினைவுடன் அவரது மனத்தின் மனத்தை வினவினர். கடிதத்தின் அடியிலிருந்த அந்தப் பெயரையும் பல முறை படித்தார். முகத்தில் மலர்ச்சி. எண்ணத்தில் கனவு. கனவில் சிரிப்பு. முன் பின் பார்த்தறியாத பெண்ணின் முகம் சுற்றிவிட்ட பம்பரமாகச் சுற்றியது. கோலமலர் விழிகளும், குழைந்திடும் கொண்டைப் பூச்சரமும், அவரது ரசிப்பு மனத்திற்கு விருந்து வைத்தன போலும்! 'இந்தப் பெண் யார்?' ரிஷிமூலம்—நதிமூலம் காண விழையலாகாது என்பார்கள்! இந்தப் பெண்களின் வியவகாரமும் அங்ஙனம்தானே?

இருந்திருந்தாற்போல, அங்கே 'அபரேஷன் அறை' அமைதி பூத்தது.

'தமிழரசி' அலுவலகத்தின் சொந்தக்காரரான மணி' முத்து வேலாயுதம் துணை ஆசிரியரின் தனி அறைக்குள், பிரவேசித்தார். நாற்காலியில் அமர்ந்து, பத்திரிகையின் நடவடிக்கைகளைப்பற்றி உரையாடினர். காங்கிரஸ் மகாசபையின் எதிர்பார்த்த வெற்றியை வைத்துத் தீட்டிய தலையங்கத்தைப் புகழ்ந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குக் கிடைத்துள்ள பதினைந்து இடங்களை வாழ்த்தி துணைத் தலையங்கம் எழுத வேண்டுமென்ற தம் உளநிலையைச் சொன்னர் துணையாசிரியர், "செய்யுங்கள்," என்றார்.

முதலாளியின் கார் பறந்தது.

பறக்க முயன்ற அச்சுப் படிவங்களைத் தம்முடைய கைப் பைக்குள் திணித்துகொண்டு அங்கிருந்து வெளியேறினர் ஞானசீலன்.

நடனராணியின் கார் குறுக்கிட்டது. குறுக்கிட்ட பதில் சிரிப்பு விழி விலகியது!

பிராட்வேயின் குறுகிய பாதையில் பரந்து நெளிகின்ற சுறுசுறுப்புக்குக் கேட்க வேண்டுமா?

## 2. பாசத்தின் அலைக்குமிழ்

மலர்ந்த மல்லிகைப் பூக்களை மேனியில் ஒட்டிக் கொண் டாற்போன்று காட்சியளித்த நாய்க்குட்டி ஒன்றை மார்புடன் அணைத்த வண்ணம், வண்ணப் பசுமையைப் போட்டிக்கு இழுக்கும் செருக்குடன் காட்சியளித்த திரை அழகி பத்மினி யின் ஓவியம், ஒளி வெள்ளச்சுவரை ஒளி உமிழ் அலங்காரம் செய்து கொண்டிருந்தது!

ஞானசீலனின் வாசஸ்தலம் அது. கோடை ஆகட்டும், குளிர் ஆகட்டும் எல்லாப் பருவங்களும் அந்த அறையில் நுழை யாமல் தப்ப முடியாது.

தேசப்பற்றுக் கொண்ட அரசியல் தலைவர்கள் எனில், அவருக்கு ஒரு பற்றுதல். ஆகவே, அவரவர்களின் பாணியில் அவரவர்கள் நகைமுகம் துலங்கத் தோன்றினார்கள்!

ஒரு பக்கம் சாய்மானக் குறிச்சி.

மறு புறம் தண்ணீர்ப் பானை.

கீழ்ப்பகுதியில் பெரிய புத்தக அலமாறி.

சுற்றிச் சுற்றிப் பார்த்தார் அவர். காலேஜ் படிப்பின் போது எடுத்த நிழற்படம் ஒன்று காணப்பட்டது. 'டை' கட்டியிருந்த அவரது உருவத்தைப் பார்த்ததும் அவருக்கு குறுஞ்சிரிப்பு குறுக்கோடியது. மனிதர்கள் மாறுகிறார்கள்; ஆனால் நிழல்கள் மாற முடியாது! உருவம் மாறுகிறது; ஆனால், உள்ளமும் ஏனோ, எப்படியோ மாறித்தான் தீர்கிறது! தீர்வுபெற வாய்க்காத நியதிகளுள் இதுவும் ஒன்றோ?...

அறைத் தோழர் நித்தியானந்தம் வந்தார். பழகுவதற்கு ஏற்ற உயர்ந்த மனிதர். அடுத்த அறை நண்பர்கள் தாஸ், சுந்தர்ராஜ், ராஜ்குமார் ஆகியோர் வந்தார்கள். நடந்து

முடிந்த தேர்தலைப் பற்றி வழக்கம் போல காரசாரமான பேச்சு வார்த்தைகள் நடைபெறலாயின. பிறகு, அமைதி வந்தது.

புகை பிடித்துக்கொண்டே ஞானசீலன் மேஜையைப் பார்த்தபோது, அவரது பார்வைக்குத் தவம் இருந்த தொடர் கதையின் அச்சுப்படிவங்கள் தென்பட்டன. திருத்திக் கொண்டே வந்தார்.

ஓரிடம்:

"...தியாகம் என்ற குணநலன் சொல்லிக்கொண்டு வருவது இல்லை; சொல்லியும் தெரிவது கிடையாது. உள்ளத்தில் உதிரத்துடன் ஊறிப் பக்குவப்படும் இப்பண்புதான் மனிதனை மனிதனாக உயர்த்திக் காட்ட வல்லது. பிறவா வரம் வேண்டுமென்றார்கள் பண்டைப் பெரியார்கள். அது பொருந்த வேண்டாமா? பிறப்பு வேண்டும்; ஏன், தெரியுமா? பிறப்பு இல்லையேல் மனிதனுக்குத் தியாகம் செய்ய வாய்ப்பு ஏது? தியாகம்; விளம்பரத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால், அன்புத் தளைக்கு உட்பட்டது! சொல்லைச் செயற்படுத்தி, செயலை வாழ்க்கையாக்கி வாழ முனைபவனே— வாழத்துணிபவனே மனிதன்!—"

ஞானசீலன் எழுதி வருகின்ற வளர்கதையின் தலைவனின் வாய்மொழியாக உதிர்ந்திருந்த வாசகங்கள் அவை. அவற்றினை வாய்மை மொழிகளாகவே அவர் உணர்ந்தார். அவருக்குச் சொந்தமான இலக்கிய நெஞ்சம் எழுதிக் கொடுத்த தத்துவம் அவருக்கு நிறைவு தந்தது. 'பூவா, தலையா?' என்ற இரண்டு பட்ட வினாக்குறியீட்டுக்கும் மீறிய யதார்த்தச் சொல்லடுக்காகவே அவருக்குப் பட்டது. 'எழுத்தாளன் எண்ணத்தால் உயர்ந்து எழுத்தால் உயரவேண்டும்!'

'நடந்தாய், வாழி, காவேரி!' எனும் மகுடம் ஏற்ற தொடர்கதையின் முன் பகுதிகள் அச்சுவடிவமாய் இருந்தன.

நாயகியின் குணச்சித்திர அமைப்பில் ஒரு கீறல் விழுந்து விட்டது. கீறல் விழுந்த இசைத் தட்டாக அவருள் புலம்பல் எழுந்தது.

சாம்பல் தட்டில் இடம் இல்லை!

நெஞ்சில் இடம் இருந்த எண்ணங்களைப் போட்டுக் குழப்பிக் கொண்டார். அறையினின்றும் வெளியே வந்தார். டவல் தோளில் தவழ்ந்தது: நெஞ்சில் தவழ்ந்தாள் கதைத் தலைவி. நினைவில் தவழ்ந்த அந்தப் புத்தம் புதிய முகத்தைச் சுட்டினாள். சுட்டும் விழிச் சுடரில் ஒளி காட்டி, ஒளி தேக்கும் சிலம் அவர் நேத்திரங்களில் ஓடியது.

வேலைக்காரர்கள் ஷேக்கும் மணியும் சாப்பாட்டு விவரம் கேட்க வந்து, விடை கண்டு, திரும்பினார்கள். சிரிக்க வைக்கும் தோற்றத்துடன் ஓவியர் ஒருவர் வந்தார். "நான் தான் ஸார் மீனம்! ஜோக் போட்டிருக்கேன்!", என்று படங்களைப் பிரித்தார். சிரிப்பு ஏதும் பிரியாததால், பிரிய வேண்டியவர் ஆனார்.

மணி ஏழு-எழுபது.

தம்புச் செட்டித் தெருவின் சுறுசுறுப்பு ஓயவில்லை.

இந்திரகுமார் என்ற இளைஞர் வந்தார். இழைந்த வேண்டுகோளின் பிரகாரம், சிதம்பரம் ஜெயராமனின் குரலை பாவனை செய்து பாடிக் காட்டினார். நெடுமாறன், பரமசிவம் போன்றோர் வந்தார்கள். இலக்கிய உலகம் தன்போக்கில்-தன் லயத்துடன் சுழலத் தொடங்கிற்று.

ஞானசீலனுக்குத் திடுதிப்பென்று அம்மாவின் ஞாபகம் வந்தது. ஒரு வாரமாக வந்துகிடந்த தபாலுக்கு காலையில் பதில் அனுப்பியதை நினைத்தார். 'நான் பதில் போடுவதற்கு ஒரு நாள் தாமதமானால்கூட அவர்கள் அன்னம் தண்ணீர் விரும்ப மாட்டார்களே!' அன்னை எனும் கடவுள் கொள்கையில் அவர் நீந்தினார். நீரின் அலைகளுடன் நெஞ்சின் அலைகள் போட்டியிட்டன.

ஒரு சமயம், ஞானசீலனின் தாய்க்கு உடல் நலம் நலிந்தது. அப்போது அவர் அன்னைக்கு அருகிலேயே இருந்த நேரம். "'தம்பி உன்னை மாலையும் கழுத்துமாகப் பார்க்கும் பாக்கி

யத்தை மட்டும் எனக்குக் கொடுத்திடப்பா! அப்பத்தான் என் நெஞ்சு வேகும்!" என்று நீர் தொடுத்து, நெஞ்சத்துக் கனவுகளையும் தொடுத்துப் புலம்பினாள்.

"ஆகட்டும்; அம்மா!" என்ற பதில் அவரிடமிருந்து வந்தது.

தாய்க்கு ஆனந்தம் வெடித்தது. அப்போதே தன் மைந்தனை மலர் முகமும் மலர் மாலையுமாக, பங்கய முகத்துப் பாவையவள் பக்கத்தே வீற்றிருக்கக் கண்டுவிட்டது போன்ற ஒரு குதூகலம்! இருக்கத்தானே வேண்டும்!

பெண்களின் பெயர்கள் சிலவற்றை பெற்றவள் ஓதினாள்.

"இந்த தஞ்சாவூரிலே சுசீலா ரொம்ப அழகான பொண்ணு. நம்ப பாம்பாட்டித் தெருவேதான். அப்பாரு போலீஸ் இன்ஸ்பெக்டராம்!...மேலராஜ வீதியிலே கோமதின்னு ஒரு பொண்ணு இருக்கு. திருவாரூரிலே கமலாட்சின்னு ஒரு தங்கம் இருக்குது. ஆனா, ஒண்ணு! உன்னோட மாமன் மகள் மரகதத்தை மட்டும் நீ மறந்துப்பிடு...!" என்றாள்.

ஞானசீலன் தம்முடைய கதை ஒன்றைப்பற்றி எண்ணமிட்டார். அந்தக் கதையில், தாய் ஒருத்தி தன் பிள்ளையிடம், "தம்பி, நீ யாரையானும் காதலிக்கிறீயா, சொல்லு! அவளையே உனக்குக் கட்டிவைக்கிறேன்!" என்று கேட்கிறாள். இப்போது அந்நிகழ்ச்சி நினைவில் சரம் கட்டியது.

"தம்பி...!"

"அம்மா!..."

"பேச்சு மூச்சைக் காணலையேப்பா?"

"பேச்சுத்தான் அம்மா இல்லை; ஆனால் மூச்சு இருக்குதே, அம்மா!"

பெற்றமணிவயிற்றினின்றும் மாணிக்கக்கட்டிச் சிரிப்பு வெளி வந்தது.

"உங்க இஷ்டப்படி செய்யுங்க, அம்மா!"

"கல்யாணம் என்கிறது ஆயிரம் காலத்துப் பயிரின்னு உன் அப்பா சொல்வாங்களே, மறந்திட்டியாடா? இதிலே, என் இஷ்டம் முக்கியம் இல்லே. உன் விருப்பம்தான் முக்கியம். நான் இப்ப சொன்ன பெண்ணுங்க பேர் கிடக்கட்டும். உனக்குத் தெரிஞ்ச பெண்ணை யாரையும் நீ காதலிக்கிறதாயிருந்தாலும் சொல்லு; அந்தப் பெண்ணையே செய்து வைக்கிறேன்.'

ஞானசீலனுக்குத் 'திக்' கென்றது. 'காதலா? காதல் என்றால் அர்த்தம் என்ன? எத்தனையோ காதல் கதைகளை எழுதித் தள்ளியிருக்கிற எனக்கா காதலைப்பற்றி விளங்கவில்லை...?'

அன்னையின் உடம்பு தேறிவிடவே, திருமணப் பேச்சை அப்படியே அந்தரத்தில் நிறுத்திவிட்டு, அவர் 'போட்மெயி' லில் பட்டணத்துக்கு வண்டியேறினார்.

மாதம் ஒன்று முடிந்து விட்டதே!

பச்சைப் பாலகனுக்குச் சிரிப்பும் அழுகையும் ஒன்றுதான். அது போலவேதான் மனத்தில் சிரிப்புக்குரிய நடப்புக்களும், அழுகைக்குரிய நிகழ்ச்சிகளும் கொடிகட்டி—கொடி காட்டிப் பறக்கின்றன.

'முன்னைத் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்து' ஈன்ற தெய்வத்தின் முகத்தை நினைந்து, தரிசித்தார். பாக்கியம் இழந்த அவள் தனக்கென அனுபவித்த தொல்லைகளை அவர் எங்ஙனம் எடை கட்டிப் பார்க்க முடியும்? அன்பும் பாசமும் எடை கடந்ததாயிற்றே! 'அம்மாவைப் பார்க்கணும். கண்ணுக்குள்ளவே அவங்க முகம் நிற்குது!...'

அப்பொழுதே பறந்து தஞ்சையில் குதித்து, அம்மாவின் காலடியில் குதித்து விளையாட வேண்டும்போல ஒரு கோலவெறி கிளர்ந்தது!

ஆனால், முடிகின்றதா?

மனம் பறக்கிறது!

மனிதனால் பறக்க முடிகிறதா?...

ஊரிலிருந்து யாரோ பெரியவர் வந்திருப்பதாகச் செய்தி சொன்னான் அப்பாஸ்.

வந்தவர், குடும்ப நண்பர்; பெயர். கோதண்டபாணி. அவர் சொன்னார்: "தம்பி, உங்க அம்மாவுக்கு கபவாத ஜுரம் வந்திருக்குது. என் மகள் வாணிதானப்பா கிட்டத்திலே இருந்து கவனிச்சுக்கிட்டு இருக்குது. உன்னைக் கையோடு அழைச்சுக்கிட்டுப் போகத்தான் வந்தேன். இப்பத்தான் எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலே வந்தேன். புறப்படு; வழியிலே ஆகாரம் பார்த்துக்கிடலாம்!"

பாசத்தின் அலைக்குமிழ் வெடித்தது!

அந்த அறையின் வெளிக் கதவில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகையில் 'ஞானசீலன் பி. ஏ.—வெளியே' என்ற அறிவிப்பு இருந்தது!

## 3. கள்ளவிழிப் பார்வை!

இராஜராஜ சோழனின் அழியாப் புகழுக்கு அழியாச் சின்னமென நிமிர்ந்து நின்ற வண்ணம் இருக்கும் அந்தப் பெரிய கோயிலைப் பார்த்துக் கைதொழுதார் ஞானசீலன். 'பொன் வைக்கவேண்டிய இடத்தில் பூ வைப்பதுபோல—' என்பார்கள். வாஸ்தவந்தான். சோழப் பேரரசின் ஜீவ ஒளியைப்பற்றிப் பாப்புனைய நான் கவிஞனாகப் பிறந்திருக்க வேண்டும். தப்பிவிட்டேன். இப்போதைக்கு நான் ஒரு கதாசிரியன். கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்லாமல், காட்டிய திறனுக்குக் கைகூப்புகிறேன். இதுவே என்னால்

இயன்றது,' என்று எண்ணிக்கொண்டே சுற்றுப்புறம் சுற்றிப் பார்வைச் சிதறல்களைச் சிந்தவிட்டார் அவர். இமை முடிகளை முடிச்சிட்டு உறக்கம் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தது. என்றாலும், அவருக்குச் சுய ஞாபகம் அதிகமாகவே இருந்தது. இதற்குக்காரணம், அவரது அன்னையே! 'அம்மாவுக்கு உடம்புக்குச் சரியில்லை; அம்மாவுக்கு இப்போது எப்படி இருக்குமோ?' என்ற கவலையின் ஆதங்கப் பொறிகள் தாம் அவருள் எரிப்புச் சக்தியை மூட்டிவிட உதவின. உடன் வந்த கோதண்டபாணி தூக்கப்பிரியர். ஜட்காவின் 'கடமுடா' சத்தத்தையோ, வண்டிக்காரன் வண்டிச் சத்தத்தைக் கூட்டிக் கேட்டு தன் தொண்டைச் சத்தத்தையும் நேர் விகிதாச்சார அளவில் கூட்டிப் போட்டுக் கத்திய நிகழ்ச்சியையோ அவர் அறியார். அவர் ஏன் அறியவேண்டும்? ஆமாம், அறிய வேண்டாம்தான்!...

ஜட்கா தன் லயத்துடன் ஓடிக்கொண்டேயிருந்தது.

மனம் தன் லயந்தன்னில் ஓடிக்கொண்டேயிருந்தது.

ஜங்க்ஷனைத் தாண்டியது வண்டி. ஆனந்தா லாட்ஜில் ஒரு நிமிஷம் நின்றது; ஒரு கப் காப்பி முடிந்தது. பிறகு, தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மைகள், முந்திரிப் பருப்புக் குவியல்கள், குடமிளகாய்க் கும்பல்கள், வெட்டிவேர்ப் பூச்சரம், பழதினுசுகள் ஆகியவற்றிடமிருந்து விடை பெற்றார்கள். இர்வின் பாலம், மணிக்கூண்டுடன் காந்திஜி சாலை பூர்த்தி, பாம்பாட்டித் தெருவுக்கு மடங்க வேண்டும். நியூடவர், கீழவாசல் திருப்பம் போன்ற பகுதிகள் மோதி விலகின.

மோதி விலகாத பாசத்தின் அலைகளின் துணைகொண்டு வண்டியின் கம்பியை விடுவித்துக் கொண்டு முதலில் இறங்கினார் ஞானசீலன். கைப்பை கட்கத்தில் இருந்தது. பழக்கூடை சோற்றுக் கைப்பிடியில் அடங்கியது. சில்லறையை மொத்தமாக எண்ணி நீட்டினார் வந்தவர். வண்டிக்காரன் 'சொல்லிக் கொண்டு' புறப்படலானான்.

அந்த வீட்டின் தலைவாசலில் வலதுகாலை வைத்து நடந்தார் ஞானசீலன்.

ஞாயிறு போற்றுவோம்!

முன்னைப் பழவினையின் பின்னைப் பழங்கதைக்கு வாய்த்த புதுப் பொருளாம் அன்னை வடிவம் சமைத்துக் கொடுத்த பாசத்தின் தலைவாயில், தன் அஃடையா நெடுங்கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, "வா, மகனே, வா!" என்று முகமன் கூறி நிற்பது போன்றதொரு பிரமை அவருள் எழுந்து, பரவி, நிலைத்து விட்டிருந்தது. உள்ளத்து உணர்வுகள் விழிப்புக் கொடுத்துக் கிடக்கையில், மனத்திற்குக் கற்பனு சக்தி கூடுதல். அது சமயம் இந்த மனம் எதையும் எண்ணும்; எண்ணுமலும் இருக்கும். இப்படிப்பட்ட இரண்டுங்கெட்ட-இரண்டும் கூடிய நிலைதான் பிரமை. இத்தகையதொரு கட்டத்தில் இதயத்தைப் பழக்கிவிட்டவர் அவர். காரணம், அவர் ஓர் எழுத்தாளர். அதாவது, எழுத்தை ஆளுபவர். எழுத்தை ஆளுபவருக்கு மனத்தை ஆளத் தெரியத்தான் வேண்டும். என்றாலும், இந்த மனம் இருக்கிறதே, இது சமய சந்தர்ப்பங்களிலே எல்லோரையும் சோதித்துத்தான் தீரும்!

மனம் தத்துவம் படித்தது!

பாசத்திற்குத் தத்துவமா பெரிது?

ஊஹூம்!

பாசத்துக்குப் பாசம்தான் பெரிது!

'அம்மா!...அம்மா!' என்ற நாமாவளி வளர்ந்த பாடல் பெற்ற கோயிலின் ஸ்தல விருட்சம் போன்ற ஓர் உருவம் தெரிந்தது.

ஞானசீலனுக்கு மெய் சிலிர்த்தது. விழி யுணர்வு சிலர்த்தது. "அம்மா!" என்று ஓடிப்போய் விழுந்தார். கரங்களில் போட்டுத் தாலாட்டிய மகனை பாதங்களில் கிடத்தவா அவள் சம்மதிப்பாள்? கோசலை அம்மாள் விதரணை புரிந்தவள் இல்லையா?

"தம்பி!" என்று நெஞ்சினின்றும் புரண்ட பாச வெள்ளத்தில் சொற்களைத் தோய்த்தெடுத்து வெளிக் காட்டினாள் அவள். நெஞ்சிலும் நீர்; ஒடுங்கிக் குழிவிழுந்த நயனங்களிலும் நீர். நீர்வெளிப் பெருக்கிடையே தாய் தத்தளித்தாள்; தாயுடன் சேர்ந்த மகனும் தத்தளித்தார்!

"தம்பி, ரொம்ப ரொம்ப இளைச்சுப் போயிட்டியேப்பா!"

"அதெல்லாம் இல்லேம்மா. நான் இளைக்கலே. நீ தான் அம்மா, இளைச்சிருக்கே!...வயசு காலத்திலே நான் உன் பக்கத்திலேயே இருந்தால், நல்லாயிருக்கும். ஆனா, ஆண்டவன் அதுக்கு உண்டான வசதியை நமக்குத் தரலே."

"சரி, சரி. இனிமே எனக்கு பயமில்லே. ராத்திரிதான் பயப்பட்டேன். இப்ப தெளிஞ்சிருச்சு. போய் குளிச்சுப்பிட்டு வந்து பலகாரம் தின்னு. அப்புறம் நாம பேசலாம். பக்கத்து வீட்டு ஐயாவோட பொண்ணுதான் எனக்குத் தெய்வ மாட்டம் துணை இருந்துச்சு. இப்ப பலகாரம்கூட அதுதான் தயார்ப்பண்ணியிருக்குது," என்று சொல்லி நிறுத்தினாள் கோசலை.

குனிந்த தலை நிமிரவில்லை மகன் ஞானசீலன்.

உதட்டுச் சிரிப்பை மாற்றவில்லை அம்மா கோசலை.

ஞாயிறு; இளங்காலைப் போது.

டர்க்கி டவலால் சுருட்டை முடிகளைத் தேய்த்துத் தேய்த்துத் துவட்டினார் ஞானசீலன். காவிரி மண் வளப்பம் கொண்டது தண்ணீர். நீராடினார். குளுமையாக இருந்தது உடம்புக்கு. அது போலவே, அவரது முகமும் காந்தி பெற்று விளங்கிற்று. சுருட்டைத் தலைமுடியை முன் விரல்களால் கோதி 'வாகு' எடுத்துவிட்டவாறு கூடத்திற்கு வந்தார் அவர். பாய் விரித்து, பலகாரம் வைக்கப்பட்டிருந்தது. புது மாப்பிள்ளைக்கு உபசாரம் செய்கிறாற்போல அங்கு—அப்பொழுது காரியங்கள் நடைபெற்றன. அவர் நெஞ்சு நிமிர்த்தி, நினைவு நிமிர்ந்து பார்த்த தருணத்தில், அந்தப் பெண் நாணமும்

நகையுமாகக் காட்சி தந்தாள். 'பெரியவர் கோதண்டபாணி யின் மகள் வாணி. நம்மால் இந்தப் பெண்ணுக்கு வீண் சிரமம். தொண்டுதான் மனித மனங்களிலே அன்பையும் பாசத்தையும் வளரச் செய்கின்றது.'

"இட்லி ஆறிடப் போகுது. அம்மா சாப்பிடச் சொன்னுங்க."

"ஆமாம், ஞானசீலன். சாப்பிடுங்கள். எனக்கும் பசி தாளலே," என்று பேச்சைத் துண்டித்தார் கோதண்டபாணி. இட்டிலித் துண்டங்களைத் தூண்டில் போட்டார்.

"ஆகட்டும். இதோ, சாப்பிடுகிறேன். இட்டிலி சாப்பிடு வதற்கு அம்மாதான் நினைவூட்ட வேண்டுமென்பதில்லை. நீங்களே ஞாபகப்படுத்தினுல்கூட, நான் அதன் பிரகாரம் நடக்க வேண்டியவன்தானே?"

ஞானசீலன் பொடி போடாமலே, 'பொடி' வைத்து எழுதப் பழகியவர் என்பது ஜகப்பிரசித்தம்- அதேபோல, பேசும் பாங்கும் கைவரப் பெற்றவர்—அதாவது, பேசும் வக்கணை வாய்வரப் பெற்றவர்! சார்பிட்டுப் பேசியவளின் திசைபார்த் துப் பேசினுர் சிந்தனையாளர்.

வாணியின் அழகுக் கவர்ச்சியில் பங்குபோடும் உரிமை பூண்டவற்றில் ஆணிமுத்துப் பற்களுக்குத்தான் கூடுதலான சொந்தம்—பாத்தியதை. அவை இப்போது முன்னைக் காட்டிலும் ஒளிமிகுந்து திகழ்ந்தன. இதழ்களின் எழில் திறட்சி விழிகளின் கரையில் ஒதுக்கியது. சரிந்து விழுந்த தாவணியை ஒதுக்கிவிட்டபடி, ஒதுங்கி நின்ருள்.

இட்டிலிகளைத் தாங்கிய எவர்சில்வர் தட்டு காலியானது.

இட்டிலிகளைத் தாங்கிய சாண்வயிறு நிரம்பியது.

"தம்பிக்கு இது; ஐயாவுக்கு இது!" என்று பிரிவினைபடுத் திக் காட்டியபடி இரண்டு கோப்பைகள் நிறைய காப்பி கொணர்ந்தாள் முதியவள்.

ஞானசீலனுக்கு ஏப்பம் பறிந்தது.

"தம்பி, உனக்கு எங்கையினுலே இப்பிடிக் காப்பி தருவேன்னு நேத்து ராத்திரி நான் நினைக்கவேயில்லையப்பா," என்ருள் கோசலை. பின்னர் மீண்டும் தொடர்ந்தாள்: "ஐயா இருக்கிறப்பவே சொல்லிப்பிடுறேன். அவங்களுக்கும் அத்துபடியான சேதிதான் இது. தம்பி, நான் இன்னம் ரொம்ப நாளைக்கு இந்த மண்ணுக்குப் பாரமா இருக்கப்போறதில்லே. என்னுேட ஆவி நிம்மதியாப் பிரியவேணும்னு உனக்குத் துளியத்தனை யாச்சும் கவலை இருந்தாக்க, நான் உசிரோட இருக்கிறப்பவே, உன்னை மாலையும் கழுத்துமாப் பாக்கிற பாக்கியத்தை எனக்குத் தந்துப்பிடு, போன வருஷம் எனக்கு உடம்புக்கு வந்திச்சு; உயிர் தப்பிச்சுது; ஆனுல். இப்ப அப்படி இல்லே; இருக்கவும் வாய்க்காது. எம்மனசிலே இருந்த பேருங்களையெல்லாம் போன வருஷமே உனக்கு நான் சொல்லிப்பிட்டேன். இந்தப்பன்னிரெண்டு மாசத்துக்குள்ளே புதுசா ஒரு பேரையும் உன் கவனத்துக்குக் கொண்டு வரவேணும்," என்று நறுக்குத்தறித்த மாதிரி பேச்சைத் தொடங்கி நிறுத்திய கோசலை அம்மாள், ஓர் அரைக்கணப் பொழுது கழித்ததும், "அம்மாடி வாணி!" என்று கூப்பிட்டாள். வாணியின் முகம் கண்டதும், "ஒரு லோட்டா தண்ணீர் வேணும். சுடு தண்ணி. தம்பி, ஒனக்குப் பச்சைத் தண்ணி கொண்டாரச் சொல்லட்டுமா?...வாணிதான் நன்னாரிவேர் போட்டு பதப்படுத்தி வைச்சிருக்குது," என்று நாசூக்காகப் பேச்சை எங்கெல்லாமோ கொண்டு சென்ருள் தாயார்.

தண்ணீர் வந்தது.

ஒரு மடக்கு தீர்ந்தது.

பஸ் ஸ்டாண்டு—மானுங்கோரை டவுன் பஸ் காதைத் துளைத்துக்கொண்டு சென்றது.

"அந்த ஒரு பெயரைச் சொல்லிப்பிடட்டுமா?"

"ஊம்!"

"வாணிங்கிற இந்தப் பேர்தான் புதுசு. என்னமோ தம்பி உன்னை மாலையும் கழுத்துமாப் பார்க்கிறதுக்குக் கொடுத்து வச்சவளாக ஆக்கிப்பிடு, போதும்." என்று மீண்டும் ஒரு முறை நினைவூட்டினாள் அவள். வாழ்வின் கதையை முடித்துக் கொள்ளப் போகிறோமே என்கிற வேதனையின் நச்சரிப்பு நச்சரவமாகக் கொத்திக் கொண்டிருந்தது.

நிலைப்படி மறைவில் நின்ற வாணி ஓரக்கண்ணால் கூடத்துக்கு தன் கள்ள விழிப் பார்வையைத் திசை திருப்பினமாதிரி, ஞானசீலனுடைய நேர்முகப் பார்வையும் அந்த அழகுப் பதுமையைச் சுற்றி வளைத்துக்கொண்டு ஒரு வெள்ளைக்கோடு கிழித்தது. சம்பூர்ண ராமாயணத்திலே வருகிற இட்சுமணன் கோடல்லவே அது?...

ஞானசீலனின் விழிகள் மயங்கின. வாணியின் கண்கள் அவ்வாறு மயங்க வைத்தன என்பது எண்பது சதவிகிதம் உண்மைதான். அத்துடன் இன்னொரு அசல் காரணமும் ஒளிந்திருந்தது. அது இதுவே: வாணி பூமாலையும் கையுமாகக் காட்சி தந்தாள்.

ஞானசீலனின் கற்பனைக் குதிரை கால்கள் பின்னலிட விழிபிதுங்கி நின்றது. 'எதற்கு அந்தப் பூமாலை?'

"இரு தம்பி, வாரேன்," என்று சொல்லி உள்ளே சென்றாள் கோசலை.

கோதண்டபாணி எழுந்து வெளிப்பகுதிக்கு விரைந்தார்.

ஞானசீலன் துணிவு கொண்ட இயல்பினர்தான். "வாணி," என்று முதல் முறையாகப் பேர் சொல்லி ஒரு பெண்ணை—முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு வாலைக்குமரியை அழைத்தார்.

வாணி வந்தாள். வந்தவள், தன் கையிலுள்ள மாலையை அவர் கழுத்தில் போட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பாளோ என்று சந்தேகப்படும் படியாக, அவ்வளவு விளக்கமாக மாலையை ஏந்தியிருந்தாள் அவள். "கூப்பிட்டீங்களா?"

அவர் 'ஊம்' கொட்டுவதற்கும், கோசலை அம்மாள் அந்தக் குறிப்புச் சொல்லைச் செவிமடுத்து வந்து நிற்பதற்கும் கணக்குச் சரியாக இருந்தது.

கோசலை அம்மாள் வாணியின் கைமாலையை நோக்கி விட்டு, "என்னம்மா இது?" என்று கேட்டாள்.

"உங்க மகனை மாலையும் கழுத்துமாப் பார்க்க வேணும்னு ஆசைப்பட்டீங்களே, அதுக்காகத்தான் இந்த மாலையை வாங்கியாந்தேன்!..." என்று பட்டவர்த்தனமாகப் பேசி விட்டாள் வாணி.

தாயும் தனயனும் சேர்த்து கூட்டு மொத்தமாகச் சிரித்தார்கள். அவுட்டுச் சிரிப்பு!

"ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணுதான் இந்த வாணி இல்லையா, அம்மா?"

"அது கெட்டிக்காரப் பொண்ணாய் இருக்கக் கொண்டு தானே எம் மனசையும் கெட்டியமாப் பிடிச்சுகிட்டு, இப்ப, உன்னோட எஃகு மனசையும் கைப்பத்திறதுக்கு பிளான் கட்டியிருக்குது!...ஏம்மா வாணி, நான் சொல்றது நிஜம்தானே?..."

ஆனால், அங்கு—அப்பொழுது அந்த வாணி நின்றால் தானே?

விநாடிக்கு எப்போதுமே ஆயுள் கம்மி.

மருந்துக் குப்பியுடன் வந்தாள் வாணி.

கோசலை அம்மாளுக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. படுக்கையில் தஞ்சம் அடைந்தாள்.

நிச்சலனமான உள்ளத்துடன் தனியறையில் நுழைந்த ஞானசீலனிடம் ஒட்டப்பட்டிருந்த ஓர் உறையை நீட்டிச் சென்றாள் வாணி. உறைப் பரப்பில் எந்த விலாசமும் இல்லை!

# 4 "என் பெயர் தவசீலி!"

வயதுகள்தாம் மனிதனின் உயிருக்கு எல்லைக் காவல் புரிகின்றன.

அனுபவங்கள்தாம் மனிதனின் உள்ளத்துக்குப் பாது காவல் புரிகின்றன.

இந்தச் சிந்தனை ஞானசீலனின் இலக்கியக் கற்பனை நெஞ் சத்தினின்றும் புறப்பட்ட போழ்தில், வெவ்வேறு புள்ளிகளைச் சூழ்ந்து உருவான வெவ்வேறு உருவங்கள் புறப்பட்டன. ஒன்று: கோசலை அம்மாள்; இரண்டு: வாணி: மூன்று:...?

'வினாக்குறியை வேலியெனக்கொண்டுள்ள அந்த மூன்றும் உருவம் யாருடையது?...கதையை வெயிடப் கோரிக் கடிதம் விடுத்தாளே, அந்தப் பெண்ணா?...இல்லை?...இல்லையென்றால் வேறு என்ன?...அம்மா சென்ற வருஷம் கேட்டாற்போல நான் யாரையாவது காதலிக்கிறேனா? காதலித்திருக்கிறேனா?... மனிதனாகப் பிறந்த பாவத்துக்கு யாரையாவது ஒரு தடவை காலித்துத்தான் தீரவேண்டுமா? காதலித்தால் மட்டும் போதுமா? காதல் எனும் ஒன்று இளமைப் பருவத்துக்கு ஓர் இலட்சியக் கோட்டையாக அமையக் கூடும். ஆனால் அந்தச் சிற்றின்ப நுண்ணுணர்வுதான் வாழ்க்கை எனும் அரமனைக் குக் கோட்டை வாசல் எனக்கொள்ளலாமா? கூடாது, கூடவே கூடாது!...காதல் எனும் அழியும் உணர்வின் ஆசையைவிட, அழியாத புகழ்வழி ஏறி நின்று ஒளி காட்டும் அந்த உண்மை வடிவமான பேரின்பப் பேருண்மையல்லவா முக்கியமான பண்பாகும்!...

'இப்படிப்பட்ட உயிர் நிலைக்குறிப்புகளை நான் எண்ணிக் கணக்கிட்டுப் பார்ப்பது நல்லதா? என்வரை நல்லது தானா?...நல்லது தான். பேஷாக நல்லதுதான்! 'வாழ்

நாளிலே ஒரு தரமேனும் காதலித்துப் பழக்கப்படாதவன் பைத்தியக்காரன்' என்று யாரோ ஒருவன் சொன்னதற்கும், 'காதலிக்க நேரம் இல்லை' என்பதாக வேறு எவனோ ஒருவன் உரைத்ததற்கும் இடைப்பட்ட தொலைவிலே நின்று—நிதானித்து—நிர்ணயப்படுத்திச் சிந்தித்துப் பார்க்கும் பாக்கியம் பெற்ற நான், காதலை ஒரு பொருட்டாக ஏன் கருதவேண்டும்?...காதலாவது, மண்ணாங்கட்டியாவது? மண் புழுதியில் கண் திறந்து, சாம்பல் புழுதியில் கண்மூடும் இவ்வுலக வாழ்க்கையில் காதலுக்கு முக்கியத்வம் தர எண்ணுவது எவ்வளவு மதியீனம்? வாழ்க்கையை உணர்ந்து, மனத்தைப் படித்து, அதன் மூலம் உலகத்தைப் புரிந்துகொள்ளப் பிறந்தவனே மனிதன்! இதுதான் என் கருத்து. பேச முடிந்தவன் மனிதனாக இருக்கலாம். ஆனால் செய்ய முடிந்தவனே மனிதனாக இருப்பான்! இதுவேதான் வாழ்வின் நியமம்!...'

நெடிய பொழுதாகச் சிந்தித்தவர் போல, மனம் வலிக்க வீற்றிருந்தார் அவர். அடுத்த மாதம் எழுதவேண்டிய தொடர் கதைப் பகுதிக்கான குறிப்பு நோட்டைப் பிரித்து வைத்துக் கொண்டார். சிகரெட் பெட்டி, டிரங்குப் பெட்டியின் அடியில் தூங்கியதை எண்ணிய சமயம் அவருடைய சிந்தனை உணர்வு, பிடரியில் அடிபட்ட செம்மறிபோல, சிலிர்த்துக்கொண்டது.

'வாணி எங்கே?' என்று அவர் இதயம் மழலையாகத் தவழ்ந்து, வினயம் ஏதுமின்றி, வெள்ளையாகக் கேட்டுவைக்கவே, அதை ஆதாரமாகக்கொண்டு, அவர் நயனங்கள் அந்தக் குமரியைத் தேடின. அவளைக் காணோம்! 'வாணி எங்கே? நேற்றுச் சாயந்திரம் வீட்டுக்குப் போனவள், இரவு வரவேண்டாம்; காலை கழியப் போகிறது. இன்னமும் முகத்தைக்கூட காட்டவில்லையே? எங்கே?'

வாணியைப் பற்றி நினைத்தவருக்கு, அவள் உதிர்த்த வேடிக்கைப் பேச்சும், அந்த வேடிக்கைப் பேச்சிற்கு உத்தாரணம் தந்த அந்தப் பூமாலையும் சிரிப்பையூட்டின. விழுந்து விழுந்து சிரித்தார். நல்லவேளை, பல் ஏதும் உடையவில்லை;

காயம் ஏதும் படவில்லை. 'காயம்தான் பொய் என்கிறார்களே!...'

மாடியில் அமர்ந்திருந்த ஞானசீலன், கீழ்த்தளத்தினின்றும் படி தாண்டி வந்த குரல்கேட்டுக் கீழே இறங்கி வந்த சமயம் அங்கே முதிர்ந்துபழுத்தவர் ஒருவர் 'பெரியவர்' என்ற பட்டப் பெயர் துலங்க, கூடத்தில் குந்தியிருக்கக் கண்டார். வணக்கத்திற்கு உகந்தவரை வணங்கினார் ஞானசீலன். ஒரு சமயம், சாது அச்சுக்கூடத்தில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களைச் சந்தித்ததையும், அவருடன் கூட இருந்த டாக்டர் மு. வ. அவர்களைப் பழக்கப்படுத்திக் கொண்டதையும் அவர் இப்பொழுது நினைவு கூர்ந்தார். ஒன்றின் நினைவில் ஒன்பது நினைவுகள் கிளைவிட்டுப் படர்வது நியாயமே!

"உட்காருங்கள். உங்களை நான் ஏற்கனவே அறிந்தவன் என்ற முறையில்தான் இப்பொழுது நான் உங்களைப் பார்த்துப் போக வந்திருக்கிறேன்!"

"சந்தோஷம், ஐயா!"

பெரியவர் தம் பெயர் "மாசிலாமணி," என்றார், மாசிலாமணி அமர்ந்திருந்த பெஞ்சியில் ஞானசீலனும் உட்கார்ந்தார். 'எழுத்தாளனின் முகத்தைப் பிறர் நேருக்குநேரே அறியாமற் போனாலும், அவனது அகத்தை அறிந்துகொண்டு விடுகிறார்கள் உலகத்தவர்கள். இந்த அளவில் எழுத்தாளன் என்ற கௌரவம் புகழ்ச்சிக் குரியதே யன்றோ!...இதை நிரூபிப்பதற்கு இப்போது வந்திருக்கக்கூடிய இந்த மூத்தோர் விஜயமே போதுமே!'

வந்தாள் கோசலை அம்மாள். "தம்பி, இவங்க நமக்குத் தூரத்துச் சொந்தம்; சொந்த ஊர் திருவாரூர். நான் ஒரு நாள் உன்னிடம் சொல்லியிருக்கேன் பார், கமலாட்சி என்று. அது இவங்க பெண்தானுக்கும்!" என்று முன்னுரை வைத்தாள்.

ஒப்புக்குச் சிரிப்பை வெளிக்காட்டினார் ஞானசீலன்.

"தம்பி, எனக்கோ வய்சாகிடுச்சு. எனக்கு கமலாட்சிதான் ஊர், உலகம் எல்லாம். என் சொத்து பூராவுக்கும் அவளே வாரிசு. உங்க ஜாதகத்தையும் கமலாட்சி ஜாதகத்தையும் பார்த்ததில், கனகச்சிதமாக பெட்டியும் பேழையுமாப் பொருந்தியிருக்குது. உங்க சம்மதத்தை அறிஞ்சுக்கிட்டுப் போகத்தான் வந்தேன்," என்றார்.

"நல்லது," என்றார் ஞானசீலன்.

கோசலை அம்மாள் காப்பி பலகாரம் கொண்டு வந்தாள். அவள் திரும்புகாலில், மகளை அழைத்தாள். "இந்தாப்பாரு, தம்பி, இந்தப் போட்டோப் படத்தை!" என்று சொல்லி, ஒரு நிழற்படத்தை நீட்டினாள். முன்பிறப்பின் நிழல் தொடர்ந்து வருவதைப் போன்றதொரு ஞாபகம் ஏற்பட்டது அவருக்கு. படத்தை மீண்டும் மீண்டும் பார்த்தார். தொடுத்த நயனங்களை அவரால் எடுக்க முடியவில்லை. அழகு என்றால் அப்படியொரு விசித்திரமான அழகு. அழகில் கவர்ச்சியும், கவர்ச்சியில் அழகும் சமபங்காகச் சொட்டின. 'இதுவரை நூற்றுக் கணக்கான பெண்களின் அழகை வர்ணித்திருக்கிறேன் நான். ஆனால், இதுபோல ஓர் அழகியை நான் ஏன் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அப்படியென்றால், என்னைவிட—என் கற்பனாசக்தியைக் காட்டிலும், அந்தப் படைப்புத் தந்தையின் கலைஞானம் உயர்ந்ததாகிவிட்டதா? அப்படி யென்றால், படைப்புத் தொழிலில் நான் தோற்றுவிட்டேன் என்று அர்த்தமா?...' உள்ளத்தெழுந்த தாழ்வுணர்ச்சியில் வெடித்த வேதனை 'வல்வினை'யென வடிவெடுத்து, புயலாய்ச் சீறியது.

"தம்பி, நான் ராத்திரி உங்கிட்டே சொன்ன பேச்சை நினைப்பிலே எழுதி வச்சுக்கப்பா. விடிகாலையிலேருந்து எனக்கு நல்ல சுரணை வரலே. இப்படியே ரொம்ப நாள் நீடிக்கும்னு எனக்குத் தோணலே. என் ஆசையை நீ புரிஞ்சுக்கிட்டே உன் மனசைப் புரிஞ்சுக்கிடத்தான், நாலைஞ்சு பொண்ணுக படங்களையும் பேர்களையும் உனக்குக் காட்டிகிட்டிருக்கேன். பெரியவருக்கு என்ன பதில் சொல்றது?" என்று துருவிப் பேசினாள் அன்னை.

"மத்தியானம் சாப்பிட்டுப் போறதுக்குள்ளே ஒரு முடிவு செஞ்சுக்கிடலாம்," என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு, மாடிக்கு விரைந்தார் ஞானசீலன். பட்டணத்தில் இருக்கும் பொழுது, வந்த அந்தக் கதாசிரியையின் கடிதத்தை எடுத்து வைத்து மறுமுறையும் படிக்கத் துடித்தார். அதே சடுதியில், வாணி கொடுத்த முகவரியில்லாத கடிதத்தையும் திரும்பப் படிக்க வேண்டும் போல உணரலானுர்.

இதற்கு ஊடே, ஞானசீலனைத் தேடிக்கொண்டு இலக்கிய ரசிகர்கள் கூட்டமொன்று முட்டியடித்துக்கொண்டு வந்து விட்டது. எல்லோருக்கும் காப்பி விநியோகம் அமர்க்களப் பட்டது. இலக்கிய சர்ச்சை காரசாரமாக நடந்தது.

முப்பது நிமிஷங்களை உண்ட மயக்கத்தில் காலம் எனும் தெய்வம் ஊமை நடை பயின்றது!

அடுத்த முப்பத்தைந்தாவது நிமிஷம் அங்கே ஓர் அதிசயம் பாய்விரித்து, அவரைக் குந்தச் செய்தது. புதிய பெண் ஒருத்தி வந்து, "என் பேர் தவசீலி; நீங்கள்தான் ஞானசீலன். 'தமிழரசி' பத்திரிகையின் உதவி ஆசிரியரென்று கருதுகிறேன். வணக்கம்," என்று கைகூப்பி நின்ருள்!

## 5. பெண்மையின் கண்ணீர் அது

ஞானசீலனுக்கு ஒரு பழக்கம் உண்டு. கதைகள் எழுது வதற்கு உண்டான மன உத்வேகம் எழுச்சி கொள்ளும் நேரத் தில் அவருடைய பேனு தன் போக்கில் ஓடிக்கொண்டே இருக் கும். ஓடிக்கொண்டிருக்கும் காலத்தின் கைப்பிடியில் சிக்கா மல், கைப்பிடிப்பில் இழையும் பேனுவின் சுழிப்பில் சிக்கி, சிக்கல் ஏதுமின்றி எழுத்துக்களை உருவாக்கும்பொழுது, அங்கங்கே விழுந்து சிதறியிருக்கும் அழகான சிந்தனை நயங்

களையும், நெஞ்சை ஈர்க்கும் அற்புதமான முனைத்திருப்பங் களையும் மீண்டும் மனத்திற்குள்ளாக சன்னக்குரல் எடுத்துப் படித்து ரசிக்கும் சமயத்தில், அவரையும் அறியாத வகையில், அவரது மனம் ஆனந்தக் கடலாடுவது வழக்கம். அப்படிப் பட்டதொரு தனித்த மனப்பாங்கு எப்போதாவதுதான் அவருள் உருக்கொள்ளும். அவ்விதமான மனச் சந்துஷ்டி, அன்று அலுவலகத்திற்கு அவர் பெயருக்கு எழுதிய, முன்பின் அறிமுகமற்ற அந்தக் கதாசிரியையின் கடிதத்தைப் படித்த போது முதல் முறையாக ஏற்பட்டது. அதே வகைப்பட்ட உள்ளத்துள்ளல் இப்போது அடுத்தபடியாகஅவர் நெஞ்சத்தில் முகிழ்த்தெழுந்தது.

"என் பெயர் தவசீலி!" என்று பான்மையுடன் பாங்கு மொழி உதிர்த்த பாவனையைப் புகழ்வதா?

"நீங்கள்தான் ஞானசீலன்; 'தமிழரசி' பத்திரிகையின் உதவி ஆசிரியரென்று கருதுகிறேன்," என்பதாகத் துணிவு பதித்து, புதுமனையில் பஞ்சுப்பாதம் பதித்துப் பேசிய மோகன மான லாகவத்தைப் போற்றுவதா?

"வணக்கம்," என்று 'அஞ்சலி முத்திரை' காட்டி, அஞ்சனமணி வண்ணக் கண்களிலே அஞ்சாத பாவத்தை எழுதிக்காட்டி, பண்புடன் நகை சிந்தினாளே, அந்தக் கோலத்தின் கோலாகலமான தொடர்பைப் பாராட்டுவதா?

மூன்று பிரிவுக் கேள்விகளுக்கும் உரைகல்லாக நிலவி நின்ற தவசீலியின் அழகு, அன்பு, துணிவு என்கிற மூன்று வகைக் குணநலக் கோணங்களை மாற்றுரைத்துப் பார்க்க அவருக்குப் பொழுது காணவில்லை. நேருக்கு நேர் பார்த்த நிதர்சன வடிவம் ஏதோ ஒன்றை நினைவூட்ட, அந் நினைவு, பட்டணத்தில் பறந்து வந்த கடிதத்தைத் தொட்டு நின்றது. உள்ளந்தொட்ட மூடங்கலல்லவா அது? முடங்கிக் கிடந்த இனிய நல்லுணர்வின் தேக்கத்தலமாக அமைந்த அக்கடிதம், அவருடைய நெஞ்சத்தில் மீளவும் ஒருமுறை பிரதிபலித்தது. மீள வாய்க்காத அன்புச் சுழல் தன்னை ஆட்கொண்டுவிட்டாற்

போல அவர் துடித்தார்; தத்தளித்தார்; கடைசியில் அகமகிழ்வும் கொண்டார்.

'மனித மனத்தை ஆசை எனும் பற்று பற்றினால், அப்புறம், புற்று நோய்க்கும் இந்த மனத்துக்கும் ரவைகூட வேறுபாடு இருக்க வாய்க்காது!' எப்பொழுதோ விளையாட்டாகச் சிந்தித்த இக்கூற்று, இப்பொழுது கூற்றுவன் வடிவில் வினையாகிச் சிரித்தது.

"ஸார், உட்காரலாமா?"

கேட்ட குரலில், விநயத்தைக் காட்டிலும் பணிவு ஏறியிருந்தது.

கதை எழுதுபவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்பது மெய்தான்.

ஞானசீலனுக்கு வையகத்தின் ஞாபகம் பிடிகயிறானது. தலையை ஏறிட்டுப் பார்த்தார். அதற்குள் அவருக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. உடம்பில் ஒரு சிலிர்ப்பு; நரம்புகளில் ஒரு சூடு; நாணத்தில் ஒரு மோகம். "உட்காருங்கள்... உட்காருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே வந்த அவர், ஏனோ எழுந்து நின்று, அவள் உட்காருவதைக் கண்ணாரக் கண்டு களித்தார்.

பெரிய இடத்துப்பிள்ளைக்குச் சின்ன விஷயத்துக்குக்கூட 'சுள்' என்று கோபம் வரும். அது போல, பத்து-பத்தரை மணிக்குள்ளாகவே செஞ்சுடர்ச் செல்வனுக்குக் கோபம் வந்துவிட்டது. கோடை மாறவில்லையல்லவா?

"நீங்கள் நிற்கிறீர்களே?"

"அதற்காக, நீங்களும் எழுந்து நின்றுவிடாதீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே, அவரும் உட்கார்ந்தார்.

அப்பொழுது கோசலை அம்மாள் அங்கு வந்தாள். வந்தவள், வந்திருந்த புதுப்பெண்ணைக் கண்டு முகம் சுழித்தாள். 'பெண்ணைப் பெற்றவர், மாப்பிள்ளையைப்

பார்த்து முடிவு கேட்கிறதுக்காக உள்ளே தவம் செஞ்சுக்கிட்டு இருக்கார்; இப்போது, இந்தப் பெண் பூஜைவேளைக் கரடியாக எங்கே வந்திருக்குது? ஆமா, யார் இந்தப் பெண்?...'

அம்மாவின் முகக்குறியீட்டு விளக்கங்களைத் துல்லியமாகப் படித்துக் கொண்டார் ஞானசீலன். வந்தவளுக்கு மரியாதை செய்ய வேண்டாமா? காப்பி கொண்டு வரும்படி வேண்டினார். காப்பி வந்ததும், கோசலை போய்விட்டாள். போகும்பொழுது, "இவங்க பெரிய கதாசிரியை. எங்க பத்திரிகையிலே தொடர் கதை...அதாம்மா ரொம்ப வருஷம் வருற பெரிய கதை எழுதப் போறாங்க...அதுக்காகத்தான் வந்திருக்காங்க. தேடிப் போன மூலிகை காலிலே சிக்கினது போலத்தான் அம்மா இவங்க வந்திருக்கிறது. எங்க முதலாளி இவங்க கதையைப் போடுறதுக்கு எவ்வளவு தவம் இருக்கிறார்ன்னு உனக்கு எப்படி அம்மா புரியும்?..." என்று 'பூசிமெழுகி'ப் பேசி 'பாவலா' காட்டி அன்னையை உள்ளே அனுப்பிய மைந்தனின் போக்கை நம்பினாள் அவள்.

நம்பிக்கை என்பது சீமை உரம்போல;

மனநோய்க்கு நம்பிக்கையும், பயிரின் சீக்குக்கு உரமும் கைகண்ட பலன் இல்லையா?

தவசீலி சிரித்தாள்.

ஞானசீலன் சிலிர்த்தார்.

"ஸார், என் கதையைப் போடப் போகிறீர்களா, ஸார்?" என்று கள்ளவிழிப் பார்வை விலக்கி, கன்னம் வழிச் சிரிப்பு உதிர்த்துக் கேள்வி கேட்டாள் அவள்.

"ஆமாம், ஆமாம்!"

"எங்கே ஸார் என் கதையைப் போடப் போறீங்க?... குப்பைக் கூடையிலா?..." என்று பட்டு நறுக்கின மாதிரி கேட்டுவிட்டாள் அவள். இப்பொழுது அவளது சிந்தூரக் கன்னங்களிலே நகைப்பு இல்லை; மொழி பேசும் விழிகளிலே குறும்பு இல்லை; நாணம் ஊறிய உதடுகளிலே நமட்டுச்சிரிப்பு

இல்லை. இவை யெல்லாம் இருந்த இடத்தில் வேதனை இருந்தது; வெய்துயிர்ப்பு இருந்தது; ஆற்றுமை இருந்தது

பெண்மையின் கண்ணீர் எழுத்தாளரைச் சுண்டி இழுத்தது.

"தவசீலி, உங்களை எனக்கு நிரம்பவும் பிடித்து விட்டது!''

"அப்படியா? நிஜமாவா ஸார்? ஆஹா, நான் பாக்கிய வதிதான்! என்னைப்போல அதிர்ஷ்டம் கெட்டவள் இந்த உலகத்திலேயே யாருமில்லை என்றிருந்தேன், அது தப்புங்க. என்னைப்போல அதிர்ஷ்டம் உள்ளவ இப்ப யாருமே இருக்க முடியாதுங்க. அப்படியானு, என் கதைகள் உங்க மனசுக்குப் பிடிச்சிருக்குதா? உடனேயே எனக்கு வேலை கொடுப்பீங்க, இல்லையா?" என்று ஆர்வம் கொப்புளித்த நெஞ்சை வெளிக் காட்டிப் பேசினுள். மேலாக்குச் சேலைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டே, நெற்றியில் புரண்ட கார்குழலை ஒதுக்கி விட்டாள்.

ஞானசீலனின் விழிகள் அசந்துபோய் விட்டன. அரைக் கணச் சிந்தனைத் தவிப்பு மாறியது. "தவசீலி, நீங்க என்ன வெல்லாமோ சொல்லுறீங்களே? என்ன சமாச்சாரம்? புரியும்படி சொன்னுல்தானே எனக்கும் புரியும்?'' என்ருர்.

அவளுக்குத் தேள் கொட்டினுற் போலிருந்தது. "என்ன ஆசிரியர் ஸார் இப்படிக் கேட்கிறீங்க? அப்படியானு, என் னுடைய தபால் ஒன்று சென்னைக்கு உங்கள் பத்திரிகை ஆபீசுக்கு வரலையா?..." என்று வினவினுள்.

"இல்லையே!'' என்று முகத்தைக் கவிழ்த்தவாறு பதிலி றுத்தார் துணை ஆசிரியர். "என்ன சேதி!"

"சேதி இதுதான்!" என்று கூறி முடித்துவிட்டு, பிறகு, கையுடன் கொண்டு வந்திருந்த கடிதத்தை நீட்டினுள்.

மேலெழுந்த வாரியாகப் படிக்காமல், உள்ளழுந்திப் பார்த்தார் அவர். "என்னுலானதைச் செய்கிறேன். நான் பட்டணம் போனகையோடு உங்களுக்கு விவரமாக லெட்டர் எழுதுகிறேன்," என்ருர்.

"சரி. நான் போய் வருகிறேன்."

அவள் சொல்லி வாய் மூடவில்லை.

ஆலயமணி ஒலித்தது.

"இருங்கள்; சாப்பிட்டு விட்டுப் போகலாம். ஒரு மணிக்கு திருச்சிக்கு வண்டி இருக்கு!"

"நன்றிங்க ஸார். அங்கே அப்பா என்னைக் காணுமல் தவிச்சுக் கிட்டிருப்பாங்க. வணக்கம். நான் போயிட்டு வாரேனுங்க," என்று கைகுவித்து விடைபெற்று வெளியேறப் போன தருணத்தில், "உங்களை உங்க அம்மா சாப்பிடக் கூப்பிடுறுங்க," என்று ஒரு பெண் குரல் கேட்கவே, ஞான சீலன் திரும்பினுர்.

வாணி நின்றுள்!

மாறிமாறி, மாற்றி மாற்றிப் பார்த்துப் பிரிந்த பாவையர் இருவரையும் கண்வீசிப் பார்த்தார் அவர். சிரிப்பு வெடித்தது!

வெடித்த சிரிப்புடன், தான் அரைகுறையாக விட்டிருந்த காகிதங்களை எடுத்துவைத்துக் கொண்டு பேனுவை எடுத்தார். போதை கொண்டவரென, எழுத்துக்களை அள்ளி அள்ளி வீசினுர்.

'...அந்தப் பெண் என்ன பதில் சொல்லப் போகிறுளோ வென்று காத்திருந்தான் அந்த இளைஞன். அதற்குள் அவளுக்கு 'டெலிபோன் கால்' ஒன்று வரவே, அவசரமாக விரைந்து சென்று பேசினுள். 'ஆமாங்க அப்பா! நான் இவரைத்தான் லவ் பண்ணுறேன். என் முடிவு இதுதானுங்க!" என்றுள்!...'

கதைக்கு நல்ல முடிவு கிட்டிவிட்டதில் ஞானசீலனுக்குப் பரமதிருப்தி கிட்டியது!...

## 6. "நீ என்னைக் காதலிக்கிறாயா?..."

ராஜோபசாரம் நடந்து கொண்டிருந்தது.

ஒற்றைக்காலில் நின்று எல்லாவற்றையும் கவனித்தாள் கோசலை அம்மாள்.

பெரிய மனிதர், அந்நியர் வீட்டில் சாப்பிடுகிறோம் என்பதை அடிக்கொரு முறை நினைவுபடுத்திக் காட்டினார். ஞானசீலன் நல்லபதில் சொல்லிவிட்டால் போதும் என்ற தயவுணர்ச்சியில் அவர் மனம் தவித்தது.

ஞானசீலன் வெகு உரிமையுடன் அவரைக் கவனித்தார். சர்க்கரைப்பண்டம் அதிகம் புசிக்கக் கூடாதென்று சொல்லியும கேட்காமல், அவர் இலையில் சேமியா பாயசத்தை எவர் ஸில்வர் கரண்டியால் ஊற்றச் செய்தார்.

வாணிக்கு வேர்வை கொட்டியது.

சாப்பாடு முடிந்ததும், வெற்றிலைத் தட்டை எடுத்து வந்து வைத்துச் சென்றாள் வாணி. இந்தப் பெண்ணை ஜாடைமாடையாகப் பார்த்த விருந்தினர், "ஆமா, இது யாரு?" என்று கேட்க, "எங்களுக்கு வேண்டப்பட்டவுங்க," என்ற பதிலை வீட்டுத் தலைவியிடமிருந்து வாங்கிக் கொண்டு, ஞானசீலனின் முகத்தையே ஓரக்கண்ணால் நோக்கியவராக வீற்றிருந்தார்.

ஞானசீலனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவருக்கு தன்னுடைய வேர்வை நெற்றியைத் துடைப்பதற்கே சரியாக இருந்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல, இருக்கையைப் பிரிந்து எழுந்து, கூடத்திற்குள் நுழைந்தார். அவரைத் தொடர்ந்தாள் அவர் தாய். அவளிடம் அவர் சொன்னார்: "அம்மா, எனக்குத் திடுதிப்பின்னு எந்த ஒரு முடி

வையும் சொல்ல முடியாது. என் ஒருவனைச் சுற்றிலும் இப்பைய நிலையிலே ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் போட்டி போடுறுங்க. இந்தப் போட்டியை அன்புப் போட்டி யாகவே மதிச்சு, அதுக்கு ஒரு வழி செய்யப் போறேன். இதைக் காதல் போட்டியாக்க எனக்கு மனசு ஒப்பமாட்டாது அம்மா. ஆனதாலே, அந்தப் பெரியவரோட விலாசத்தை எழுதி வாங்கிக்கங்க. இன்னும் பத்துநாளிலே தகவல் எழுதுறதாச் சொல்லி அனுப்பிடுங்க,'' என்றார்.

அவ்வாறே அவளும் சொன்னாள்.

பெரியவர் மாசிலாமணி மாசில்லாத மணிச் சிரிப்பைக் கக்கிவிட்டு இருவரிடமும் விடைபெற்றார்.

வாணி இப்பொழுது அமைதியாகப் பெருமூச்சு விடலானாள்.

மண்டை ஓட்டில் நோவு கண்டது. ஆகவே படுக்கையில் சாய்ந்து சிறு பொழுதுவரை ஓய்வு கொள்ளவேண்டுமென்று தோன்றியது. ஆகவே, படுத்துத் தூங்க பிரயத்தனம் செய்தார் ஞானசீலன். அதற்குள் கைவளை குலுங்க, மென்னகை துளும்ப, எழில்விழி சிந்தூரம் சிந்த வந்தாள் வாணி. வந்தவள், நிற்கவில்லை; நிலைக்கவில்லை. எடுத்த எடுப்பிலேயே படபடப்பு குறையாத குரல் எடுத்து, ''ஸார், நான் நேற்று தந்துவிட்டுப்போன லெட்டருக்குப் பதில் தயாரிச்சுப்பிட்டீங்களா? என் கிட்ட இப்பவே 'சப்மிட்' செஞ்சிடுங்களேன்!'' என்றாள்.

வியப்பு விரிந்த நேத்திர நோக்கை, வினயம் புரிந்த பெண்ணின் திசைக்குத் திருப்பிய ஞானசீலன் ஓர் அரைக்கணம் இன்பத் தவிப்பில் சுழன்றார். பிறகு, ஆசுவாசப் பெருமூச்சுடன் பதில் கொடுத்தனுப்ப எண்ணமிட்டு, அவதியுடன் காகிதத்தை எடுத்து, அவசரத்துடன் பேனாவைத் தூக்கிக்கொண்டு எழுதுவதற்கு உட்காரப் போனார். அப்பொழுது சென்னையிலிருந்து உடனே புறப்பட்டு வரும்படி 'எக்ஸ்பிரஸ் லெட்டர்' வந்து சேர்ந்தது. 'உரிமையாளர் அவசரமாக உங்களுடன்

சொந்தக் காரியமாகப் பேச விரும்புகிருர். ஆகவே, உடனே புறப்பட்டு வாருங்கள்' என்று நிர்வாகி எழுதியிருந்தார் 'என்ன சொந்தக் காரியம் அது?...ஸஸ்பென்சுகள் ஒன்றன் பின்னொன்ருகக் காத்திருந்து என்னை மோதுகின்றனவே? ஆமாம், இந்தப் பெண் வாணிக்கு என்ன பதில் எழுதுவதாம்?...'

ரேடியோப் பெட்டி 'தேவமனோஹரி' ராகத்தை இசைத்துக்கொண்டிருந்தது.

சூழலை மறந்து, சங்கீதப் பித்தாளுர் அவர்!...

ஞானசீலன், தன் அருகிலேயே நின்று கொண்டிருந்த வாணியைப்பற்றிய நினைவு இல்லாமல், சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்தார். பதட்டத்துடன் புகை கக்கினார்; புகைச்சல் இருமலை வெளியிட்டார். பின்னர், எழுதி முடித்த கடிதத்தை எடுத்து அவள் வசம் சேர்ப்பித்தார்.

வாணி அந்தக் காகிதத்தை வாங்கி உரத்த தொனியில் படித்தாள், "என்னை நீ காதலிக்கிருயா?" என்று.

"வாணி, இது என் கேள்வி. ஆகவே, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உன்னுடையது!" என்று வாய்விட்டுச் சிரித்தார் ஞானசீலன்.

விடை மொழிய, அப்பொழுது அங்கே வாணி பொட்டுப் பொழுதேனும் நின்ருல்தானே?

'நல்ல பெண்!...ஊம்!...'

## 7. "நெஞ்சே நீ, வா!"

டிசம்பர் பூவிற்கு ஒரு மகத்துவம் உண்டு. அது கண்ணில் பட்டுவிட்டால், பிறகு. அவரது கருத்தைவிட்டு அகலமாட்டாது. அப்பூவைப் போல அந்தப் பூவை நின்ருள்; நிலைத்தாள். அவள் பெயர், வாணி!

மனோரஞ்சிதப் பூவுக்கு ஒரு மகிமை உண்டு. நெஞ்சைத் தொடும் வகைவகையான மணம் தரும் மணம் அதற்கு வாய்த்திட்ட நற்பேறு ஆகும். அந்தப் பூவை நிகர்த்திருந்தாள் இந்தப் பூவை. இவள் பெயரும் வாணிதான்!

வாணியைப் பற்றிய நினைவுகள், நீண்டு விரிந்த செந் தாழைமடல் குருத்துப் பூக்களாக ஞானசீலன் மனத்தில் சிதறின; நறுமணத்தைச் சிதறின.

கமலப் பூவின் புற இதழ் மருங்குச் சிவப்பினை நினைவூட்டும் வண்ணம் வண்ணம் கொண்டிலங்கிக் கொண்டிருந்தது அந்திவானம்.

ஞானசீலன் கண்களை மூடிமூடித் திறந்தார்.

ஆசைகள் திறந்து திறந்து மூடிக்கொண்டன.

வாணியின் நினைவும் நினைவு முகமும் அவரை ஆட்டிப் படைத்தனவா? படைப்பின் சக்தியையே அவ்வாறு அலைக் கழித்தனவா?

வாணியை எண்ணமிட்டார் அவர்.

மணமேடையில், தலைப்பாகை திகழ, மணவறையில் குந்தி யிருக்கப்போகின்ற காட்சி விரிந்தது!

எண்ணங்கள் அழுத்தம் பெற்ற தருணத்தில், நெஞ்சில் அழுந்திய பாவையென நினைவில் அழுந்தி நின்றாள் வாணி.

சிரித்த முகம்.

சிரிக்க வைக்கும் முகம் அது.

கனவு காட்டும் கண்கள்.

கனவுகளைக் காட்டச் செய்யும் கண்கள் அவை.

சிந்தூரச் சிவப்பு உதடுகள்.

மந்தாரைப் பூவின் மயல் கொண்டவை அவை.

'ஸார், நான் நேற்று தந்துவிட்டுப்போன லெட்டருக் குப் பதில் தயாரிச்சுப்பிட்டீங்களா!'—வாணியின் முகவிலாசத்

தில் காணப்பட்ட எழில் அழுத்தம்தான், அப்போதைய அவள் கேள்வியில் தொற்றியது போலும்!

அந்தக் கடிதத்தை அவர் மறுதரமும் பார்வையிட்டார். கதைகளைப் படித்து முடித்ததும், தீர்ப்பு வழங்கும் மனம் கொண்டு மீண்டும் மீண்டும் ஆராய்ச்சிப் பார்வையுடன் படிப்பதைப்போல, அப்பொழுது அவர் படித்தார்.

கடிதத்தின் கருத்து கழன்றது:

"அன்பிற்குரியீர்,

வணக்கம் வரையில.

வரையிலா வரை நடுவே, அமைதியும் அழிவும் துயிலும் அலகிலா விளையாட்டுத் தெய்வத்தை எண்ணி எண்ணித் தவம் புரிய அதிர்ஷ்டம் படைத்திருந்தாள் மஹேஸ்வரி. அவளுக்குக் கிட்டிய பாக்கியமே அதுதான்.

ஒருவனை எண்ணித் தவம் இயற்றத்தக்க பேறு ஒருத்திக்குக் கிடைப்பதே நல்வாய்ப்புத்தானே?

இப்படிப்பட்ட அதிர்ஷ்டத்தை உங்கள் அன்பு மனம் யாராவது ஒருத்திக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.

இதற்கு மத்தியில் நீங்கள் சோதனையாளராக ஆகிவிடுவீர்களா?

என் கேள்வி இதுவே:

"நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?"

இக்கேள்வியில் புதுமை இருக்கலாம்.

என் எண்ணம் இது. உங்கள் பதில் எனக்குச் சாதகமாக இருந்துவிட்டால், என்னைப்போல் பாக்கியவதி அவனியில் யாருமே இருக்க முடியாது. அத்துடன், ஆண்டவனைப்போல நல்லவனும் இருக்கமாட்டான்!

உங்கள் முடிவு எனக்குத் தீதாக இருப்பின், நான் உங்கள் திருமுகப்பாதையினின்றும் விலகி, வேறு திசையில் நடக்க முனைவேன்.

வாணி"

சில கணப்பொழுதிற்கு முன், இதே கடிதத்தைப் படித்த பொழுது, தோன்றாத சில அதிசயங்களை இப்பொழுது அக்கடிதத்தின் வாயிலாகக் கண்டார் அவர். 'இலக்கிய நயம் சொட்டச் சொட்ட எழுதியிருக்கிறாயே வாணி?... அப்படியென்றால், தேர்ந்த ஞானம் படைத்தவளாகத்தான் இருக்க வேண்டும்! அவளது அறிவாழத்தைக் கண்டுதான் வாணி என்று அவளுக்குப் பெயர் வைத்திருப்பார்கள் போலும்!...'

'ஏ கிளாஸ்' கச்சேரியில் நிரம்பி வழியும் மகிழ்ச்சிப் பெருக்கு அவருள் நிரம்பி வழிந்தது.

ஏவிய மனமே, ஏவப்பட்ட சாகசத்தைக் கண்டு மகிழ்ந்தது. "வாணியிடம் 'நீ என்னைக் காதலிக்கிறாயா?' என்று கேள்வி கேட்டேன். அதற்கு அவள் புன்னகைப் பூவை உதிர்த்துவிட்டு, ஓடி விட்டாளே!... அவள் மௌனம் அவளது சம்மதத்துக்கு ஆதாரம்தானே? அப்படியென்றால், என் மனம், என் மகிழ்ச்சித் திளைப்பு, என் மவுனம் எதற்கு ஆதாரம்? எதற்கு அடையாளம்? எதற்கு அத்தாட்சி?...'

யதார்த்த வாழ்க்கைக்கு உட்பட்ட மனித மனத்தின் பலஹீனங்களுக்குப் பிரதிநிதித்வம் பூண்டு பேசியது உள்மனம் அதற்குத் தாளம் போடும் வகையில் எண்ணங்கள் தொடுத்து நின்றான். தொடுத்து நின்ற 'மாரன் கணை'யின் வினயச் சிரிப்பு வேடிக்கை கோலம் ஏந்தி, பகைப்புலனில் பதவிசாகச் சிரித்துக் கொண்டிருந்ததை ஞானசீலனின் இலக்கிய மனம் மட்டுமே தொட்டும் தொடாமலும் கண்டது; கணித்தது!

அவரால் என்ன செய்ய முடியும்?

காதல் எனும் நோய் உடனடியாகத் தீர்ந்துபோகக் கூடியதல்லவே?

மீண்டும் நெருப்புப் புகைந்தது.

அதாவது, அடுத்த சிகரெட் தீர்ந்தது என்று அர்த்தம்.

'வாணியின் கேள்விக்கு அர்த்தம் புரிந்து விட்டது எனக்கு. அதுபோல, என்னுடைய வினவுக்கும் அவளுக்குப் பொருள் புரிந்திருக்கத்தானே வேண்டும்?'

நினைவுகளுக்குச் சுகந்தம் உண்டு; சுகம் விரவிய சுகானுபவ உணர்வும் மிச்சம்.

ஞானசீலனின் மனம் என்னவோ செய்தது. எதையோ ஒன்றை இழக்கக் கூடாது என்கிற தவிப்பு மேலோங்கி ஆதங்க வடிவு கொண்டது. அழகின் வடிவு கொண்ட—தனக்குப் பழக்கம் ஏற்பட்ட அழகிகளின் வரி வடிவங்களை—நினைத்து நினைத்துப் பார்த்தார்.

மூடிய கண்கள்.

மூடிடாத சிந்தனைலயம்.

ஆடிய அழகு.

ஆடாத மயக்கநிலை.

கிழக்கே நோக்கினார்.

அங்கே வாணி நின்றாள்!

வடக்குப் பக்கம் சாய்ந்தார்.

அங்கும் வாணிதான்!

விண் முட்டினார்.

அவ்விடத்திலும் விண்முட்டி நின்றாள் வாணி.

மண்ணுக்குத் தாழ்ந்தார்.

மார்பகச் சேலை மண் மாதாவை ஆரத்தழுவிட, மாண்புற்ற எழில் மயக்கம் இனிய சொப்பத் திளைப்பில் 'நலுங்கு' பாட, தோன்றாமல் தோன்றி—சிரிக்காமல் சிரித்த அந்தப் பொற்பதுமை வாணியை தொடுத்த வழி மடக்காமல் பார்த்தார்; பார்த்துக் கொண்டேயிருந்தார். 'ஆஹா! வாணிதான் அழகுக்கு ஆதரிசப் பொருளா?'

வாணியை மறுமுறை பார்த்துவிட வேண்டுமென்ற 'அரிப்பு' கிளர்ந்தெழுந்தது.

அன்னை வந்தாள்; கைவிளக்குடன் வந்தாள். அவளிடம் ஞானசீலன் சொன்னார்: "அம்மா, எனக்கு வாணியை நிரம்பவும் பிடித்திருக்கிறது!"

கோசலை அம்மாளின் முகத்தில் ஆனந்தப் பெருக்கு ஆடிப் புனலாகப் பொங்கி வழியத் தலைப்பட்டது.

அன்றிரவு ஞானசீலன் 'போட்மெயிலில்' பட்டணத்திற்குப் பயணப்பட்டார். அன்றிரவு பூராவும் அவர் மனம் வாணியையே நினைத்து மகிழ்ந்தது. "நெஞ்சே! நீ வா" என்று அவள் தவம் புரிந்த அதே திசை நோக்கித் தவம் இருந்தது!

## 8. ஞானசீலனின் பாதங்களில் தவசீலி!

'தவம் என்றால், அதற்குக் கட்டுத் திட்டங்கள் அதிகம். கண்மூடி, வாய் பொத்தி, ஒன்றிய தனிமையில் ஒன்றினால் மாத்திரம் போதுமா? போதாது, போதாது!

கண் மூடியிருக்க, மனம் திறந்திருக்க வேண்டும்.

மனம் திறந்திருக்க, மனிதாபிமானம் உணர்ச்சி பூர்வமான பிடிப்புக் கொண்டு விழித்திருக்க வேண்டும்.

மனிதாபிமானம் விழித்திருக்க, சாடும் தொல்லைகளைச் சாடி ஓட்டும் துணிவுமிக்க அகங்காரம் துடிப்புப் பெற்றிருக்க வேண்டும்.

எல்லாம் இருந்துவிட்டதால் மட்டும், தவம் தகுதி கண்டு விடுமா? இல்லை, தகுதியைத்தான் காட்டிவிடுமா?

ஒருகாலும் இல்லை.

மனிதாபிமானம், உணர்வு, விழிப்பு, துணிவு போன்ற எல்லாவிதமான துணைச் சக்திகள் மட்டும் இருந்து பிரயோசனம் கிடையாது. மனித மனத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும் அந்த ஹிருதயத்திற்கு ஈவு, இரக்கம், கருணை,

பாசம், பண்பு, அன்பு, ஆதரவு, அணைப்பு, பரிவு, ஒழுகிப் போதல், தட்டிக் கொடுத்தல் போன்ற விதவிதமான குணப் பாகுபாடுகள் சங்கமிக்க, அதன் விளையாட்டாக, புயல் விளைத்து, தென்றல் வீசச் செய்து, அனைத்திற்கும் ஈடு கொடுத்து, இறுதியில் புடமிட்ட பொன்னாக இந்தப் பொன் மனம் இலங்கவல்ல வல்லமையும் பக்குவமும் கைவரும் பொழுதுதான், மனம் மாண்பு பெறுகிறது!'

கதைப் படைப்பாளர் ஞானசீலன் தூங்காத மனத்துடனும், தூங்கி வழிந்தவிழிகளுடனும் அல்லாடிக்கொண்டே, சாய்மானப் பெஞ்சியில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தார். உட்கார்ந்திருந்த அவரது நெஞ்சத்தில், புதிது புதிதான நினைவுகளும் சிந்தனைகளும் இடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டன. காற்றுாட, அமர்ந்தவருக்கு, காற்றின் இதமான அணைப்பு அனுசரணையாக இருந்தது. மடிப்புக் கலையாத சட்டையைத் தன்னுடைய தோல் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, 'டர்க்கிடவலை' எடுத்து பனியன் மூடிய உடம்பில் போர்த்திக் கொண்டார்; பிறகு, அதை எடுத்து, நாட்டுப்புறத்தானை நினைவூட்டும் பாணியில், தலையில் சுற்றிக் கொண்டார். நினைவுகள் சுற்றிய மனத்தைச் சுற்றி, சிகெரெட்டுப் புகைச் சுருள்களும் சுற்றலாயின!

காலத்தையும் தூரத்தையும் தன்னுடைய இரும்புச் சக்கரங்களில் போட்டு மிதித்துக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது அந்த ரெயில் வண்டி.

ஞானசீலனுக்குக் கொட்டாவி வந்தது. அன்னை அன்புடன் போட்டுக் கொடுத்து அனுப்பிய காப்பியை பிளாஸ்கிலிருந்து ஊற்றி, வாயில் ஊற்றிக் கொண்டார். கிறக்கம் தெளிந்தாற்போல ஒரு பிரமை. ஆனால், தெளிவடையாத மனப்பிரமையினூடே, அவரது கண்கள் சுற்றிச் சூழ நோக்கின.

ஒருபுறம், புதுமணத் தம்பதி. அவள் ஆசைக் கனவுகளை தன்னுடைய அழகு மிளிர்ந்த இதழ்க்கரையில் நெளியவிட்ட

வாறு, நாணம் குமிழ் பறித்த பாவனையுடன், காஞ்சிப் பட்டுச் சேலை முகதலைவை இழுத்துப் போர்த்திக்கொண்டு, மஞ்சள் தாலியைமட்டும் தங்கக் கழுத்தில் பொற்புக் காட்டித் தவழ விட்ட வண்ணம், தூங்காமால் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது கோழித் தூக்கத்தைக் கொத்திப் பதம் பார்த்து ரசிக்கும் சேவலாக மாறிய அவள் கணவன், பரம ரசிகனாக மாறி விட்ட பெருமை பிடிபடாமல், பிடியெனக் காணப் பட்ட அவள் எழிலை மாந்தித் திளைத்துக் கொண்டேயிருந் தான். 'உன்னை எனக்கு அர்ப்பணம் செய்தாய் நீ; ஆகவே, என் உறக்கத்தை நீ எடுத்துக்கொள். வாழ்வின் பரிவர்த்தனை இப்படியாக நம்முள் மலரட்டும்; மணக்கட்டும்,' என்று சொல் லாமல் சொல்லிக் கொண்டிருந்திருக்கவேண்டும்!

மறு பகுதிக்குத் திரும்பினார்.

எழுபதைத் தாண்டிய அயர்வில் களைத்துச் சளைத் துக்கிடந்த கிழத்தம்பதி இருவர்; அவர் தலை அவள் மடியில் கிடந்தது. 'லொக் லொக்' என்ற இருமல் தாலாட்டுப் பாடியது. இல்லாவிட்டால், பெரியவருக்குத் தூக்கம் பிடிக்குமோ?

வேறு கோணத்திலே, கிராமப்புறத்துக் காதலர்கள் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டு, தொட்டுத் தொட்டுப் பேசிப் பேசி, சிரித்துச் சிரித்துக் காலத்தையும் தூரத்தையும் கடந்து கொண்டிருந்தார்கள்.

சிரிப்புத் தோன்றும்வரை, வாழ்க்கையும் ஆனந்தமான பொழுதுபோக்காத்தானே தோன்றும்!

விடி வெள்ளி முளைத்தது.

செங்கற்பட்டு அவருக்கு ஒரு 'கப் காப்பி' ஈந்தது. காப்பிச் சுவையின் இனிய நைப்புணர்ச்சியை எண்ணிப் பார்த்தவராக, அவர் சிகரெட்டுப் புகையின் தடத்தில், ரெயில் எஞ்சின் புகையை இரண்டறக் கலந்து விட்டுக்கொண்டே, வழிமடங்கி, தான் அமர்ந்திருந்த பெட்டியை நாடிய நேரத்தில் "ஆசிரியர்

ஸார்!" என்னும் விளிப்புக் கேட்கவே, சிகரெட்டை உள்ளங் கையில் மறைத்துத் திரும்ப, அங்கே, தவசீலி நிற்கக் கண்டார்.

"வணக்கம், வணக்கம்!" என்று சொல்லி, தரையில் பாதிப் பார்வையையும், தரைமீது நின்ற தவப்பெண்ணைப் பாதிப் பார்வையுமாகப் பார்த்தார்.

"அப்பாவுக்கு ரொம்பவும் முடியவில்லை, பட்டிணத்திற்கு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைச்சுக்கிட்டுப் போறேன், ஸார்!"

ரெயில் ஊதியது.

ஊதிய துயரத்தை ஊதி அணைக்க முடியாத நிலையில், "அப்பாவைப் பார்த்துக் கொள்ளுங்கள். பட்டிணத்தில் அவசியம் என்னை வந்து பாருங்கள்," என்று கேட்டுக்கொண்டு, சிகரெட்டுத் துண்டை வீசிவிட்டு, துண்டிஞல் முகத்தைத் துடைத்தவாறு வண்டியைச் சரண் புகலானுர் ஞானசீலன்.

பாரதிதாசனுர் நறுக்கு மீசை திகழ, புரட்சிப் பார்வை யுடன் காணப்பட்டார்.

'கவி வாணர்களுக்குக் கூட 'ஸ்டார்' சில சமயங்களிலே மட்டுந்தான் அனுசரணையாக அமைகிறது.'

பாடினுர் புரட்சிக்கவி.

" சோலையிலோர் நாள் எனையே
தொட்டிழுத்து முத்தமிட்டான்;
துடுக்குத் தனத்தை என் சொல்வேன்?

மாலைப்பொழுதில் இந்த மாயம் புரிந்த செம்பல்
வாய்விட்டுச் சிரித்துப்பின்
போய்விட்டானேடி தோழி...!"

கவிதை இன்பம் மனத்துக்கு விருந்து வைத்தது. முறுவல், இதழ்க் கங்கில் குறுஞ்சிரிப்பைப் பெய்வது இயல்புதானே?

யார் யாரைப்பற்றி யெல்லாமோ எண்ணித் திளேத்த அவரது மனக்கண்முன், மனக்கடல் ஆர்ப்பரித்து முழங்கிய காட்சி ஏடு விரிந்தது.

தவசீலியின் உருவம் நிழலாடியது, உள்ளம் என்கிற கிழியில். "நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?" என்று விஞச்சரம் தொடுத்த அவளது துணிவும் நிழலாடியது.

அப்பால், வாணியை நினைந்தார். "நீ என்னைக் காதலிக்கிருயா?" என்று அவள் முன்னே வைத்த கேள்வியின் துடுக்குத்தனத்தைப் பற்றிய சிந்தனை விரிந்தது.

அதற்கப்புறம், "தம்பி, நீ யாரையாவது காதலிக்கிருயா?" என்று பாசத்துடன் கேட்ட பான்மையை எடை போட்டார்.

இறுதியில், "அம்மா, எனக்கு வாணியை நிரம்பவும் பிடித்திருக்கிறது!" என்று அவர் முத்தாய்ப்பிட்டு மொழிந்த முடிவையும் ஆரம்பக்கதையாக்கினர் அவர்.

பெரியவர் மாசிலாமணியின் ஏக புதல்வி கமலாட்சியைக் குறித்து, 'குறி' பார்க்க அவர் உள் மனம் நாடிய சமயம், எழும்பூர் வந்து நின்றது!

ஞானசீலன் தடுமாறிய தூக்கத்தைத் தடுமாற விட்டபடி, தமக்குரிய சாமான்களைக் கையில் எடுத்துக் கொண்டார். தொங்கவிடப்பட்டிருந்த 'கோட்'டை எடுத்துப் போட்டுக் கொண்டார். அப்பொழுது அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்த பாவையர் முகங்களில் எல்லாம் அவர் வாணியையே தரிசித்தார். கொண்டைப் பூச்சரமும், மங்களத் திலகமும், எழிலாடிய வளைகளும் விளங்க, வாணி தோன்ருமல் தோன்றினுள்!...

அதே கணத்தில், "ஐயா! ஸார்!" என்று தடுமாறி ஓடி வந்து ஞானசீனின் கால்களில் விழுந்தாள் தவசீலி!

# 9. காதலுக்கும் கனவு உண்டு!

தொடர்ந்த இனிய நல் நினைவுகளைத் தொடர்ந்து அந்தக் குரல் அப்பொழுது ஞானசீலனின் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது. வாணியின் சிந்தனை ஒன்றிலேயே சித்தத்தைப் பதித்துக் கொண்டிருந்த அவருக்கு தவசீலியின் முகங்கூட வாணியையே நினைவூட்டிற்று. மனமும் உடம்பும் இவ்வகையில் ஒன்றுதான். பற்றுக் கொண்டு பற்றி நின்றால், இந்த இரண்டு இனமுமே ஒன்றுதான்; ஒரு ரகம்தான்!

தவசீலியை வாணியின் நோக்கம் கொண்டு நோக்கியவாறு இருந்த ஞானசீலன், அதே தவசீலியை தவசீலியாகவே எண்ணி, மனம் தடுமாறி, பின், மனம் நிலைக்கச் செய்த பாவனை கொண்டு மருள் விலக்கி, அருள் சேர்த்து அடுத்த கணம் பார்த்த நேரத்தில், கண்ணீரும் கம்பலையுமாக நின்ற அபலைப் பெண் தவசீலியை அவரால் நன்கு காண முடிந்தது.

காலில் சிதறிய கண்ணீர்த்துளிகள் அவரது மனத்திடை ரத்தத்துளிகளைச் சிதறச் செய்தன.

"ஸார்!...ஸார்!"

"எழுந்திருங்கள், தவசீலி!"

அரைமணி சவகாசத்தில், தவசீலியும் அவள் தந்தையும் தம்புச் செட்டித் தெருவை அடையச் செய்தார் ஞானசீலன். அடுத்த அரைமணிப் பொழுது, பெரியவரை 'ஜெனரல் ஆஸ்பத்தி'ரியில் சேர்ப்பதில் கழிந்தது.

கழிந்த நினைவுகளுக்குக் காலமும் பொழுதும் உண்டா, என்ன?

நேற்றைய நினைவுகள் பனிமூட்டம் கண்ட பூக்கள்போல.

இன்றைய நினைவுகள் பனி தூங்கும் மலர்கள் போல.

நினைவுகள் காலத்தையும் தூரத்தையும் கடந்து வரும் பொழுது, மனிதன் கடந்து வந்த பாதையின் கஷ்டமும் இனிமையும் ஓர் இனிய—சுகமான அனுபவமாகத் தென்படும்.

இதுவே வாழ்வு!

ஞானசீலனுக்குக் காலத்தைப் பற்றித்தான் மித மிஞ்சிய அக்கறை. அக்கரையில் தெரியும் கலங்கரை என அவர் காலத்தைக் கணிப்பார். "ஒவ்வொரு கணத்திலும் மனிதன் சரித்திர மனிதனாக வாழக் கடமைப்பட்டவன் என்கிற பக்தி பூர்வமானதொரு சிந்தனையுடன் வாழவேண்டும். அப்பொழுது தான் அவன் சரித்திரத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளக் கூடிய தகுதி பெற்றவன் ஆகின்றான். அதன் விளைவாகத்தான், சரித்திரம் அவனையும் ஒருபொருட்டாக மதிப்பிட்டுக் கொள்கிறது. அதன் பிறகேதான், சரித்திரத்தில் மனிதன் வாழத் தலைப்படுகிறான்," என்று அடிக்கொருமுறை அவர் சொல்வார்; எழுதுவார்.

இப்பொழுது அவருக்குச் சரித்திரத்தின் முக்கியத்துவம் பிடிகொடுக்கத் தொடங்கியது.

'நான் சரித்திரத்தில் வாழவேண்டும்; இது என் கனவு. ஆகவே, என் கனவு ஈடேற, நான் கொண்ட காதலை எப்படிப் பட்ட கோணத்திற்குத் திருப்பி அமைக்க வேண்டும்?...ம்... யோசிக்கத்தான் வேண்டும்!'

எண்ணத்தின் முடிவைத் தொடர்பு படுத்திக் கொண்டு அறைக்கு வந்த ஞானசீலன், உடுத்துக் கொண்டு அலுவலகத் திற்குப் புறப்பட்டார்.

இடைவேளைக்குப்பின் நிகழுகின்ற எந்த ஒரு நடப்பும் அழகாகவும் அன்பாகவுமே அமைந்து விடுகிறது.

அலுவலகத்தில் காலடி வைத்ததுமே உரிமையாளர் முகத்தில்தான் ஞானசீலன் கண்விழித்தார். வாசலில் நிறுத்தி

யிருந்த காரிலிருந்து அதிபர் இறங்கும் நேரத்தில், ஞானசீலன் சைக்கிள் ரிக்ஷாவைவிட்டு இறங்கினூர்.

மாடிக்குச் சென்றதும் குசலம் பரிமாறப்பட்டது. அலுவலகத் தகவல்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன.

காலை பத்துமணிப் பொழுதுக்குப்பின் கடிகாரம் அத்துணை துரித கதியுடன் செல்ல எங்கே கற்றுக் கொண்டதோ?

மத்தியான்னச் சாப்பாட்டுக்கு மணி அடித்தார்கள்.

பையன் சாப்பாட்டுப் பாத்திரத்துடன் ஞானசீலனுக்கு உணவு கொணரப் புறப்பட்டான்.

அது சமயம் அங்கு வந்த முதலாளி ஞானசீலனை அழைத்து, "இன்று உங்களுக்கு நம் பங்களாவில் சாப்பாடு. சில முக்கியமான விஷயங்கள் உங்களுடன் பேசவேண்டும்," என்று சொல்லி நிறுத்தினூர்.

'சரி' என்று தலையசைத்த ஞானசீலனுக்கு உள்ளூற ஏனோ ஒரு வகைப்பட்ட கலக்கமும், இனம் பகுத்துணர வாய்க்காத இன்பமும் மாறி மாறித் தோன்றலாயின!

## 10. சிரிக்கின்ற வரம்!

மயிலாப்பூரில் ஞானசீலனின் உரிமையாளரின் பங்களா இருந்தது.

அந்தப் பங்களாவை அடைந்த ஞானசீலன், பங்களாவின் 'பார்வையாளர் அறை'யில் கிடந்த சோபாவில் அமர்ந்தார். நான்கைந்து வகைப் பத்திரிகைகளையும் புரட்டினபோது, அவருக்கு தி. மு. க. தரும் தலைவலிதான் மிஞ்சியது. 'அண்ணா பேசுகிறூர், அண்ணா பேசுகிறூர் என்று கொட்டை எழுத்தில் அவர்கள் பத்திரிகைகளில் எல்லாம் ஒரே மாதிரியாகப் போடு

கிருர்களே, இத்தனை வருஷமாக அவர் பேசாத புதுப் பேச்சாக என்னதான் பேசியிருக்கிருர் என்று யாராவது சிந்திக்கிருர்களா? தலைவன் வேண்டியதுதான் ஒரு கட்சிக்கு. அதைப் போலவே, தலைவனுக்குப் பக்தி செலுத்தக்கூடிய தொண்டர்களும் வேண்டியதுதான். ஆனுல் தலைவன் கண்மூடியாகவோ அல்லது, தலைவனைப் பின்பற்றும் அடியவர்கள் கண்மூடிப் பக்தர்களாகவோ இருக்கலாகாது. அரசியல் என்பது சொந்த வாழ்வின் பிரச்சினையல்ல; பொது வாழ்வின் சங்கிலியுடன் பின்னிப் பிணைந்திட்ட ஒரு தளை. இவர்களுக்குக் கழகம் ஒரு கூத்துமேடையாகப் பயன்படும் ரகசியத்தை பொதுஜனங்கள் எப்போதுதான் தெள்ளத் தெளிய உணரப்போகிருர்களோ?''

ஒரு காலத்தில் கல்லூரி வாழ்வின்போது, தான் இருந்த கோலத்தை—கோலவெறியை—எண்ணினுர்; வெட்கம் சூழ்ந்தது. தவறு இழைத்ததைச் சுட்டிய மனவளத்தின் தீர்க்க தரிசனப் புத்தியால் விளைந்த வெட்கம்.

அப்பொழுது இருந்த மனநிலையில் நடந்த சம்பவம் அது.

ஞானசீலனுக்குக் கல்லூரியில் அடியெடுத்தவுடனே, பொறுப்பற்ற சில மாணவர்களைப் போன்றே அவருக்கும் 'கறுப்பில்' ஒரு நாட்டம் உண்டாகிவிட்டது. இனம் பிரித்து, இனவெறி பிடித்துப் பேசிக் காலங்கடத்தி வந்த பேச்சாளர்களின் வாய்ப்பந்தல் பேச்சுக்களை எழுத்தின் மூலமாகவும் செவி வழியாகவும் கேட்டுக் கேட்டு வந்த அவருக்கு நெடுஞ்செழியனின் திருச்சி விஜயம் அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. கிளைவ் விடுதியின் கட்டுத்திட்டப் பிரகாரம் இரவு மணி ஏழே முக்காலுக்குக் கச்சிதமாக வெளி வாசலைத் தாளிட்டு விடுவார்கள். ஆனுல், கட்சியின்பால் கனிந்த வெறி, அவரை ஆட்டிப் படைக்கவே, ஆட்டிப் படைத்திட்ட தலைவரின் பேச்சைக் கேட்க, டவுன் ஹாலுக்குச் சென்ருர். அவருக்கு 'ஜமா' சேர, டவுனில் தங்கியிருந்த தோழர்கள் உதவினுர்கள். பேச்சு முடிந்து, நடந்து வரும்போதுதான்,

அவருக்குத் தன் படிப்பு, ஹாஸ்டல் வாழ்வு, அதன் பயங்கர மான சட்டதிட்டம், ஹாஸ்டல் வார்டன் எர்ரட்டின் கெடு பிடி போன்ற விவரங்கள் அவருடைய மூளையை ஆக்கிரமித் துக்கொண்டன. கட்சியைக் காட்டிலும் பெருமதிப்புக் கொண்ட படிப்புன் மதிப்பு அப்பொழுதுதான் அவருக்குப் புல னுயிற்று. என்ன பயன்? ஹாஸ்டல் வார்டன், அவருக்கு முன்னதாகவே அவருடைய சட்டத்தைத் தீர்ப்பாக்கி குறிப்பு எழுதி வைத்துவிட்டு, அந்தக் கையோடு, அவரைச் சீட்டு கிழித்து, வெளியே அனுப்பிவிட்டார். ஆகவே, ஞானசீல னுக்கு இன்னும் அதிகமாக கட்சிப் பைத்தியம் பிடிக்கத் தலைப் பட்டது. முடிவு என்ன தெரியுமா?

'ஒருமுறை பரீட்சையில் தோற்று, பிறகு பட்டம் வாங் கியபின், அவர் பூசனை செய்த தலைவர் ஒருவரைக் காண தஞ் சையிலிருந்து சென்னைக்கு விரைந்தார். தலைவரின் பேட்டிக் காக அவர் வீட்டிலேயே காத்திருந்தார். அவர் சிபாரிசின் பேரில் சென்னையில் ஏதாவது பத்திரிகையில் அலுவல் பார்க்க லாம் என்பதே ஞானசீலனின் சபலம். சபலம் கடைசியில் சபலமாகவே ஆய்விட்டது. நடந்தது இதுதான்: மாணவர் சமுதாயத்தின் பொறுப்பு, கடமை ஆகியவைகளைப்பற்றி சாங் கோபாங்கமாகவும், திட்டவட்டமாகவும் பாடம் ஒப்புவித்துப் பழகிய மேற்படி தலைவர், அவரது பக்த கோடிகளில் ஒருவ ரான ஞானசீலனை கடைக்கண் கொண்டு ஏறெடுத்துப் பார்க் கக்கூட அருள்பாலிக்கவில்லை. "இப்போது பார்ப்பதற்கு ஓய் வில்லை!" என்ற விடை வந்தது. ஒரு கணம் அவருக்கு மூளை குழம்பியது. பிறகு, குழம்பிய மூளையில் விடிவு பிறந்தது.

"உம்மைப் போன்ற தலைவர்களை நம்பி நான் என் எதிர் காலத்தையும் இளமைப் பிராயத்தையும் வீணாக்கிக்கொள்ள இருந்தேன். நல்லவேளை, உங்கள் மனை எனக்கு ஒரு போதி மரமாக இருந்து, எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டது. வாழ்க நீர்! வாழ்க உமது வேஷம்!" என்று குறிப்பு எழுதி அங்கேயே ஜன்னல் வழியே போட்டுவிட்டு, நடையைக்

கடடினார். அம்பலவாணன் சந்நிதியை அண்டி ஒண்டினார். கேட்டதெல்லாம் தருபவன் அவன் தந்தான். சென்னையிலேயே அலுவல் கிடைத்தது. இலக்கியப்பற்று அவரை வளர்த்தது. கட்சி அரசியலைப் படிப்பதுடன் சரி; பற்றுக் கொள்வதில்லை. ஒரு முறை குட்டுப்பட்டது போதா?...

பல்வேறு தினுசான அரசியல் தலைவர்களின் பெரிதுபடுத்தப்பட்ட படங்களைக் கண்டு, காலத்தை வழி விசாரித்துப் பேசி முடிந்தபிறகு, ஞானசீலன் நெடுமூச்சு விட்டார். நல்ல வேளையாக, அதே நேரத்தில், 'தமிழரசி'யின் உரிமைக்காரரான மணிமுத்து வேலாயுதத்தின் கார் மட்டும் வரவில்லை, மணிமுத்து வேலாயுதம் அவர்களும், வந்தார். அவர்களுடன் கூட, 'ஈவினிங் இன் பாரீஸ்' வாசனைத் திரவியத்தின் நெடியும் நெடி துயர்ந்து வந்தது.

மூச்சுத் திணறல்.

வணக்கம் செலுத்தப்பட்டது.

"வாருங்கள், மாடிக்கு. விருந்து சாப்பிட்டுவிட்டுப் பேசுவோம்," என்று மாடிக்கு அழைத்துச் சென்றார்.

இரவின் விழிப்பில் மின்விளக்குகள் விழித்திருந்தன. பூஞ்செடிகள் இளந்தென்றலைத் தாலாட்டின. நீலவானம் நீல வண்ண விளக் ொளியில் முடங்கியது.

விருந்து முடிந்தது.

பெரியவர் சொன்ன சேதி: "ஞானசீலன், எனக்கு ஒன்று விட்ட தமக்கை மகள் ஒருவள் இருக்கிறாள். அவளை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு, வாரிசில்லாத என் சொத்துக்களை உங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது என் விருப்பம். அந்தப் பெண்ணைப் பார்க்கிறீர்களா?" என்று கேட்டுவிட்டு, "புஷ்பவல்லி!"[3] என்றார்.

ஞானசீலனுக்குப் புலன்கள் இயங்க மறுத்தன. வேர்வைக் கொப்புளங்கள் வெடித்தன. நிமிர்ந்து பார்க்கவில்லை.

"ஞானசீலன், பாருங்கள்!"

'இது ஏதேடா வம்பாகிவிட்டது' என்று எண்ணி, தலை நிமிர்ந்தார் ஞானசீலன்.

புஷ்பவல்லி பட உருக் கொண்டு காட்சி கொடுத்தாள்!

சாப்பிட்ட சாப்பாடு எங்கேதான் போயிற்றோ?

'ஒவ்வொர் இடத்திலும் இப்படி பெண் உருவில் விதி என்னைப் பயம் காட்டுகிறதா? இல்லை, என் மனச் செருக்குக்குச் சவால் விடுகிறதா? இல்லை, என்னுடைய ஒருநிலைப்பட்ட போக்கை ஒருநிலைப்படுத்த இப்படிப்பட்ட பெண்களாகத் தோன்றிடச் செய்து, விதி என்னும் மாயை என்னை எள்ளி நகையாடுகிறதா?'

ஒரு மாதம் தவணை கோரிப் பெற்றுக்கொண்ட திருப்தியுடன் அங்கிருந்து கால் நடையாகவே நடந்து சென்றார் ஞானசீலன்.

அறையை அடைந்ததும், இருபத்தைந்து காசு பஸ் செலவு மிச்சம் என்பதையும் ஒரு பாக்கெட் பர்க்லி சிகரெட் நஷ்டம் என்பதையும் உணர்ந்தவராக, குளிர் நீரில் ஒரு குவளை எடுத்துக் குடித்துவிட்டு, மொட்டை மாடியில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தார் ஞானசீலன்.

மல்லிகேஸ்வரர் ஆலயம் தெரிந்தது.

மண்துலங்கச் சிரித்த விண்மீன்கள் தெரிந்தன.

உடலுக்குரித்தான சுதந்திரம் கட்டு அவிழ்த்துப் புறப்பட்ட உரிமையுடன் அவர் மனம் வெகுவாகப் போராடிக் கொண்டிருந்தது.

போராட்டம் என்றால், உரிமைப் போராட்டம்! உறவுப் போராட்டம்.

ஒருபுறம் தவசீலி!

அதோ கமலாட்சி!

இதோ, புஷ்பவல்லி!

அங்கே வாணி!

ஊருக்குப் புறப்பட்ட தருணத்தில் வாணியிடம் 'விடை' சொல்லி, 'விடை' வாங்கிக்கொண்டு புறப்பட வேண்டுமென்று ஞானசீலனின் அபிலாஷை.

வாணியின் பேசும் விழிகளுடன் பேசித் துடித்த அவரது விழிகள் பூத்துப்போன பின், குடம் ஏந்தி, குவளை மலர்கண் இணையில் மாரன்—சீதனம் தந்த நாணக்குடம் ஏந்தி, அடி பதித்து, அடி பிரித்து விழி நடந்து வந்து சேர்ந்தாள்.

யார்?

வாணி!

"போய் வருகிறேன்!"

"ம்...என் நினைவு ஒன்றுடன் இங்கிருந்து புறப்பட்டு, அதே என் நினைவு ஒன்றுடனே அங்கிருந்து புறப்பட்டுவாருங்கள்...!"

எவ்வளவு அழுத்தமான தன்னம்பிக்கை! புலவி—பொய்க் கோபம்கொண்ட பாங்கில், குறுந்தொகைத்தலைவிபோல நகை கழித்து, நகைமுகத்தில் சினக்கீற்று கிறுக்கிப் பேசி—பேசாமல் பேசி வழி அனுப்பி, விழி அனுப்பி வைத்தாளே வாணி.

வாணியை நினைத்த நெஞ்சில் வேறு சில கன்னிப் பெண்களின் முகங்களும் சேர்ந்து சுழன்றன.

மேஜை இழுப்பை இழுத்து ஐந்தாறு கவர்களையும் கடிதத் தாள்களையும் எடுத்து வைத்துக் கொண்டார். சிரிக்கின்ற வரம் வாங்கிக்கொண்டு 'பிள்ளையார் சுழி' இட்டார்.

இரவு மணி இரண்டுக்கு, ஞானசீலன் எழுதிய கடைசிக் கடிதத்தின் கடைசி வாசகம்:

"...இனி உலகம் எனக்கு எதிரியாகிவிடும். ஆகவே இனி நீதான் எனக்குப் பலம். ஆமாம், வாணி! நீதான் இனி எனக்கு உலகம், உயிர் சகலமும்! சிரிக்கின்ற வரம் தா, வாணி!..."

# 11. விதியின் மனிதன்

அகிலன் அவர்கள் சாதாரணமாக அதிகாலையில்தான் கதை எழுதுவது வழக்கம். இந்தப் பழக்கத்தைப் பழகிக் கொள்ளுவதில் ஞானசீலனும் சிரத்தை கொண்டார். முன் பெல்லாம் பத்துமணி ஆட்டத்திற்கு சினிமா பார்த்துவிட்டு, அதற்கப்புறம் அறைக்கு வந்து, பிளாஸ்கில் டீயும் எழுது பல கையில் 'நியூஸ்ப்ரிண்ட்' காகிதக் கத்தையும், கண் இலக்கில் சிகரெட் நெருப்புப் பெட்டியுமாகக் குந்தி, குதிரைப்பந்தயக் குதிரைக்கு ஈடாக, கண்மூடிய வெறிக்கிளர்ச்சியுடன் 'மூசு மூசு' என்று எழுதித் தீர்ப்பது பழக்கம். மற்றவர்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் நாட்டம்; இவருக்கு இலக்கிய மனத்தின் சுகத்தெளிவில் ஒட்டுதல். மறுநாள் அவர் அலுவலகத்திற்குச் செல்லுவார். முதல் முறை பத்திரிகை உரிமையாளர், அவரது செக்கச் சிவந்த கண்களைப் பார்த்துப் 'பயந்துபோய்'க் கேட்டார். விஷயம் பிடிப்பட்டது; வினயம் எடுபட்டது.

"உடம்பை முதலில் பார்த்துக் கொள்ளவேணும். நீங்கள் பிரம்மசாரி. முதலில் உடம்புதான் முக்கியம். உங்களது மனக்குகை ஓவியங்களை வரைய வேண்டுமென்றால், உடற் சுவரைக் கண்காணிப்புடன் பேணுதல் வேண்டுமல்லவா? இப்படி இனியும் இராக்கண் பகல்கண் விழிக்க வேண்டாம். தினம் பகுதி பகுதியாக உங்கள் தொடர் பகுதிகளை எழுதி விட்டால், சிலாக்கியமாக இருக்காதா, ஞானசீலன்? என்ன சரிதானே? அலுவலகம் ஒன்றுதானே நம் இருவருக்கும் இடை யிலுள்ள ஒட்டுறவு என்று எண்ணிவிடக் கூடாது. அலுவலகத் துடன் ஒட்டுறவல்லாத விஷயங்களும் நட்புக்களும் எத் தனையோ நம்மைச் சுற்றி, அதாவது உங்களையும் என்னையும் சுற்றி இருக்கின்றனவே, அவற்றுடனும், வாய்ப்பு தேவைப் பட்டால், பழக்கம் வைத்துக்கொள்ள விரும்புகிறவன் நான்,

அதாவது, உங்கள் சொந்த வாழ்க்கையின் சுகதுக்கங்களிலும் எனக்குப் பாகம் தரவேணும் என்று ஆசைப்படுகிறவன் நான். என்ன, சரிதானே?"

கிட்டத்தட்ட, மூன்று வருஷங்களுக்கு முன்பு மணிமுத்து வேலாயுதம் மனம் விட்டுப் பேசிய பேச்சின் 'தாத்பரியத்தை' அடிக்கொருமுறை நினைத்துக்கொள்வார் ஞானசீலன். 'உறவும் உரிமையும் ஒட்டிவர எண்ணுகையில், எட்டி நிற்கக் கூடாது. அன்பு மனம் அழியாதது; அழியக் கூடாது! இந்த மனித மனம் அழியாமல் பாதுகாப்பதற்கு, இம்மாதிரியான உறவும் உரிமையும் பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட வேண்டும். அப்போதுதான், பணத்தையும் கடந்து நிலைக்கும் பவித்திரமும், பண்பைக் கட்டிக்காக்கும் பாத்தியமும் வழிகாட்ட முடியும்!' என்று ஒரொரு சமயங்களில் குறிப்பிட்டிருக்கிறார் அவர் என்றால், அதற்கும் உதாரணம் தந்து, உத்தாரணம் தந்த மனிதர் மணிமுத்து வேலாயுதம் அவர்களே. தம் முதலாளியைப்பற்றி அவருக்குப் பொதுவாக உயர்ந்த அபிப்பிராயமே நிலவிவந்தது.

இந்த அடிப்படையான மன உணர்ச்சிச் சுழிப்புடனேயே, படுக்கையைவிட்டு எழுந்து, பிரஷ்—பேஸ்டிற்குக் கடமையைச் சுட்டிவிட்டு, மண்ணடித் திருப்பத்தில் பவழக்காரத் தெரு கூடு முனையிலிருந்த உடுப்பி கமலாபவனத்தில் ஒரு கப் காப்பியைச் சூடுபறக்க ஊற்றிக்கொண்டு திரும்பினார்.

தெரு, தெரு விளக்குகள், தெரு மனிதர்கள்!—முக்கோணத்தில் உறக்கம் 'ராசாங்கம்' நடத்திய வேளையில், ஞானசீலன் எழுதவேண்டியவைகளை எழுதி முடிக்கவேண்டுமென்ற உடல் தினவுடனும் மன எழுச்சியுடனும் விரைவாக அறைமாடிக்குத் தாவி அறையில் வந்து அமர்ந்தபோதும், எப்படியோ தம் உரிமையாளரைப் பற்றிய நினைவுகள்தாம் பாவாடைபோலப் பரவிக் கிடந்தன. 'சென்ற வாரம்' நான் மணிமுத்துவேலாயுதம் அவர்களின் பங்களாவுக்குச் சென்ற

போது, இப்படிப்பட்ட ஒரு குண்டைப் போடுவார் என்று நான் துளியும் நினைக்கவே கிடையாது. ஆனாலும் மனிதர் ரொம்பவும் கண்ணியமானவர். அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது, 'இது நம் சொந்த விஷயம். ஆனால் வியவகாரம் ஏதும் இல்லை; அதற்கான 'ஏதும்' கிடையாது. எனவே உங்கள் இஷ்டப்படி," யோசித்து, உங்கள் அம்மாவுக்கும் யோசிக்க அவகாசம் கொடுத்து, பதமாகவும் பதனமாகவும் முடிவு சொல்லுங்கள். என் அக்காள் மகள் புஷ்பவல்லியின் படத்தைப் பார்த்தீர்களே? நிஜமாகவே, அவர்கள் புஷ்பம் தான். சினிமாக்களிலே காட்டுவார்களே; அது மாதிரி பணக்காரர் வீட்டுப் பெண்ணை வலிய வந்து ஒரு ஏழையின் தலையில் கட்டும்போது," அந்தப் பணக்காரர் வீட்டுப் பெண்ணுக்கு ஏதாவது ஒரு 'ஒச்சம்'—குறைபாடு இருக்குமே— அதுபோல, இங்கே எதுவும் இல்லை. என் கவலையெல்லாம், என் சகோதரியின் பெண் உகந்த இடத்தில் போய் வாழ்க்கைப்பட வேண்டுமென்பதுதான். உங்களிடம் பொறுப்பும் கடமையும் மிகுந்துள்ளன. ஆகவே, உங்களிடம் பங்குபெற வரும் பெண் நிச்சயம் மனம் கலங்க நேரிடவே நேரிடாது. வாணியின் துணைக்கு லக்ஷ்மியும் வந்துவிட்டால், அப்புறம் உங்களுக்கு என்ன கஷ்டம்? பேசாமல் உங்கள் இலக்கியப்பணியை சிவனேயென்று தொடர்ந்து நடத்தலாமே! ஆகவே, தீர யோசித்துச் சொல்லுங்கள். மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளில் பொருளாதாரம் குறுக்கிடுவதைப் போலவே மனிதர்களின் காதல் பிரச்னைகளிலும் இந்தப் பொருளாதாரம் இதுவரை குறுக்கிட்டுக் கொண்டுதான் வந்திருக்கின்றன. ஆனால் இப்போக்கை நான் என்றுமே ஆதரித்தது இல்லை; அனுமதிக்கவும் விரும்பேன். உங்கள் தீர்ப்பு எனக்குச் சாதகமாக இருக்குமென்பதே என் நம்பிக்கை. மற்றதெல்லாம், ஆண்டவன் சித்தம். நம் சித்தங்களுக்கு சித்தம் வைக்கும் முதல்வன் அவன். அவன் விளையாட்டுப்படிதானே சகலமும் உலகத்திலே நடக்கிறது?' என்று பவ்யமாகப் பேசி அனுப்பியதை ஞானசீலன் மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்தார்.

எழுதுவதற்கு உரிய மனலயிப்பை உண்டாக்கிக்கொள்ள முயன்று கொண்டிருந்தார் ஞானசீலன்—பூசாரி உடுக்கு கொட்டி, சாம்பிராணி தூபத்தை மோப்பம் பிடித்து, காளி உச்சாடனத்தைக்கைப்பற்ற முனைவதுண்டல்லவா, அதுபோல! அன்றைய காலைப் பத்திரிகை 'ஹிந்து' அவர் பார்வைக்காகக் காத்திருந்தது. வென்றவர்களை ஏசியிருந்த கலைஞரின் அமத்லான பேச்சைப்பற்றிப் படித்துவிட்டு, பிரிட்டிஷ் பிரதமரின் அழுத்தமான அயல்நாட்டுக் கொள்கையைக் குறித்து வந்திருந்த குறிப்பையும் பார்த்தார். நடந்த பொதுத் தேர்தலில் பொது மக்கள் நிரூபித்துக் காட்டிய நாட்டுப்பற்றைப் போற்றிய நேருஜி—காமராஜரின் வடக்கு—தெற்குப் பேச்சுக்களை ஒருமுனைப்படுத்திய மூளைத் தெளிவுடன் படித்தார். பிறகு என்ன தோன்றியதோ, விசுக்கென்று, 'தமிழரசி' இதழின் முந்திய ஏட்டில் தம்முடைய வளர்கதை வளராமல் நின்றிருந்த இடத்தைப் பார்த்தார். எண்ணங்களுக்கு வல்லமை தரும் பராசக்தி பாரதியாருக்குக் கிட்டினரல்லவா? அம்மாதிரி ஞானசீலனுக்கு சக்தி உட்சாடனமோ, தேவி உபாசனையோ எதுவும் இருக்கவில்லை. என்றாலும், அவருள் ஓர் அமானுஷ்யயாக உதவேகம் அவ்வப்போது எழுவது இயல்பு. அத்தகைய உணர்வின் விழிப்பு அவரைச் சாட்டை சொடுக்கச் செய்தது. அதுதருணம் அவர் கண்கள் கலங்கி வந்தன. மனம் மெய்ப்பாடு உணர்ந்தலயிப்பிலும் லயத்திலும் கும்மாளம் போட்டு, ஆன்றவிந்து அடங்கிய பக்குவம் அடைந்தது.

பேனாவை உதறிக்கொண்டு எழுதத் தொடங்கினார் அவர். அப்பொழுது, வாணியின் வதனம் அவரது விழித்த இலக்கிய நெஞ்சத்தில் நிழலாட, நிழலோட்டத் தொடங்கியது. வாணியையே திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று கொண்டுவிட்ட தம்முடைய முடிவைப்பற்றியும் எண்ணமிட்டார். அப்பொழுது, தம் முதலாளியை திரும்பவும் மனத்தில் நிறுத்தவேண்டிய நிலை நிர்ணயிக்கப்பட்டது. கடந்த ஒரு வாரகாலமாக தாம் தம் முதலாளியிடம் பட்டும்

படாமலும் ஓழுகி வரும் இக்கட்டானதொரு கட்டத்தையும் எடைபோட்டுப் பார்த்துக்கொண்டார். வாணியைப்பற்றி உருவான ஒரு முடிவில், தம் எழுத்துத் துறைக்கு ஏற்ப, தாமே ஏற்படுத்துக் கொள்ளப் போவதாக முடிவுகட்டிக்கொண்ட ஒரு முடிவும் முடிவு கண்டதோ?

ஹார்பர் சங்கு ஒலித்தது.

மணி எட்டு.

அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள் 'லாட்ஜ்' நண்பர்கள்.

ஞானசீலனுக்குக் கதையில் சிந்தை பதிந்தால்தானே? அவரது சித்தமிசை குடிகொண்ட வாணியல்லவா அப்போது அவரைத் தன் வயப்படுத்திக் கொண்டிருந்தாள்?

'வாணி, உன் பதிலுக்காகவே நான் காத்திருக்கிறேன். உன் மனம் விரும்பிய பிரகாரமே, என் மனமும் விரும்பிய விந்தையை நாம் இருவரும் கூட்டாகப் பின்னர் ரசிப்போம். விதியைவிட்டு விலகிவிட மனிதனுல் முடியாது. மனிதன் விதியின் ஒரு கருவி. இந்தக் கொள்கைக்கு நம் இருவரிடையிலும் நிகழப் போகின்ற பந்தபாசமே ஆதாரக் கொள்கையாகிவிடும். இல்லையா, வாணி? என் எழுத்தை ரசித்த நீ என்னையும் ரசிக்கப்போகிருய்! இல்லையா, வாணி? உன் எழிலை ரசித்த நான் உன் 'எழுத்தை'யும் ரசிக்கப் போகிறேன்! இல்லையா, வாணி? நம் காதற்கனவு ஈடேறப் போகிறது. இல்லையா, வாணி?'

குளித்து, பலகாரம் சாப்பிட்டுவிட்டு, ஆபீசுக்குப் புறப்பட ஆயத்தமானுர் ஞானசீலன். விரிந்துகிடந்த புத்தகங்களை ஒழுங்கு படுத்தியபோது, "விவேகம் வளருமுன்னே விவாகம் கூடாது! விவேகம் வந்த மனம் விவாகத்தை நாடாது!" என்ற பத்திரிகைத் துணுக்கு ஒன்றை ரசித்துச் சிரித்தபடியே, புறப்பட்டார்.

# 12. மாரியம்மன் துணை

கூடூர்க்காவுக்குப் பதில் வணக்கம் சொல்லியானதும், மாடிக்கு விரைந்தார் ஞானசீலன். வழக்கம்போலவே, அலுவலக நண்பர்கள் வணக்கம் சொன்னார்கள். அவர் கையை உயர்த்தி வணங்கியபின், சுற்றிலும் பார்த்தபடி தமது தனியறைக்குள் நுழைந்தபோது, நெஞ்சில் நுழைந்து இடம் பற்றியிருந்த மேதைகளின் படங்களை உள்ளக்கிழியில் ஓவியமாக்கிப் பார்த்தார். தமிழ்த் தென்றல், சிலம்புச் செல்வர், நாமக்கல் கவிஞர், தமிழகக் காந்தி, பாரத ஜோதி நேருஜி, ராஜாஜி, வங்கக்கவி, நேதாஜி போன்ற பலதரப்பட்ட செம்மல்களின் புகழ்ச்சிக்குரிய தொண்டுகளை கரும்புக்கணுக்களைச் சுவைப்பது போல ரசித்துக்கொண்டே, இருக்கையில் அமரலானார். மேஜைமீது படுக்கை வசத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடித் தகட்டில் தெரிந்த முகத்தை ஒரு முறை கூர்ந்து நோக்கினார். கையிலிருந்து தோல்பையை வைத்தார். மீண்டும் ஏதோ சிந்தனை சூழ, ஓர் அரைக்கணப் பொழுதை நழுவவிட்டார். பிறகு, நாற்காலியில் கிடந்த கைபிடித் துணியினால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். அன்றையக் கடன் நினைவில் எழுந்தது. தோல்பையைப் பிரித்தார். கனம் ஏறியிருந்தது பை. ஊரிலிருந்து வந்ததிலிருந்து, அவர் நினைத்துக் கொண்டிருந்தபடி, அந்தப் பையின் கனத்தைக் குறைக்க நேரமில்லை. எழுதவேண்டுமென்று எடுத்த தாள்களை வெளியே எடுத்து வைத்தார். பிள்ளையார் சுழி போடப்பட்டதுடன் சரி, இதழ்மலர இடைவேளை இருந்தது. ஆகவே, அவருக்குப் பதட்டம் ஏற்படக் காணோம்! நல்லதுதானே!

எதிர்ச்சிறகிலிருந்து சிறகு கட்டிப் பறந்து படர்ந்து வந்தது காலை வெய்யில்.

பையன் கெட்டிக்காரன் ஆயிற்றே! லாகவமாகக் கதவை ஒருக்களித்து மூடினான்.

ஞானசீலனின் முகச்சுழிப்பையும் சேர்த்து மூடியதாகவே பொருள்.

ஞானசீலன் மணியை அழுத்த முனைந்தார்.

சத்தம் பிறப்பதற்குள், ராதாவின் குரல் பிறந்தது. "ஐயா, காப்பி வேணுமா? இல்லே, நம்ம ஆனந்தன் அண்ணுச்சியைக் கூப்பிடட்டுமா? இல்லே, அது..." என்று கேட்டுக் கொண்டே, 'சி...க...ரெட்' என்று 'ஜாடை' காட்டிக் கண் சிமிட்டித் தொடர்ந்தான்.

ஞானசீலன் மெல்லச் சிரித்தார். பையன் ராதாவைப் பற்றி அவருக்கு எப்போதுமே அனுதாபம் உண்டு. "மனிதர் களின் அன்புக்குப் பாத்திரமாவது அவ்வளவு விரும்பத்தக்க தல்ல," என்று அவர் ஒரு கதையில் எழுதியதை மறக்காம லேயே, அந்தச் சிறுவன் பேரில் அனுதாபம் கொண்டார். அனுதாபம் என்ருல் அன்பின் வழிப்பட்ட அனுதாபம்! குற்ற வாளி ராதாவா? அல்ல! நான்தான்! தன்மீது அனுதாபப் படும்படி அவஞ என்னிடம் சொன்ஞன்? அப்படிச் சொன் ஞல்தானே தப்பு! இதுதானே என் கருத்து?...'

காப்பிக்கு உத்தரவிட்டபடி, காப்பி வந்தது.

ஆணைக்குக் கட்டுப்பட்டு, ஆனந்தனை அழைத்து வந்தான்.

ஆனந்தனும் ஞானசீலனும் அடுத்ததாக அச்சிடப்பட வேண்டிய 'பார'ங்களைப்பற்றிப் பேசிஞர்கள். ஆனந்தன் நீட்டிய அச்சுப்படிகளைக் கையேந்திப் பெற்ருர். 'புழுதிக் கோயில்' என்ற அவரது தொடர்கதையின் இறுதிப் பகுதி அது. "பெண்மை வாழ்க!" என்றிருந்த அத்தியாயத் தலைப் பின் கீழே தடித்த எழுத்துக்களில் அச்சுக் கோர்க்கப்பட் டிருந்த வாசகத்தை நட்ட நடுவில் பார்த்தார்.

"சிறுவர்களும் சிறுமியர்களும் ஒழுங்கை நெடுக, குறுமணல் குவித்து மணல் வீடு கட்டி விளையாடும் பொழுதில் பொய்ச் சோறு சமைத்துச் சாப்பிடுவ தர்க பாவனை செய்வது போலவேதான், இந்தச் சமு

தாயத்தில் காதல் என்பதும் ஒரு பொய் விளையாட்டுத்தான்!...ஒட்டும் இரு உள்ளங்களை ஒரு தட்டில் அறிய உதவும் காதல் என்பதெல்லாம் சுத்தப் புரட்டு! புரட்டிய ஏடுகள் சொல்வதைக் கேட்டு விட்டு, 'காதல், காதல்' என்று புலப்புவது பேதைமை. இரு மனமும் விவேகமான வழியில் இணைந்து ஒன்றுபடும் போது, காதலா பிறக்கிறது? ஊஹூம், இல்லை; இல்லவே இல்லை!...அன்பு பிறக்கிறது! அன்பின் வழியது உயிர் நிலை என்பது தமிழ் மறை ஓதும் நீதியல்லவா? அன்பைக் கடந்து காதல் உருவாவதென்றால், அது எங்ஙனம் ஒருநிலைப்பட்ட பண்புடன் விளங்கக் கூடும்?...இப்படிப்பட்ட நிலையற்ற கோளாறுகளினால் தான், காதலித்தவனை காதலி புறக்கணிக்கப்பதும், காதலிக்கப்பட்டவளை காதலன் வஞ்சிப்பதும் போன்ற நிகழ்வுகள் இடம் பெறுகின்றன! தியாகத்தால்தான் மானுடப் பிறப்பு சிறக்கிறது என்றால், அதே தியாகத்தாலேயே என் காதலை—அதாவது, நான் அன்புக்குக் கட்டுப்பட்டு அவரைக் காதலித்த பண்பாட்டை—நிலைப்படுத்திக் காட்டவேண்டி, என்னையே இழந்து, என் உரிமையை என் உயிர்த்தோழிக்குத் தானம் செய்து கொடுக்கத் திட்டம் செய்து விட்டேன். அப்போதுதானே, பெண்மைக்கு வாழ்த்துப் பாடிய அமரகவிக்கு என் ஆத்ம தரிசனமும் என் ஆத்ம சமர்ப்பணமும் பலன் கூறமுடியும்?..."

மனசிற்குள்ளாகப் படித்துப் பார்த்தப்பின், திருத்தங்களைச் செம்மைப்படுத்திக்கொண்டிருக்கையில், கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டபடியே, "பையா!" என்று அலட்டிய நேரத்தில், "ராதாதானுங்களே? அவன் ஜி. பி. ஓவுக்குப் போயிருக்கான். வந்திடுவான், ஸார்!..." என்ற பதில் கிடைக்கவே, ஞானசீலனுக்குப் பரம சந்தோஷம் பிடிகொடாமல் பாய்ச்சல் காட்ட, அவரும் அந்த மகிழ்ச்சிக்கு 'கூடி' நின்று வேடிக்கை காட்ட, இப்படியான மனப்பின்னல்

கேளிக்கையினூடே நிமிஷங்களையும வினடிகளையும் கூட்டுப் புள்ளி விடாமல் உண்ட மயக்கத்தில் சுவர்க் கடிகாரம் 'ஹாயாக' கடமை இயற்ற, அந்தக் கடமையின் பிரதிபலிப்பாக, அதோ, பையன் வந்துவிட்டான்!

'இன்றைக்குக் கட்டாயம் வாணி—என் வாணி பதில் எழுதியிருப்பாள்!' என்னும் திடசித்தத்தோடு, இறைந்து கிடந்த தபால்களில் கண் ஓட்டம் பதித்தபோது, 'தனிப் பார்வைக்கு—அவரம்' என்ற சிவப்பு மைக் கோட்டுடன் அவரது ஆவலுக்குப் பச்சைக்கொடி வீசியவாறு காட்சியளித்த அந்தக் கவரைப் பிரித்த போது, சிரிக்கின்ற வரம் வேண்டி வாணிக்குத் தூது அனுப்பி, அந்தத் தூதுடன் தன்னுடைய தீர்க்கமான சங்கற்பத்தையும் தூது விடுத்திருந்த மனவோர் மையின் பவித்திரத் தன்மையின் பாந்தவ்யத்தையும் அவர் விழித்தளத்தின் அடிவாரத்தில் தேக்கி வைத்துத் தரிசித்து மனத்தெம்பு பெறவும் தவறினாரில்லை!

நாற்பது பக்க நோட்டுத்தாளில் எழுதப்பட்டிருந்தது கடிதம்.

அதைக் கைப்பற்றியபோது, வாணியையே கைப்பற்றியதாக ஒரு திளைப்பு ஊறியது. தெய்வத்தை எண்ணமிட்டார். "ஆண்டவனே! நீ சகலமும் புரிந்தவன். ஆனால் இந்த மனிதர்கள்தாம் ஒன்றும் புரியாமல் குழம்பித் தவிக்கிறார்கள்!"* என்னும் கீதாஞ்சலியின் வாசகம் அவரையும் அறியாமல் நெஞ்சில் முட்டிமோதி எதிரொலி கிளப்பிற்று.

"...பேரன்புக்குடைய தங்களை எப்படி விளிப்பது என்கிற ரகசியம் புரியாது விழிக்கிறேன். தங்களுக்கு நான் எழுதும் முதல் கடிதம் இது. உங்களது தபால் வந்தது. என் பாக்கியமே பாக்கியம்! சித்திரை வைகாசியில் கலியாணம்] முடித்துவிடலாமென்பது தங்களது அம்மாவின் ஆசை. என் அப்பாவுக்கு

அதுவே இஷ்டம். உடன் புறப்பட்டு வந்தால் தேவலாம்.

மாரிஅம்மன் துணை,
வாணி.”

ஞானசீலனுக்கு உண்டான குதூகலம் அவ்வளவு, இவ்வளவல்ல! மனக்கனவுகளின் புள்ளிக் கோல விளையாட்டு தொடர்ந்தது. உதட்டுக் கங்கில் உற்பத்தியான நகைத்துளி களிலே தேன்சுவை மிதந்தது.

அன்றையத் தபால்களைப் பார்வையிட்டார்.

'நாவல்– சிறுகதை தேக்கம்பற்றி 'ஒருதலைப்பட்ட விமர் சனம்' செய்திருந்த எழுத்தாளரைப்பற்றி முன் இதழில் 'காரசாரமாக'த் தாக்கி உபதலையங்கம் தீட்டியிருந்ததைப் பாராட்டி மானாமதுரை அன்பர் எழுதிய கடிதத்தையும் சேர்த்து வந்துசேர்ந்த போற்றுதல் கடிதங்கள் நூற்றி ஏழு. அவரது நெஞ்சம்—இலக்கிய நெஞ்சம் விம்மிப் பெருத்தது. தோள்கள் விம்மிப் பெருத்தன. 'பேனா பற்றும் எழுத்தாளனே உண்மையான முதல் வீரன்! அவனது முதற்பணிதான் பிறந்த பொன்னாட்டினுக்கு முதற் தேவை!' என்ற தம் கருத்தை மறு படியும் ஸ்திரப்படுத்தினார்.

பார்வையாளர்கள் வந்திருப்பதாகத் தகவல் வந்தது.

பார்க்க வந்தவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

வாடிக்கையான உபசரிப்புக்குப் பிறகு,

இலக்கியப் பூவுலகம் சுழன்றது.

சிற்றின்ப நுகர்ச்சியை எழுப்பவல்ல ஆபாசக்கதைகள் எழுதி 'சல்லிசான அற்பப் புகழ்' சம்பாதித்தவர்களிலிருந்து, அயல்மொழிக் கதைகளை நாசூக்காத் திருடி, ஆனால் அந்தத் திருட்டில் மாட்டிக் கொள்ளாமல், அல்லது அந்தத் திருட்டை ரகசிய ஒப்பந்தத்துடன் செய்து துணிவுடன் முன்னேறி 'இரவல் புகழ்' ஆசாமிகள் வரையிலும் பேச்சு நடந்தது.

"இவர்களைப்பற்றி நாம் கவலைப்படுவதும், எங்கள் பத்திரிகையில் எழுதுவதும் ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இன்றைய நிலையிலே, பொதுஜன ரசிகர்கள் இருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் ரொம்பவும் விழிப்புடன் இருக்கப் பழகிவிட்டார்கள். இதோ பாருங்கள், சில ரகசியக் கடிதங்கள். அன்பர்கள் குறிப்பிட்டுள்ள இலக்கியத் திருட்டு ரகசியத்தை எப்போதோ, நான் அறிந்தவன். இங்கே பாருங்கள், இந்த அயல்மொழி நூல்களை. இவற்றைத் தமிழாக்கி வெளியிட அனுமதி கோரியிருக்கிறேன். அனுமதி பெற்று, இவற்றை வெளியிட்டால் ஐந்தாறு பேர்வழிகளின் புகழ் ஆலாய்ப் பறந்துவிடும்!...இப்படிப்பட்ட ரசிகர்களின் 'தைரியத்தை'ப் பார்க்கையில்...எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது!"

"வாஸ்தவம்தான் ஸார். புதுமைப்பித்தன்கூட, பிறர் கதைகளைத் திருடுவதைப்பற்றி..."

"தெரியும், தெரியும்!...புதுமைப்பித்தன் தலைசிறந்த கதாசிரியர். என் வணக்கத்துக்குரியவர். என்றாலும், சிருஷ்டி முடிச்சுக்குக் கட்டுப்பட்டோ என்னவோ, அவர் பெயரிலும் கூட சில்லறைக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன!...ம்... அவரைப்பற்றி மட்டுந்தானா?...ம்.........அமரரானவர்களைப் பற்றியெல்லாம் இப்பொழுது பேச எனக்கு மனம் வரவில்லை!"

"உண்மைதான்!"

"இன்னொன்று. புதுமைப்பித்தன் பெயரால் அவருக்குப் பின் வந்துள்ள சில புத்தகங்கள், தொகுப்புகளிலேகூட மேற்படி குற்றச் சாட்டுகள் பிறந்திருக்கவும்கூடும்! அவர் பேரை வைத்து அவலப் பிழைப்பு நடத்தும் திருக்கூட்டத்தின் தவறாகவும் இருக்கலாம். இப்படிக்கூட நான் ஐயப்படாமல் இல்லை!"

புதுமைப்பித்தன் 'ரசமட்டம்' ஆன 'திருவிளையாடல்' புராணமாக விரிந்தது:

திரையுலகின் மாரீசத்தனத்தைப் பற்றிய சூடான பேச்சும் இடம் பெற்றது. 'முதல் காளாஞ்சி' என்ற கதையைக் காப்பியடித்து திரையிடப்பட்ட 'நாட்டுக்கொரு நல்லவள்' குறித்த விஷயமும் அம்பலமானது.

உண்மையான இலக்கியப்பணி செய்த இலக்கியப் பெரு வள்ளலைப் பற்றிய பேச்சில் உரையாடல் முற்றுப் பெற்றது.

விடை பெற்றுச் சென்றார்கள்.

'சினிமாக்காரர்களைத்தான் ரசிகர்கள் பார்க்கத் துடியாய்த் துடிப்பது வழக்கம். ஆனால் என்போன்ற எழுத்தாளர்களைக்கூட பார்ப்பதற்கு தவம் கிடக்கும் ஆட்கள் இருப்பதிலிருந்து, தமிழ் இலக்கியத்துக்குள்ள நன் மதிப்பு என்றுமே மாறாது; குறையாது என்பது புலனாகிறது...!'

வந்திருந்த கதைகளின் உறைகளைப் பிரித்தார்.

ஒருகதை பளிச்சென்றிருந்தது. 'குந்தவ்வை' என்று பெயருடன் கூடிய கதாசிரியையின் கற்பனை அது. யாருமற்ற அருமைப் படைப்பான அபலையின் கதை அது. பிரசுரத்துக்குத் தேர்வு பெற்றிருப்பதாகக் கடிதம் அனுப்பச் செய்துவிட்டு, 'போனேக்ராம்' ஒன்று அனுப்பவும் ஏற்பாடு செய்தார் ஞானசீலன்.

செய்தி: "வருகிற வெள்ளிக்கிழமை புறப்படுகிறேன். பிற நேரில். ஞானசீலன்."

## 13. யார் இந்தக் குந்தவ்வை?

ருஷ்யநாட்டுச் சிறுகதைத் தொகுப்பின் முதல் ஏட்டைப் புரட்டிய பொழுது, ஞானசீலன் எழும்பூர் சந்திப்பைக் கண்டார். அந்தப் புத்தகத்தின் கடைசி ஏட்டைப் படித்து முடிந்தபோது, தஞ்சாவூர்ச் சந்திப்பைத் தரிசித்தார்.

விழுப்புரத்தில் வாங்கிய தமிழ்ப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கையில், அச்சுப்பிழைகள் மலிந்த ஒரு பகுதியைப் திரும்பத் திருப்பப் படித்தார். அச்சகமொன்றில் பிழை திருத்தும் குமாஸ்தா ஒருவன், தன் பெயரும் ஒரு புத்தக அட்டையில் வரவேண்டுமென்று ஆசைப்பட்டு, அந்த அச்சகத்தில் வேலைக்கு வந்திருந்த மற்றொரு பிரபலமான ஆசிரியரது தொகுப்பின் மேலட்டையில் அவர் பெயருக்குப் பதிலாக தன் பெயரை 'கம்போஸ்' செய்து அழகு பார்த்து, அமைதி பார்த்த விந்தைக் கதைதான் அவருக்கு மனத்தில் பளிச்சிட்டது. கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார். தமிழ் இலக்கிய உலகம் சுழன்றது. 'ம்...இந்த ரஷ்யநாட்டுக் கதையை திருடிக்கூட தமிழில் எழுதித் தொலைத்து விட்டார்களா? ஊம். வரட்டும்!' என்று மன திற்குள் எண்ணிக் கொண்டார். "பாவம்!...மாரீசன்!" பேனாவை எடுத்து மண்டை உச்சியில் குத்திக் கொண்டார்.

பெட்டியைவிட்டு இறங்கினார். இறங்கும் பொழுது ஏதோ ஒரு 'பாக்கெட் எடிஷன்' தட்டுப்பட்டது. எடுத்துக் கொண்டு இறங்கினார்.

சரித்திரப் பெருமை உடலெடுத்த தஞ்சையம்பதியின் அழகும் அந்தமும் ஜங்க்ஷனிலேயே காணக்கிடைத்தன. முந்திரிப்பருப்பு, குடமிளகாய், வெட்டிவேர் கதம்பம் எல்லாம் மணம்பரப்பி மகிழ்ந்தன. விடிபொழுதின் இனம்புரியாக் குதூகலத்துடன் ஞானசீலன் உலாவிக் கொண்டிருந்தார். கதம்பம் நாலுமுழம் வாங்கிக் கொண்டார். அவருக்குள் ளாகவே நமட்டுச் சிரிப்பு நெருடிக் கொண்டு வெளிப்பட்டது.

ஐ. ஆர். ஆர். காப்பியிலும் சிகரெட்டிலும் அவர் புது ஜன்மம் எடுத்தார். தஞ்சையில் தங்கவேண்டிய நாட்களிலே தாம் செய்தாக வேண்டிய காரியங்களை நினைத்துக் கொண்டார். முதலாவதாக, தாம் எழுதவேண்டிய "தண்ணீர்த் திருவிழா" என்ற வளர்கதைக்குச் சுருக்கம் தயாரிக்க வேண்டும். பர்மியர்களின் வாழ்வின் நிலையைக்

களமாகக் கொண்டது அக்கதை. அடுத்தது, மங்கம்மா கதை. அதற்கு, சில சந்தேகங்கள் தெளிவு பெற வேண்டும். 'மதுரை நாய்க்கர்களின் வரலாறு' என்னும் சத்யநாதய்யரின் நூலை சரஸ்வதிமகாலில் புரட்டவேண்டும். அப்புறம், திரையுலக நண்பர் ஒருவருக்காக 'ட்ரீட்மெண்ட்' ஒன்று தயாரிக்க வேண்டும். அது முடிந்தால், நிலவுப்பதிப்பகத்தார் வெளியிடவிருக்கும் அவரது நாவல்களின் அச்சுப்படிகளைச் சரி பார்க்கப் பொழுது சரியாகிவிடும். 'எல்லாம் முடிய பத்து—பதினைந்து நாட்கள் போதுமா?... இதற்கிடையில்தான் நான் என் வாணிக்கும் பதில் சொல்லவேணும். இல்லையா?...ம்!...'

வாணியின் பெயர் அவளுடைய எழிலை நினைவூட்டிற்று. அவளது எழில் அவளுக்குரிய பெண்மையின் மென்மையை நினைவூட்டியது; அந்தப் பெண்மையின் மென்மை அவருக்குகந்த கடமையின் நிறைவைச் சுட்டியது. அவளது கடமையின் நிறைவில் அவளது ஏழைமை, சுடச்சுடரும் பொன்னுக ஒளிர்ந்து பளிச்சிட, அவள் கோதண்டபாணி என்ற கோர்ட் அமீனுவின் மகளாக இருந்த உறவுடன் திருமதி ஞானசீலன் என்னும் புதிய உரிமையையும் ஒட்டிப் பிடித்துக்கொள்ளவிருக்கின்ற 'வாழ்க்கை ஒப்பந்'தத்தின் நிழல் அவரை மடக்கியது. மடங்கிய ஞாபகசக்தியில் வாணி சக்தியாய் நின்ருள்.

'வாணி!...'

இந்தப் பெயர்ப் பஜனையுடன்தான் அவர் எட்டாம் நம்பர் பஸ் பிடித்து, பாம்பாட்டித் தெருவை அடைந்தாரோ?...

பாசமும் பாசமும் ஆரத்தழுவிக் கொண்டன.

"அம்மா!..."

"தம்பி!"

"இப்ப உங்க உடம்பு பரவாயில்லீங்க. மெட்டடோன்டானிக் பரவாயில்லேதானே?..."

"ஆமா தம்பி. ஆனு, நீதான் கொஞ்சம் இளைச்சிருக்கிருப்பிலே என் கண்ணுக்குத் தோணுது!"

"நீ என்ன அம்மா! இப்போ நான் நாலு ஐந்து பவுண்ட் கூடுதலாகவே இருக்கேன். உங்களுக்கு எம்மேலே இருக்கக் கூடிய பாசத்துக்கு நான் ஒரே மூச்சிலே ஒரு நூறு பவுண்ட் எடை கூடிவிட்டால்கூட, உன் தாய்மனம் திருப்தியடை யாதே!...இல்லியா அம்மா?" என்று சாங்கோபாங்கமாக உரை யொன்று நிகழ்த்தி, பெற்றவளைச் சமாதானப்படுத்த வேண்டியவரானார் அவர்.

அன்னைக்கு ஆறுதல் ஊட்டியதும், அவரது விழி நோக்கு, வழி ஒன்றை இலக்குச் சுட்டிச் சுற்றியது. 'வாணி எங்கே?'

சென்ற முறை வந்த தருணத்தில், வாய்த்திட்ட நல்லதிர்ஷ்டத்துக்கு நிகராக, அவர் அவளைச் சந்தித்த பாங்கை யும் பாவனையையும் நினைவுக் குழியில் தேக்கினார். நிலைப்படி மறைவில் நின்று தம்மைப் பார்க்கவேண்டி, கள்ளவிழிப் பார்வையைத் தூது அனுப்ப, அதே சடுதியில் தானும் நேர் முகப் பார்வையை பதிலுக்கு அனுப்பிய விவரத்தையும் அவர் மறக்கவா, வாணியின் நினைவில் இப்பொழுது மனம் சுற்றி யலைகிறார்?...

கூப்பிடு தொலைவில், கூப்பிடாமல் ஓடிக் கொண்டிருந்த 'பொங்கு விரிகாவிரி'க்கு ஓடினார்; அன்னை கொடுத்த காலைக் காப்பி தொண்டைக்குள் நின்றது. பாசம் தொண்டை நிரம்பியதாயிற்றே? மானம்புச் சாவடித் துண்டை இடிப்பில் கட்டிக்கொண்டு சோப்புப் பெட்டியுடன் படிக்கட்டில் இறங் கினார். புது வெள்ளம் வந்திருந்த புதிது அல்லவா? ஊழிக் கூத்துத் தெய்வத்தின் சித்தமாக காவிரி பொங்கியது.

முதல் முக்குழிப்பு முக்குளித்து எழுந்தார் ஞானசீலன். உதய சூரியனின் ஒளிக்கற்றைகள் அவருக்கு இதம் தந்த விதத்தை அனுபவித்தவராக, தலையை உயர்த்தி நீர்மட் டத்தை விட்டு எழுந்தபோது அவர் கண்ட காட்சி அவருக்கு மலைப்பைக் கொடுத்தது. அவர் தம்முடைய தலையைத் தாழ்த்திக்கொண்டார். ஆனாலும், அவரையும் மீறிய வகை யில் அவர் கண்கள் எதிர்த் துறைக்கு நாடி ஓடின.

அழகு அங்கு அவதாரம் எடுத்துக் கொண்டிருந்தது.

அழகின் ஆதரிசமா அது?

ஆஹா!...

தம்மைப் பார்த்துவிட்ட வாணி குறுவிழி குறுக்கி, இதழ் நகை விரித்து, இளநெஞ்சம் விம்மி, எட்டி நின்றபடியே ஓட்டி வந்து, பேசாமல் பேசிவிட்டாளே பேரழகி வாணி?...

ஞானசீலன் முதல் முறையாக நாணம் ஏந்தினர். குளிர் போன இடம் தெரியவில்லை. ஆனால் குமரி வாணி போன இடமும் அவரது குதூகலம் புறப்பட்ட இடமும் அவருக்கு அத்துபடி.

புத்துணர்ச்சி பெற்றுப் பலகாரம் சாப்பிட்டு முடித்தது, ஞாலசீலனின் ஓரக்கண் பார்வைக்கு ஒயிலான இலக்குப் புள்ளியானுள் வாணி. தளரமுடிந்த கூந்தல் அவர் பார்வையில் தட்டுப்பட்டது. வழக்கம்போல, அதே நிலைப்படி மறைவில்தான் இப்பொழுதும் அவள் நின்று கொண்டிருந்தாள்.

' வாணி, வா...!" என்று கூப்பிட்டார் அவர்.

பொய்க் கோபம் தாங்கி, உண்மை நாணம் ஏந்தி நடந்து வந்தாள், ஏந்திழையாள்.

"காப்பி...அம்மா தந்தாங்க!"

"இல்லையே, காப்பியை இப்பொழுது நீயல்லவா தருகிருய்?"

"நீங்கள் கதை எழுதுபவர்கள்..."

"நீயும் எழுதேன்!"

"தெரியாது."

"தெரிய வேண்டாம். உன்னையும் அறியாமல் நீ தான் கதை எழுதிக் காட்டுகிருயே; அதைப் பார்த்துத்தானே நான் நகல் எடுக்கிறேன்!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"நீ தான் கதை; அதாவது, நீதான் என் கதை; எனக்குக் கதை என்கிறேன். என் எழுத்துக் கடமையின் அர்த்த புஷ்டியான பிம்பம் அல்லவா நீ? நீ இல்லையேல் நான் இல்லை!"

"எனக்குப் புரியமாட்டேன் என்கிறதே!..."

"போகப் போகப் புரியும்!"

"சரி. அப்பா உங்களைப் பார்க்க வந்து விடுவார்."

"வரட்டுமே!"

"காப்பி...!"

"இதோ!"

"சாப்பிடுங்கள் என்றால்..."

"இதே...சாப்பிட்டாச்சு என்றால்..."

கள்ளச் சிரிப்பு அள்ள முடியாமல் வழிந்தது.

பூவையைப் பார்த்தவருக்குப் பூவின் நினைவு ரதம் ஏறி வந்தது. பூவை, பூவைக்கு எப்படிக் கொடுப்பது? 'கன்னிப் பெண்ணுக்கு கன்னி கழியு முன்னே ஆடவன், என்னதான் உறவும் உரிமையும் நிர்ணயிக்கப்பட்டாலும், கொடுப்பது உகந்த நாகரீகமாகுமா?...' அம்மாவிடம் கொடுத்துக் கொடுக்கச் சொல்வதை அவர் விரும்புவாரா?

"வாணி, என் தந்தி கிடைத்ததல்லவா?"

"ஓ!..."

"நல்லது."

"தந்தியைக் கண்டதும் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன்!"

"நல்ல விஷயத்தை இன்னும் கொஞ்சம் விரைவாக உனக்கு எட்டச் செய்ய ஆசைப்பட்டேன். நீ சொல்வதும் நியாயம்தான். பிறகுதான் எனக்கு நினைப்பு வந்தது, நீ பயப்படுவாயே என்று!..."

"ஒரு சேதி!"

"சொல்லக் கூடாதா?"

"பூ வாங்கி வந்திருக்கிறேன்!"

"யாருக்கு?"

"உனக்குத்தான்!"

"கொடுங்களேன்!"

"பேஷ், பேஷ்!"

இளம் பொற்கிரணங்கள் வெண்சாமரம் வீச, அருமைக் கனவுகள் ஆரத்தி எடுக்க, அன்னப்படகில் அமர்ந்து ராஜ வீதியைச் சுற்றிலும் பவனிவரும் அரசிளங்குமரிகூட இந்த வாணியிடம் தோற்றுப் போகத்தான் வேண்டும்!—இப்படி எண்ணியபடியே, பூவைக் கொடுத்தார்.

பூமணம் சூழ வியாபித்தது.

மலையாள நாட்டு டாக்டர் பாஸ்கர் ஒரு சமயம் சொன்ன வடக்கன் பாட்டு ஒன்று அவருக்கு மனப்பாடமாகியிருந்தது.

"...வயநாடன் மஞ்சள் முறிச்ச போலெ
குன்னத்துக் கொன்னையும் பூத்த போலெ
இளமாவின் தய்யு தளிர்த்த போலெ
கதிரவனுய தின் வர்ணம் போலெ
எந்து நிறமென்னு சொல்லேண்டு ஞான்!..."

வாணிக்காகத்தான் அப்பாடலைக் கேட்கும் சந்தர்ப்பம் கைகூடியதோ? வயநாடன் மஞ்சள் தேய்த்ததும் ஒளிர்வதைப் போலவும், குன்றில் ஒளிரும் கொன்றைப் பூவைப் போலவும் இளமாந்தளிர் போலவும், கதிரவனின் செந்நிறம் போலவும் இருந்தாளாம் அந்த அழகி!...ஏறக் குறைய அர்த்தம் பொருந்தியிருந்தது போலவே பிரமை, எப்போதோ கேட்ட பாட்டு.

'இந்த அழகிக்கு என் வாணி குறைந்தவளா என்ன? ஊஹும், ஒரு பொழுதும் இல்லை!...' என்று எண்ணிப் பெருமைப்பட்டு, அந்தப் பெருமையில் பெருமிதம் கண்ட சமயத்தில், 'காதல் என்பது சிறுபிள்ளை விளையாட்டுப் போல' என்று

தம் தொடர்கதையில் குறித்த வாசகம் நினைவில் புரண்டு கொடுத்ததைச் சட்டை செய்யாமல், புரட்டி விட்டவாறு, தம் சட்டையை உதறிக் கொண்டே எழுந்து மீண்டும் குறிச்சியில் சாய்ந்து ஏப்பம் ஒன்றைத் துல்லியமாக வெளியேற்றினார்.

வாணியின் மோகம் மண்டிய விழிகளில் குளித்து நெஞ்சம் புகுந்து மீண்டும் திரும்ப விரும்பினார் ஞானசீலன். அவ்வாறே செய்யவும் செய்தபோது, அவருக்குக் கடல் முத்துப் போல சிந்தனைகள் சில கிடைத்தன. அவர் தமக்குத் தாமே முணு முணுத்துக் கொண்டார்.

'...கனவுகள், நெஞ்சத்தில் நிர்ணயிக்கப்படு கின்றன; ஆனால், திருமணங்களோ சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!'

ஆசைகள், கனவுகளில் நிச்சயிக்கப்படுகிகின்றன; ஆனால், திருமணங்களோ மண்ணில்தான் நிர்ணயிக் கப்படுகின்றன!

கண்ணும் கண்ணும் பேச, வாணி ஞானசீலன் இருவரும் வாய்மூடி மௌனிகளாயினர். அந்த நாளிலே, மாமல்லரும் சிவகாமியும் கட்டுண்டிருந்ததாக 'கல்கி' வர்ணித்தார் அல்லவா, அம்மாதிரியாக!...

கோசலை அம்மாள் வந்தாள். வந்து, வைகாசி முடிவில் திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்றாள். வாணியின் தந்தை கோதண்டபாணியும் 'உம்' கொட்டினார்கள்.

வாணி புறப்பட்டாள்.

நெஞ்சில் இடம்பிடித்திருந்த நேரிழையாள் வாணி அவ்வளவு லகுவாகப் புறப்பட்டுப் போய்விட விடுவாரா, என்ன?...

ஞானசீலனைப் பார்க்க சரபோஜி மன்னர் கல்லூரித் தோழர்கள் வந்தார்கள். எல்லோரும் அந்திமாலையில் காப்பி சாப்பிட்டுவிட்டு மணிக்கூண்டில் சிமெண்ட் பெஞ்சியில்

அமர்ந்தார்கள். டிராயிங் மாஸ்டரும் சிறந்த எழுத்தாளரு மான லட்சுமணன், லேடி டாக்டர் மகன், எத்திராஜ், கணித ஆசிரியர் சண்முகசுந்தரம், பாப்புலர் டயர் கம்பெனி மானே ஜர் ஆகிய 'ஜமா' சேர்ந்தது. அவரவர்கள் விடை பெற்றதும். வழக்கமாகச் சந்திக்கும் கலெக்டர் ஆபீஸ் பெண்ணையும் சந் தித்தார்கள். மௌனமான குறுஞ்சிரிப்பு இடைவழியில் வழிந்தது!

வீட்டுக்கு வந்ததும், இருட்டியது. வீட்டில் மிதந்த ஒளியில், தம் தோல்பையைப் பிரித்தார் ஞானசீலன். ரெயில் பெட்டியில் கிடைத்த புத்தகத்தைப் புரட்டினார். 'பெங்கு வின் புத்தகம்' அது. அதைப் புரட்டியபொழுது, ஒரு கார்டு இருக்கக் கண்டார். 'குந்தவ்வை' என்ற கதாசிரியைக்கு கதை தேர்வு பெற்ற விவரம் சொல்லி தாம் அனுப்பிய கடிதம் அது. 'அது இங்கே எப்படி வந்தது?...யார் இந்தக் குந்தவ்வை?...'

பையைப் பிரித்த அவர் கையில் டைரி ஒன்றும் தட்டுப் பட்டது. அது வாணியின் டைரி!...

புரண்ட நாட்குறிப்பின் தாள்களிலே ஞானசீலனது நெஞ்சின் அலைகளும் புரண்டன; நெஞ்சின் அலைகளிலே விழி களது சுடுநீரின் அலைகளுமா புரளவேண்டும்?...

## 14. ஸ்ரீராமகிருஷ்ணரும் மஹாத்மாவும்!

மனிதனை எண்ணங்கள் ஆளுகின்றன.

அதுபோல, எண்ணங்களை மனிதன் ஆளுகிறான்.

காலத்தினால் மனிதன் சிறக்கிறான்.

மனிதனால் அவனது காலம் சிறக்கிறது.

காலத்தைக்கொண்டு மனிதனும், எண்ணங்களினால் அவனதுமனிதத் தன்மையும் வரலாற்றுச் சிறப்புப் பூண

வேண்டுமென்ற தனிப்பண்பு எல்லோருக்கும் உண்டானல் கூட, அவர்கள் எல்லோருமே வரலாற்று மகிமை பூண்டொழுகி விட முடியாது.

காலத்தின் நியதி புதிர் மயமானது; அதே கதியில் மாயை நிரம்பியது.

பிறப்பால் பெருமை பெருத எத்தனையோ பிறப்புக்கள், வாழ்வால் பெருமை பெற்றிருக்கின்றன.

வெறும் மனிதர்களாகத் தோன்றியவர்கள், மனிதாபிமானம் கிட்டிய மனிதர்களாக உலக அரங்கில் ஒருசிலர் நடமாடியிருக்கிருர்கள்.

இவ்வாருக, சரித்திரபூர்வமான சிருஷ்டியாக வரலாற்றேடுகள் தம்மை வருணிக்க வேண்டுமென்னும் ஆதங்க வெறியுணர்வுடன் வாழ்க்கை என்கிற சோதனைக் களத்தில் லட்சியச் சித்துக்கள் விளையாடி, அவ்விளையாட்டில் 'கெலிக்க' அஷ்டாவதானம் செய்து போராடி வாழ்ந்து காட்டிய பெரியார்களின் கதைகள் ஒன்ரு, இரண்டா?

இப்படிப்பட்ட சரித்திர புருஷர்களின் கதைகளை நாலு பேர் முன்னிலையில் சொல்ல வேண்டுமென்று ஞானசீலன் வெகுகாலமாகவே ஆசைப்பட்டது உண்டு. அவ்வாசை இப்பொழுது நிறைவேறிற்று. திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரியின் மாணவர் அவை அவருக்கு ஓர் அழைப்பு அனுப்பியது. பழைய மாணவர் என்ற 'ஹோதா,' வளர்ந்துவிட்ட எழுத்தாளர் என்ற மரியாதை, தாய்நாட்டுமண் எனும் பாசம், அழைப்பை ஏற்ருர். அவர் எழுத்துக்களை விரும்பும் மாணவ மாணவிகள் ஏகப்பட்ட பேர்களின் பாசமும் சேர்த்தி. முக மலர்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். உழைத்துக் குறிப்புக்கள் சேகரம் செய்வதில் சில நாட்களும், சேகரித்த குறிப்புக்களை மனத்தில் ஊறப்போட்டுச் சிந்திப்பதில் சில நாட்களும் ரம்மியமான பொழுதுபோக்கு ஆயின. பின்னர், திருச்சியில் முதல் வாரத்தின் தொடக்கத்திலும், அப்புறம், வாரத்தின் கடைசி நாளிலும் அவர் உரை நிகழ்த்திஞர். 'துறவு நெறி'

என்பதுபற்றி ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றியும் 'அறநெறி' என்பது குறித்து அண்ணல் காந்தியடிகளைக் குறித்தும் பேசினர். சிறுபிள்ளை நாட்களில் 'வாயில்லாப் பூச்சி'யாக விளங்கியவர் தம்முடைய பேச்சுத் திறனால் எவ்வளவு உள்ளங்களை வசப் படுத்திக்கொண்டு விட்டார்! சமுதாயத்தின் பொதுக் கண்ணோட்டத்தில், பேச்சுத்தான் முதல் கவர்ச்சியாக பொது மக்கள் மனத்தில் பதிகிறது. அப்புறம்தான் எழுத்து.

'...சிருஷ்டித் தத்துவப் புதிரின் பிரதிநிதியாகத் தோன்றிய மனிதனின் பலத்துடனும் பலவீனத்துடனும் தோன்றிய காந்தி, அன்பின்பால் வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையாலேயே 'மகாத்மா'வாக ஆக முடிந்தது!...சாதாரண மனிதர்களைப் போலவே அவரும் சிறுவயதில் காமக் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த உண்மையை எவ்வளவு மனத் துணிவுடன் ஒப்புக்கொள்கிறார்! 'மகாத்மா என்னும் பட்டத்தினால் ஒரு கணப்பொழுதாவது நான் பெருமைப் பட்டுக் கொண்டதாக எனக்கு ஞாபகமில்லை' என்று பகிரங்கமான உள்ளத்தூய்மையுடன் அவரைப்போலச் சொல்லிக்கொள்ள வேறு யாரால் முடியும்? வங்காள மகாணத்தின் சிறு கிராமம் ஒன்றில் தக்ஷிணேசுவரர் ஆலயத்தில் அர்ச்சகராக வேலைபார்த்து வந்த ராமகிருஷ்ணர், அன்பின் முதிர்ச்சியால், குருவின் துணை இல்லாமலேயே பராசக்தியின் தரிசனத்தைப் பெற முடிந்ததை என்னவென்பது? உள்ளமே கோயில் என்றார் திருமூலர். 'தெய்வம் நீ என்றுணர்' என்று வழிமொழிகிறார் பாரதி. ஆக, அவரவர்கள் செயல்களே அவரவர்களை உச்சத்தில் ஏற்றிவைக்கின்றன!...'

குறிப்பு நோட்டைப் புரட்டிய அவர் பார்வையில் இவ்விதமான சிந்தனை நயங்கள் சில புரண்டன. குறுமணலில் உடம்பைப் புரட்டிப் படுக்கும் மண்ணுளிப் பாம்பைப்போல ஞானசீலன் புரண்டு படுத்தார். அள்ளித் தெளித்த மணலின் அடிச்சுவடுகளென, அவரதுநெஞ்சில் கால்பாவி ஊன்றிநடந்து கொண்டிருந்த வாணியின் நினைவுகளைப் பற்றிக் கொண்டு அவரும் அதே மணல் பரப்பில் கை கோர்த்து, மனம் பின்னி

நடந்தார். இப்படியாக ஜோடி சேர்ந்து நடந்தவாறே நாட்கள் சிலவற்றையும் நடக்கச் செய்தார். வெளியூர்ப்பயணம் சித்தித்த இந்த நாட்களிலே அவர் தமக்குத் துணையாக வாணியையும் வாணிக்குத் துணையாக அவளது அந்த டைரியையும் பாவித்த நிலையில்தான் நூற்றுக்கு நூறு உண்மை இருக்கின்றது.

அந்த நாட்குறிப்பு கண்களில் பட்டதுதான் தாமதம். உடனே குபுக்கென்று சுடுநீர் பொங்கித் திரள ஆரம்பித்தது இன்பமும் துன்பமுமான எண்ணங்களைச் சதா நோக்கிக் கொண்டிருந்த காரணத்தினால் சூடு பிடித்திருந்த அவரது மனம் எம்பி எம்பி அடங்கியது. அந்த நாட்குறிப்பு தன் பைக்குள் ஏன் வந்தது, எப்போது வந்தது என்பதற்குரிய ஆராய்ச்சி நடத்தக் கூடிய திடத்தில் அவர் இருக்கவில்லை. ஒவ்வொரு நடப்புக்கும் ஒவ்வொரு உள்ளர்த்தம் இருக்கத்தான் இருக்கும் என்னும் படியான உள்ளளுந்திய நினைவை இப்போதும் அவர் நினைத்துப் பார்த்துவிட்டு, சும்மா இருக்க ஒப்பவில்லை. வாணியிடம் அதுபற்றிக் கேட்கவேண்டும் என்றுதான் எண்ணித் துணிந்தார். காலத்தையும் நேரத்தையும் 'வா, வா' வென்று கூவி அழைக்கும் வானம்பாடியாக உருமாறினார் அவர்.

அப்பொழுதும் அவருக்கு அந்த நாட்குறிப்புத்தான் நினைவைத் தொட்டது.

ஏடு ஒன்று:

"...தெய்வத்தை நான் கண்டது கிடையாது. அதனால் என்ன? எனக்குத் தெய்வமாக விளங்குவதற்கு ஒரு ஐயா கிடைத்திருக்கிறார், இது போதாதா?"

ஏடு நாலு:

"...ஸ்ரீமான் கோதண்டபாணி அவர்கள் என் பேரில் எவ்வளவு தூரம் பாசம் வைத்திருக்கிறார்கள். இது பூஜா பலன் அல்லாது வேறு யாது?...பூஜா பலனாவது, ஒன்றாவது? அதையெல்லாம் நான் என்ன கண்டேன்?"

ஏடு ஏழு:

"...நன்றி சுரக்கும் நெஞ்சோடு நான் அல்லும் பகலும் அறுபது நாளிகையும் என்னுடைய அடி நாட்களை ஞாபகப் படுத்தியவாறேதான் இருந்துவருகிறேன். இந்த ஒரு பரிபக்கு வம் எனக்கு அப்பியாசப்பட்ட காரணத்தினுல்தான், என் னுள்ளே என்னையும் அறியாமல், ஒரு தியாக மனம் உருவாகிப் பக்குவப்பட்டு வருவதைக் காண்கிறேன். ஏனென்ருல், என் நிமித்தம்பல பல தியாகங்களைச் செய்யதவர்களுக்கு நான் நன்றிக் கடன் செலுத்தி ஆக வேணும். அந்தச் சந்தர்ப் பத்தை ஆண்டவன் எப்போது எந்த ரூபத்தில் எனக்கு அறி முகப்படுத்தப் போகிருரோ? நான் எப்படி உணர முடியும்? நான் அபலை; அதிலும் பெண்! ஆக, என் கடனை நான் பூர்த்தி செய்துதான் தீருவேன். இல்லாதுபோனுல், நான் என் மனச் சாட்சிக்கு மட்டுமல்லாமல், தெய்வ மறையாம் திருக் குறளுக்கும் அநீதி இழைத்தவளாக ஆவேன்."

ஏடு ஒன்பது:

கோமளம் என் பால்ய சிநேகிதி. அந்த நாளில் எனக்கு உண்டி கொடுத்தார் அவள் அப்பா. இப்போது செயலி ழந்து விட்டார். ட்யூஷன் சொல்லிக் கொடுத்த சம்பளத்தை தரவேண்டுமென்று எதிர்பார்த்தாள் அவள். அவ்வாறே செய்தேன். என்றையும்விட, அன்று தினம் ராத்திரி எனக்கு நல்ல தூக்கம் வந்தது.

ஏடு இருபது:

ஆகா! ஆசிரியர் ஞானசீலனின் எழுத்துக்களைப் படிக்கும் பாக்யம் கிடைத்ததே, அதுவே எனக்குப் பெரிய ஆறுதலாகத் தோன்றுகிறது. வாழ்க்கையை வாழ்க்கையாகச் சித்தரிப்பதில் வல்லவராகவே இருக்கிருர். அவர் அறிமுகம் கிட்டியதுகூட பூர்வஜென்மப் பலனுகத் தான் இருக்க வேணும். இல்லாது போனுல் எனக்கு அவர் பழக்கமும் அன்பும் கிடைத்திருக்கக் கூடுமா என்ன?

ஏடு இருபத்து மூன்று:

'அவர்' ரொம்பவும் நல்லவர். இதயம் படைத்த எழுத்தாளர். என்னையும் அறியாமல் என் அனுமதியையும் எதிர்பாராமல், என் உள்ளம் அவரையே சதா ஏன் நாடுகிறது?...

ஏடு முப்பது:

'அவர்' தன் கதையில் எழுதியிருப்பதில் ஒரு இடம் எனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. "தியாகம் என்ற குண நலன் சொல்லிக் கொண்டு வருவது இல்லை; சொல்லியும் தெரிவது கிடையாது. உள்ளத்தில் உதிரத்துடன் ஊறிப் பக்குவப்படுத்தும் இப்பண்புதான் மனிதனை மனிதனாக உயர்த்திக்காட்டுவது!" எவ்வளவு சத்தான வாசகம்!

ஏடு முப்பத்தைந்து:

கோசலை அம்மாள் சொன்னாள். அவர் என்னைப் பற்றிக் கேட்டாராம். தெய்வமே, இந்த ஒரு வரத்தையாகிலும் தா. என் மனம் அவரை விரும்புகிறது. ஆகவே, என்னைச் சோதிக்காமல், என் ஆசையைப் பூர்த்தி செய்!.

ஏடு முப்பத்தெட்டு:

எனக்கே ஆச்சர்யமாகப் போய் விட்டதே!...அவர் என்னிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்ட சமயம் நான் "என் நினைவு ஒன்றுடன் இங்கிருந்து புறப்பட்டு, அதே என் நினைவு ஒன்றுடனே அங்கிருந்து புறப்பட்டு வாருங்கள்!" என்று எப்படியோ 'டயலாக்' பேசி விட்டேனே!..."

நடந்த சிலவற்றை நினைத்துப் பார்க்கவும், படித்த சில குறிப்புக்களை மீண்டும் எண்ணிப் பார்க்கவும் முனைந்தார் ஞானசீலன். அவருக்கு அப்பொழுது தூக்கம் விழிகளைச் சுற்றியது.

பாம்புகளை ஆட்டிவிப்பவர்களுக்கென்று மராத்திய மன்னர்களால் நிர்மானிக்கப் பட்டதாகச் சொல்லப்படுகின்ற அந்தப் பாம்பாட்டித் தெரு நிச்சிந்தையாகக் கண்வளர்ந்து கொண்டிருந்தது.

# 15. அழகுத்தேவதையென வந்தாள்!

அந்தி மயங்குகின்ற நேரம்.

மனிதர்கள் மனங்களும் மயங்குகின்ற நேரம்.

பிள்ளைக்கனியமுதுகளைக் கண்டு பெற்றவர்களும் மற்றவர்களும் மயங்கினார்கள்.

காதல் சிட்டுகளை ஓரக்கண்ணால் பார்த்து, நெஞ்சில் நிறைத்துக் களித்து, மயங்கி எக்களித்தார்கள் இளம் பிள்ளைகள்.

பெரிய கோயிலின் பின் புறத்தே அமைக்கப்பட்டிருந்த புள்ளிமான் காட்டின் நடுவில் ஒட்டிப் போடப் பட்டிருந்த சிமிண்டுத் திட்டில் தாம்பத்ய மணம் மயங்கிக் கமழ்ந்தது.

இப்படிப்பட்ட மயக்கக் காட்சிகளை அழகுக் கவர்ச்சியுடன் திரையிட்டுக் காட்டிய பெருமை சிவகெங்கைத் தோட்டத்தைச் சார்ந்தது.

ஞானசீலன் கதர்த்துண்டை இடது தோளில் போட்டுக்கொண்டு, ஜிப்பாவும் தானுமாகப் புறப்பட்டுச் சுற்றி வந்து தோட்டத்தைச் சூழ்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்தார்கள் தோழர்கள். நிலக்கடலையைக் கொரித்துக்கொண்டே சிகரெட்டின் உறவு பொலிய அட்டணைக்கால் போட்டு உட்கார்ந்திருந்தார் அவர். கூடவிருந்த தமிழரசுக் கழகத்தின் சேலம் மகாநாட்டைப் பற்றிய பேச்சில் அவர்கள் கவனம் திரும்பியது. வடக்கெல்லைப் பிரச்சினையில் மடங்கியது. கடைசியில் எழுத்தாளர் வட்டத்தில் நின்றது. அவ்வப்போது ஞானசீலன் குறுக்கிட்டு தமது சொந்தக் கருத்துக்களை தமக்கே உரிய ஓர் அழுத்தத்தோடு தெரிவித்தார். மற்ற நேரங்களில் அவர் சிந்தனை வேறு ஏதோ ஒரு விஷயத்தில், அல்லது நடப்பில் ஈடுபட்டிருந்தது என்பதை அவரது நெற்றிச் சுருக்கங்களும்

நேத்திரங்களின் அமைப்புச் சுழற்சியும் அறிவித்துக் கொண்டிருந்தன.

பொழுது பட்டது.

ஒளி துளிர்த்தது.

"ஹல்லோ மிஸ்டர் ஞானசீலன்!" என்ற குரல் அவர் பிடரியைப் பிடித்து இழுத்து நிறுத்தியது. முகத்தில் முத்திட்டுப் பரப்பிய வேர்வையைத் துடைத்தார். பிறகு ஏறிட்டுப் பார்த்தார். இரு கண்களிலும் இரு உருவங்கள் தோன்றின. "வாருங்கள், சௌக்கியமா?" என்று நகைக்கீற்றின் பிரகாசத்தில் வாஞ்சையையும் பிரதிபலித்தார். அருகில், குனிந்த தலையை நிமிர்த்தி நிமித்திப் பார்த்தவளாக, அழகுப் பெண் ஒருத்தி நிற்கக் கண்டபோது, ஞானசீலனுக்கு மனத்தையும் புலன்களையும் என்னவோ செய்தது. எழுத்தாளர்கள், ஓவியர்கள் என்றால் அவர்களுக்குத்தான் அழகை 'உபாசிக்க'த் தெரியும். ஏனென்றால், அவர்களுக்கு அந்த அழகுதான் வாழ்வின் பொருளாகிறது. வாழ்வே அழகாகவும், அழகே வாழ்வாகவும் ஆகி முடிகிற ஒரு கட்டம், ஒரு விதி.

வந்தவர் மாசிலாமணி.

"உட்காருங்கள்."

"பரவாயில்லை. நான் போகவேணும். இதுதான் என் பெண்!...கமலாட்சின்னு பேர், முன்னே சொல்லியிருக்கேன். எங்கே உங்களுக்கு நினைவிருக்கப் போகுது?...உங்க கதையிலே நீங்க உண்டாக்கிற பேருங்களை நினைப்பு வைக்கிறதுக்கே உங்களுக்கு முடியாது! அம்மா, இவர்தான் கதாசிரியர் ஞானசீலன். ஸார், உங்களுடைய கதைகள்னா, என் பெண்ணுக்கு ஏகப் பித்து ஸார்!..."

அந்தப் பெண் கமலாட்சி, 'ஞானசீலன்' என்ற நாமத்தைக் கேட்டவுடன், எழில் மிகுந்த லாகவம் சொட்டிய பூக்கரங்களை நளினம் சேர்த்து உயர்த்தி, "வணக்கம் ஸார்!" என்றாள்.

ஞானசீலன் இயந்திர கதியுடன் பதிலுக்கு வணங்கினார். ஆனால் அவரது உள்மனம், அன்றொரு நாள் இதே பெரியவர் வந்து தம் அருமைத் திருமகளின் போட்டோவை நீட்டியதை நினைவு கூர்ந்த விவரத்தையும், அது சமயம் அப்படத்தைப் பார்த்த சடுதியில் தம் இலக்கிய நெஞ்சம் உள்ளூர அந்த அழகியின் அழகை வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்த நடப்பையும் எண்ணமிடலானார். உண்மைதான். அன்று நான் கருதியது மெய்தான். இது மாதிரியான ஓர் அழகியை இதுவரை நான் கற்பனை செய்து பார்த்தது இல்லையே!... அப்படியானால் என் படைப்புத் தொழிலில் நான் தோற்றுத்தான் போய்விட்டேனா?...' அதுவரை அனுபவித்துணர்ந்திராத ஏக்கமும், வேதனையும், சடனையும் அவர் மனத்தை நெகிழச் செய்தன.

ஞானசீலனுக்கு மீண்டும் அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று துடிப்பு வந்தது; பார்த்தார். கமலாட்சியின் முகத்தில் வாணி தோன்றினாள். உலாவப் புறப்படுவதற்குச் சற்று முன்னர்தாம் வாணியை அவர் வீட்டில் சந்தித்தார். ஏதோ ஒன்றைச் சொல்லத் தவிப்பது போலவும், பிறகு அத் தவிப்பு சமனம் ஆகிவிட்ட மாதிரி தன்னடக்கம் கொண்டவள் போலவும் அவள் நின்று, பின், திரும்பிவிட்டாள். இப்படிப் பட்ட இரண்டுங்கெட்ட கட்டத்தில் நின்ற வாணியை நான்கைந்து சந்தர்ப்பங்களில் அவர் கண்டது உண்டு. ஒவ்வொரு முகக் குறியையும் மனோதத்துவத் தராசினால் எடை போட்டுப்பார்த்துக் கேட்பது என்பது நடக்கவல்ல காரியமா? அவ்வாறு கேட்பதுதான் நாகரீகமா?

கமலாட்சியைப் பார்த்தார். அதே காலப்பிரமாணத்தில் அவளும் அவரைப் பார்த்தாள். வாணியைப்போல இவளும் ஏதோ சொல்லத் துடித்ததாகவே அவர் உணரவேண்டியவர் ஆனார். இவளிடமும்தான் எப்படிக் கேட்பது?

காற்பெருவிரல் புழுதியில் நகக்கோலம் போட நின்றாள் கமலாட்சி.

"ஸார், வாருங்கள், நம் வீட்டுக்குப் போவோம். வாசலில் வண்டி கிடைக்கும். போய்விடலாம்." சொல்லும்போது உடம்பு புல்லரித்தது. ஆண்டவனின் சிருஷ்டி மேதா விலாசத்திற்கு ஓர் அத்தாட்சிபோல வந்து நின்று தரிசனம் தந்த அந்த அழகுத் தேவதையுடன் ஒரே வண்டியில் அமர்ந்து கொஞ்சப் பொழுது செல்ல நேரிட்டால்கூட, அதுவே தம் பாக்கியம் என்பது அவர் நினைவு; அது அவர் கனவுங்கூட!... வாணி ஒருத்தியைப்பற்றித்தான் அவர் இதுவரை தனிமையில் அமர்ந்து ஒரு தடவைக்கு மேலாக நினைத்து அகமகிழ்வது வழக்கம். ஆனால் இப்பொழுது கமலாட்சியைப்பற்றி ஏன் பலமுறை நினைக்கிறார்?

அடிப்படைக் குறைபாடுகளுடன் கூடிய மனிதனின் மனம் நேரம்—காலம் ஒன்றில்லாமல், சலனப்பட நேருவது இயல்பு.

ஞானசீலன் நண்பர்களிடம் சொல்லிக்கொண்டார்.

அதற்குள், பெரியவர் திரும்பி ஞானசீலனை வெளியே கூப்பிட்டார். "மிஸ்டர் ஞானசீலன். இந்தாருங்கள் இன்விடேஷன். என் மகளுக்குக் கல்யாணம். விஜயபுரத்தில் மேரேஜ்: வைகாசி கடைசியில் தேதி. அவசியம் தங்கள் அம்மாவை அழைத்துக்கொண்டு வரவேண்டும்," என்று சொல்லி முகூர்த்தப் பத்திரிகை ஒன்றையும் நீட்டினார்.

நடுங்கிய கரங்களை நீட்டிப் பெற்றார் ஞானசீலன். கண்களின் கலக்கத்தை அவளுக்கு உணர்த்த விரும்பாதவர்போல, கலங்கிய விழிகளால் அவளது அந்தப் பேசும் விழிகளைப் பார்த்து விட்டுத் திரும்பினார். "அவசியம் வருகிறேன்; நம் சொந்தத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்பதுதான் என் கவலையெல்லாம்."

தான் இதே பெண் கமலாட்சியை மணம் புரிந்துகொள்ள முடியாதென்றும், வாணிதான் தனக்கு இனி சகலமும் என்றும் அன்னைமூலம் செய்தி அனுப்பியவர் அல்லவா அவர்?...

"வீட்டுக்கு வந்து காப்பியாவது சாப்பிட்டுவிட்டுப் போனால்தான் எனக்கு மனசுக்கு ஆறுதலாக இருக்கும்."

"அதனுல் என்ன? இன்னெருதரம் ஆகட்டும். கமலாச்சிக்கும் அவள் புருஷனுக்கும் ஒரு விருந்து வையுங்களேன், வருகிறேம். இப்பொழுது டயம் ஆகிடுச்சு. கார் பெட்ரோல் போடப் போயிருக்குது: நாங்க இப்படியே கொஞ்ச தூரம் நடந்து போய்க் கொள்கிறேம். வரட்டுமா?"

அழகி மறைந்தாள்!

அழகு மறையவில்லை!

வந்த நண்பர் படையுடன் திரும்பினுர் ஞானசீலன்.

ராஜா மிராஸ்தார் ஆஸ்பத்திரி, தாமஸ் ஹால், பஸ் ஸ்டாண்டு, மணிக்கூண்டு, ஞானம் டாக்கீஸ், டவர் டாக்கீஸ், சாக்கடைத் தேக்கம், கீழவாசல் மார்க்கெட் குணங்குடி தாசர் ஷர்பத் ஸ்டால் என்று நடை தொடர்ந்தது.

ஞானசீலனும் தொடர்ந்தார்.

அவருடன் அழகும் தொடர்ந்தது.

கீழவாசல் திருப்பத்தில் அவர் விடை பெறுமுன், பஜார் போஸ்டாபீஸ் தெரு வழியாக ஒரு பெண் கடந்து செல்வதைக் கண்டார். பார்த்த முகமாக அது இருந்தது. தவசீலியாக இருக்குமோ என்ற ஐயப்பாடு அவருக்கு.

மசூதியில் எட்டு முறை மணி அடிக்கப்பட்டது.

## 16. நீரஜா—ஓர் உண்மை!

மனிதனின் பலவீனம்தான் கடவுளின் பலம்போலும்!

பலவீனத்தில் விளைந்த பலத்தின் இந்த மகத்துவம் ஒன்றேதான் சிருஷ்டிப் புதிரின் ரகசியமோ?

அடிப்படைக் குறைகளின் கூட்டு மொத்தப் புள்ளிதான் மனிதன்!—இந்த ஒரு நினைவுதான் ஞானசீலனின் மன அடி

வாரத்தில் அடிச்சுவடு பதித்திருந்தது. சலனத்தின் அலைகளில் நீந்தியவாறே அவர் வீட்டை அடைந்து நிலைப்படியில் கால் எடுத்து வைத்தார். அப்பொழுது, உள்ளே அம்மாவுடன் யாரோ பேசும் சத்தம் கேட்டது. குரலுக்கு உருவம் காண முனைந்தார். வாணியாகவே இருக்கும் என்று நம்பி, வாணி யாக இருந்திருக்கக்கூடாதா என்று ஏங்கி. இத்தகைய இரண் டுங்கெட்ட நிலையில், அக்குரல் யாருடையது என்று அனு மானம் செய்ய எத்தனம் செய்தபோது, அவரது முயற்சிக்குக் குறுக்கே சில வாசகங்கள் தெறித்துச் சிதறின.

கோசலை அம்மாள் சொன்னாள் :

"இப்ப எங்க பையன் எவ்வளவோ பரவாயில்லையே. முன்னாடி, அவரு இருக்கிறப்ப, இதைப் பார்த்தா எனக்கே சமயா சமயத்திலே கொஞ்சம் அருட்டிதான். ஏன்னா, சொல் பொறுக்காத தம்பி இது. 'ஊம்'னு போதும், மனசிக்குத் தப்பா பட்டதுன்னு போதும், வீடு குருக்ஷேத்ரம்தான், போங் களேன். சலனமும் சாந்தியும் தம்பிக்கு சர்வ சாதாரணம் ரொம்ப உணர்ச்சி வசப்பட்ட பிள்ளை இது. அவர் அப்ப தேசம் தேசம்னு பித்தாயிருந்தார். இது கதை கதைன்னு படிச்ச பட்டத்தை ஆலாப் பறக்க விட்டுப்புட்டு அவதிப்பட் டுக்கிட்டு இருக்குது. ஊம், எல்லாம் எங்க வாணி வந்திட் டால், சீலன் திருந்திடும் கட்டாயமாய்! வாழ்க்கை என்கிறது ஒரு யுத்தம்னு சொல்லுவாங்க. அதனாலேதான் போல நம்ம ளோட சுக துக்கத்துக்கு உண்டான அளவை வழங்கக்கூடிய ரேஷன் கார்டை பகவான் தன் வசம் வச்சுக்கிட்டிருக்கிறாரோ என்னமோ...?"

ஞானசீலன் நிலைப்படியைத் தாண்டினார். அதனால் மெல் லரவம் எழுந்தது.

"வாணி! அம்மாடி வாணி!" என்று குரல் கொடுத்தாள் அம்மா.

"நான்தான் அம்மா!" என்று நயமாகச் சொல்லி முடித்து மாடிக்கு விரைந்தார். முற்றத்தில் விழுந்திருந்த பால் நிலவுக்

கதிர்கள் மாடிப்படிகளை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. நுழைவாயிலின் ஓரத்தே வைக்கப்பட்டிருந்த ரேடியோவை 'ட்யூன்' பண்ணினார். அவர் மனம் பாட்டில் லயிக்கவில்லை. குறிச்சியில் சாய்ந்தார். 'அம்மா ரொம்பவும் கனகச்சிதமாக என்னைப் படித்து வைத்திருக்காங்க!...'

நீலவண்ண விதானம் வள்ளலாகி, இயற்கை எழிலை வரையாது வாரி வழங்கிக் கொண்டிருந்தது. கண்ணாடிப் பீலியிலிருந்து வழியும் பன்னீர்த் திவலைகள் மேனியில் பட்டால், பட்ட இடம் பட்டுப்போன்று தண்ணென்று இருக்கும். அப்படித்தான் நிலவும் இதமளித்தது. திங்களைப்பற்றி கம்பர் பாடிய கருத்து ஒன்று நினைவில் சிமிழ் திறந்தது—'பிரமன் படைத்த அண்டம் பழசாக ஆய்விட்டதாம். ஆகவே சந்திரன் என்னும் தச்சன் தோன்றி அதைப் புதுப்பிக்கின்றானாம்!...'

பால் நிலவில் பால்முகப் பதுமையின் ஞாபகம் சுடர் விட்டது. மாலையும் கழுத்துமாகத் தோன்றி, நினைவின் அற்புதமான வாணியை நெஞ்சின் காட்சிப் பொருளாக ஆக்க முயற்சிசெய்து கொண்டிருக்கையில், ஹிருதயத் தளத்தில் காக்காய் முள் குத்தினமாதிரி ஓர் உபாதை நிறைந்தெழத் தொடங்கியது.

ஒவ்வொரு மனித மனத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரட்டைக் குணங்கள் ராஜ்யபாரம் செலுத்துகின்றன. தீமைப் பண்புகள் தலைவிரித்தாடும்பொழுது, மனிதன் அவற்றுக்கு அடிமையாகும் கட்டத்தில். விதி சிரிக்கிறது. நற்பண்புகள் நாயகமாக விளங்கும் சமயத்தில், மனிதன் அவற்றால் மேலோங்கி விளங்கும் நிலையில், தெய்வம் சிரிக்கிறது. இந்த மனம் சாமான்யமா? அமிர்தம் சுரக்கும் இடத்தில்தான் விஷமும் பிறக்கிறது!

கமலாட்சியும் வாணியும் மாறி மாறித் தோன்றிச் சிரித்தார்கள்.

ஞானசிலரே உள்ளத்தால் அழுதார். உள்ளத்தால் வாழ்வு நடத்தி ஒத்திகை பார்த்த பிறகே, உடலால் வாழ்வு நடத்த வேண்டும் என்று கொண்டிருந்த ஒரு புதிய தெளிந்த, தத்துவத்தைச் செயல் முறையில் கொண்டுவர ஆசைப்பட்ட வர் அவர். இப்பொழுது அந்தத் தவத்தின்புனிதம், கமலாட்சி யைப்பற்றிய சில கணப்பொழுதின் சலனம் காரணமாகக் களங்கம் அடைந்துவிட்டிருக்குமோ என்று பதை பதைத்தார். வாழ்வின் ஆதரிசத்தைக் குறியாக்கி வழிப்பயணத்தைத் தொடர்ந்து வரும் அவர், மாண்புமிக்க ஒரு பொக்கிஷத்தை, இம்மாதிரியான மனச்சலனத்திற்குக் கொத்தடிமையாகி, எங்கேனும் இழந்துவிட நேரிட்டுவிடுமோ என்று தவியாகத் தவித்தார். கண்கள் குளமாயின. 'என் வாணிக்குத் துரோகம் செய்துவிட்டேனே? ஊஹூம், இல்லை! மனிதவாழ்விலே சாதா ரணமாகக் காணக் கொடுத்து வைக்காத அந்தத் தெய்வீக சௌந்தர்யத்தைத் தரிசித்ததும், என்னை நான் இழந்து விட்டேன். எல்லாம் என்னுள்ளே வளர்ந்திருக்கும் கலையார் வத்தின் விளைவுதான்! கமலாட்சியின் படத்தைப் பார்த்த போதுகூட, என்னுள் வாழ்ந்த வாணியைத்தானே நான் நாளும் பொழுதும் பார்த்துக்கொண்டிருந்தேன்! ஆம்; மெய் தான். நாளை என் வாணியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டு அவளை என் மனைவியாக்கிக் கொள்ளப்போகிறேன்.'

மண்டை வலி கூடியது.

நெஞ்சுக் கனம் கம்மிப்படவில்லை.

சாய்வு நாற்காலியில் நன்கு முதுகைச் சாய்த்துக் கொண்டு கால்களை நீட்டி, 'அம்மாடி' என்று ஒரு முறை கொட்டாவி விட்டு விட்டு, கண்களை மூடிய பொழுதில், மானசீகமாகத் தோன்றிய வாணியின் அழகை அன்வயப் படுத்தி ரசித்தார் அவர். நாசிபுடங்கள் புடைத்தன. உடலில் இனம் மட்டுப்படாத ஊறல் ஏற்பட்டது. உடம்பு சுட்டது.

"வாணியின் வாழ்வில் ஏதோ சில உண்மையில் இருக்க வேண்டும். அவற்றை சந்தர்ப்பம் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும்", என்று சங்கற்பம் எடுத்திருந்த அவர், வாலிப்பான

வாய்ப்புக்காகக் காத்திருந்தார். ஸ்ரீமான் கோதண்டபாணி என்று பொதுப்படையாகக் குறித்திருந்தது அவருக்கு வேற்றுமையாகப்பட்டது.

வாணியின் டைரியை எடுப்பதற்காக, எழுந்து பீரோவை நாடி நடந்தார். வாணியின் டைரியைக் காணோம். அதற்குப் பதிலாக, வேறொரு டைரி தென்பட்டது.

ஏதோ ஒரு பக்கம் காற்றில் பறந்தது. மனப்புரவியும் பறந்தது.

குதிரைக்குக் கடிவாளம் உண்டு; மனத்திற்கு ஏது?

கறுப்புக் கொள்கையில் 'தட்டுக்கெட்டுத் தடுமாறி, நின்ற சமயத்தில், பெற்றவரின் தாய்நாட்டுப் பாசத்தையும், அன்னையின் பெற்ற பாசத்தையும் மதிக்காமல், 'கெட்டும் பட்டணம் சேர்' என்ற முன்மொழியைத் தொடர்ந்து சென்னை வந்தடைந்து, கடைசியில் அமைச்சூர் நாடகக் குழு ஒன்றிற்காகக் கதை வசனம் பாடல் எழுதிக் கொடுத்த நாட்களிலே, நாயகியாக நடித்தவளின் நாயகனாக 'வாழ்ந்து கெட்ட' சில நாட்களின் அவலப் பிழைப்பை அவர் இத்தனை நாட்களாக மறந்துதான் போனார். ஆனால் அவற்றை மறைக்க ஒப்பவில்லை! அந்த நாடகக்காரி நிரஜாவை விரட்டிவிட்டு இப்பொழுதும் வாணிதான் அவரது உள்ளத்து மேடையில் தோன்றினாள். மீண்டும் அவர் மனம் அடித்துக் கொண்டது. 'நான் என் வாணிக்குத் துரோகம் செய்துவிட்டேனா? இல்லை, இல்லவே இல்லை! நான் புது வழியில் திரும்பி எத்தனையோ வருஷங்கள் உருண்டு விட்டனவே...' அதே நிமிஷத்தில் தம்மையும் அந்த நடிகையையும் பிணைத்து 'கன்னா பின்னா' வென்று எழுதித் தீர்த்த 'மஞ்சல் பத்திரிகை'யையும் அவர் நினைத்துக்கொள்ள வேண்டியவரானார். மேற்படி மஞ்சள் பத்திரிகைகாரர்களை நேரில் சென்று வம்புக்கு இழுத்துத் திட்டிவிட்டு வந்த தீரத்தையும் நினைவு கூர்ந்தார். ஆகக்கூடி, அவை எல்லாம் சேர்ந்து அவரைக் குடைந்தெடுத்தன. வெட்கம் பிடுங்கித் தின்றது. ரத்தக் கண்ணீர் சுரந்தோடியது.

அம்மா சாப்பாட்டுக்குக் கூப்பிட்டாள்.

கீழ்த்தளத்துக்கு இறங்கி வந்தார். அமைதியும் இரங்கி வந்தது!

'இலக்கியத் திருட்டுக்கள்' பற்றி நடப்பு மாதத்துக்கு எழுதியிருந்த கட்டுரை 'கம்போஸ்' ஆகி வந்திருந்தது. பகிரங்கமாக எழுதியிருந்தார்; குற்றவாளிகள் சிலர் கூண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். 'இவர்கள் தங்கள் குற்றங்களை இனியும் உணராவிட்டால், நடக்கவிருக்கும் எழுத்தாளர் மாநாட்டிலும் இவர்களை மேடையேற்றிவிட வேண்டியது தான்!'

ஒரு வாரத்தில் வந்துவிடுவதாகக் கூறி வந்தவர், மறு முறையும் தம் முதலாளிக்குத் தபால் எழுதினார். அதில், தாம் வாணியையே மணக்க முடிவு செய்திருப்பதாகவும் சேர்த்திருந்தார்.

விடிந்ததும், வாணி வருவாள். அவளிடம் நாட்குறிப்பு விருத்தாந்தங்களைப்பற்றி அறியவேண்டும். இது ஞானசீலனின் திட்டம்.

முகம் கழுவிச் சாப்பிட உட்கார்ந்தார். விபூதி மடல் தெரிந்தது. துளி எடுத்து நெற்றியில் பூசினார்; அமர்ந்தார். திருவாரூர் மாசிலாமணி வந்துபோன விவரம் தெரிவிக்கப் பட்டது. இப்பொழுதும் அவரைக் கமலாட்சி ஆட் கொண்டாள்!

சில நிமிஷத் தேய்வு.

ஞானசிலனுக்கு அப்போது 'விடுதலை' கிடைத்தது.

ஆனால் அவரது இதயச் சிறையில் அடைபட்டுக் கிடந்த வாணிக்கு மாத்திரம் அப்போது 'விடுதலை' கிட்டவே யில்லை!

# 17. காதல்—ஒரு தத்துவம்!

நல்ல எண்ணங்களையும், மனிதத் தன்மைமிக்க மனத்தையும், உயர்வான நடவடிக்கைகளையும் அருளும்படி மனம் கனிந்து பிரார்த்தித்துப் படுத்தார் ஞானசீலன். அதே பிரார்த்தனையைத் திரும்பவும் அவர் படித்த நேரத்தில் பொழுது விடிந்தது.

வெள்ளிக்கிழமை.

கோசலை அம்மாள் குளித்து முழுகி, வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டுப் பலகாரம் செய்தாள்.

ஞானசீலன் அன்று தினம் மிகுந்த சுறுசுறுப்புடன் நடமாடினார். வாணியின் தூய்மையான அழகு முகத்தில் விழிப்பதற்காகவே தம்மையும் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற துடிப்புக் கொண்டார். நீராடினார். சுவாமி தோத்திரம் பாடினார். இட்டிலி சாப்பிட்டார். அன்றையத் தபால் வந்தது. புத்தகம் போடுவதற்கு முன் வந்து, ஆனால் 'கூலி' தருவதற்கு மாத்திரம் முன் வராத பதிப்பகத்தாருக்கு வேண்டிய அளவுக்கு 'மாப்பு' கொடுத்தும் பலன் ஏற்படாமல் போகவே, 'லாயர் நோட்டீஸ்' அனுப்பிவிட்டு வந்திருந்தார். மனிதர் இறங்கி வந்தார். இரங்கியல்ல—இறங்கி!...பணம் அனுப்புகிறாராம்!...அன்புக்குச் சட்டம் இல்லையென்றால், அதற்காக, அன்பின் சட்டத்தையே உடைத்தெறிய முற்பட்டால், பிறகு அதிகாரச் சட்டத்தை நாடவேண்டியதுதானே!- 'தமிழரசி' பத்திரிகையின் அதிபரிடமிருந்து தனிப்பார்வைக் கடிதம் ஒன்று வந்தது. நேரில் தெரிவித்த கலியாண சமாசாரத்தை நினைவுகூட்டி முடிவைத் தெரிவிக்கும்படி குறித்திருந்தார். 'நேற்றுத்தான் பதில் எழுதியிருக்கிறேன்!'

அடுத்த உறை, திரைப்படக் கம்பெனியின் முத்திரையைப் பெற்றிருந்தது. அது, ஞானசீலன் எழுதிய 'தமிழச்சி' என்ற

நாவலைப் படமாக்க அனுமதி கோரியும் விரைவில் புறப்பட்டு வந்து, சம்மானத் தொகையை நிர்ணயம் செய்து முன் பணம் பெறும்படியும் சொன்னது. திரை உலகின் தலைவாசலை மிதிப்பதற்குள், இந்த மூன்று நான்கு ஆண்டுகளிலே தாம் அனுபவித்த தோல்விகளையும் ஏமாற்றங்களையும் அவர் புள்ளி போட்டுப் பார்த்தார். கடுகத்தனைகூட இலக்கிய ஞானமே இல்லாத தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் இரண்டொருவர் பண்ணிய போலி ஆடம்பரங்கள். நடிகர்களுக்குப் பதிலாக, அவர்கள் பரமரசிகர்களாக நடித்த நடிப்பு; அவர்களுக்குத் தாளம் போட்ட கூஜாப் பேர்வழிகள்; எல்லோருக்குமே ட்ரேட் மார்க்கான ஸில்க் சட்டைகள்; மூலக் கதையைக் கேட்க 'பில்லியர்ட்ஸ் சிகரெட்' டின்னுடன் காத்திருந்த பைஜாமா டைரக்டர், பைஜாமாவை நம்பியிருந்த அப்பாவித் திரைக்கதை வசனகர்த்தா, அந்த வசனகர்த்தாவுக்கு வல்லினம் மெல்லினம் தெரியாவிட்டாலும், எக்ஸ்டிராக்களின் ஜாபிதாவை மனப்பாடம் செய்யத் தெரிந்திருந்த அந்தப் பிழைப்பு—இத்யாதி நிகழ்வுகள் திரைச் சுருள்களாக விரிந்தன.

"திரை உலகம் என்பது மாயாலோகம் ஸார். எதுவும் கண்ணுக்கும் மெய்யாக நடந்தால்தான் நிச்சயம்," என்று ஒருமுறை விந்தன் அவர்களும், மறுமுறை அந்நாளைய சிவாஜியும் படித்துப் படித்துச் செப்பின மதிப்புக்குரிய கருத்துக்களையும் அவர் மறந்துவிடமாட்டர்.

நிலா முற்றத்தில் பகல் செய்வோன் கதிர்களை கடைப் பரப்பியிருந்தான்.

'சினிமா சான்ஸ் கைகூடினுல் ஆண்டவன் கடாட்சம் தான். வாணியின் வருகை சுபசூசகமாகத்தான் அமையத் தொடங்கியிருக்கிறது. தமிழரசி பத்திரிகையின் வருமானமான இரு நூறு ரூபாயும் அடுத்த மாசத்துடன் நின்றுவிடும். ஏனென்ருல் என் பணியும் நின்றுவிடும். முதலாளியின் மனசுக்கு உகந்த காரியத்தைச் செய்ய முடியாமல் இருக்

கையில், அவர் உப்பை இனியும் 'தின்னலாமா? இனி நடக்க வேண்டிய பிழைப்புக்கு திரையுலகம் உதவினால் நல்லது தான். அம்மா, வாணி இருவரையும் அழைத்துப் போய்ப் பட்டணத்தில் குடித்தனம் ஆரம்பித்து விடலாம்.'

இவ்வாறு ஆனந்தமான மனேலயப் பின்னணியில் உட்கார்ந்திருந்தார் ஞானசீலன். மகிழ்வில் பூத்த மனம் சுந்தரக் கனவுகளைப் பின்னின.

மெல்லிளங் காற்று பூமணத்தைச் சுமந்து வந்தது.

பூமணம் பூவையைச் சுமந்து வந்தது.

வாணி வந்தாள். அவளுடன் அமுதச் சிரிப்பு வந்தது; கவின்மிகு பார்வை வந்தது.

"வா, வாணி," என்று உபசரித்து, "காப்பி எல்லாம் ஆகி விட்டதா?'' என்று விசாரித்தார்.

"ஆமாம்...ட்யூஷன் முடிந்தது. இனிமேல் ஸ்கூலுக்குப் போக வேண்டும். வழியில் பார்த்துவிட்டுப் போகவேண்டு மென்று வந்தேன்."

"அப்படியா? நல்லது!" என்று மொழிந்தார். ஆனந்தத் துக்குரிய திரைக் கடிதத்தை வாணியிடம் சமர்ப்பித்தார்.

அவள் ஆனந்தக் கடலாடினாள்!

"எல்லாம் உங்கள் திறமையின் அதிருஷ்டம்!"

"அப்படியா? பேஷ், பேஷ்! எல்லாம் நீ என் துணைவியாக வரப்போகிற அதிருஷ்டம் என்றல்லவா நினைத்தேன்!" என்று பதிலுரைத்துக் கொண்டிருக்கும்பொழுது, ஏன் அவளது அழகு முகம் அப்படிச் சிறுத்துக் கறுத்தது?...

இம்மாற்றத்தை அவர் கவனிக்கவில்லை. ஆனால், அவருடைய உள்மனம், வாணி தன் மனசுக்கு இனியவளான அந்த வரலாற்றை நினைந்து நினைந்து நெருக்குருகியது. தன் அன்னையின் பாசத்தைக் கவர்ந்துவிட்ட வாணி, பிறகு தம்மை யும் ஈர்த்த தன்மையை எண்ணினார். அதற்குள், 'என்னை நீங்கள் காதலிக்கிறீர்களா?' என்று சுட்டித்தனமாகக் கடிதம்

எழுதிக் கேட்டுவிட்ட அவளது அந்தரங்க சுத்தியான நேர் மைத்திறன் பாய்ச்சல் காட்டியது. அது முடிந்த கையுடன், "அம்மா, எனக்கு வாணியை நிரம்பவும் பிடித்து விட்டது!" என்ற முத்தாய்ப்பு வைத்த பவித்திரத்தையும் நினைவில் கொண்டார்.

'வைகாசி முடிந்தால் எங்கள் திருமணமும் முடிந்துவிடும்!' என்ற நினைவு முல்லைக்கொடியாக மனப்பந்தலில் படர்ந்தது. மணப்பந்தல் காட்சி தர, முல்லை மணம் சுகந்தம் வீச, மனமோகனக் கனவின் கதாநயாகியாக வாணி விளையாட, காலம் கரைந்தது.

அழைப்புக்கள் அச்சிடக் கொடுக்க அடுத்த வாரம் நல்ல நாளாம்!—வாணி தெரிவித்தாள்.

"ஓ. கே!"

காதல் பதுமையாக நின்றாள் வாணி.

ஆடம்பரமில்லாத, பரிசுத்தமான எழில் நிரம்பி நின்றது.

'வாணியை நான் அடைவதற்காக, உண்மையிலேயே நான் தியாகம் செய்துதான் இருக்கிறேன்; இதுவே எனக்கு மாபெரும் பலமாகவும் ஆறுதலாகவும் இருக்கும்! இப்படிப் பட்ட காதலுணர்வுதானே என்னைத் தியாகியாக ஆக்கியிருக்கிறது! ஆஹா! இந்தத் தியாகமனம்தான் நான் உணரத் தலைப்பட்டுள்ள காதலெனும் தத்துவத்திற்குப் பொருளோ?'

வாணியின் நாட்குறிப்புப்பற்றி துப்புத் துலக்கவேண்டுமென்ற ஆதுரத்தில், பேச வாயெடுத்தபோது, அவரது நண்பர் ஏகலைவன் எல்லையம்மன் கோவில் தெருவிலிருந்து வந்தார்.

வாணி மரியாதையாக ஒதுங்கி நின்றாள்.

"வாணி இது!" என்று நாணம் சிலிர்க்கச் சொன்னார்.

"ஓஹோ!" என்று வந்தவர் கைகளைக் கூப்பினார்.

வளைக்கரங்களிலும் வணக்கம் இருந்தது.

"இவர் ஏகலைவன். கதை எழுதுவதில் இவர் அடியேனை பிரத்யட்ச குருவாக மதித்து வருகிறார்.'

வாணி மெல்லிளஞ்சிரிப்பை வழிகாட்டி விட்டு, விழிகளை மூடி, மறுகி, வழி நடந்து நின்றாள்.

"இன்னொன்று. எனக்கு இரண்டாவது சிஷ்யையாக என் வாணிதான் அமரப்போகிறாள்!"

"அப்படியா? நல்லதுதான், ஸார்!"

அம்மா வந்து சமையல் விவரம் கேட்டாள். வாணியுடன் தனித்துப் பேசினாள். பிறகு வாணியும் அம்மாவும் அங்கிருந்து பிரிந்தார்கள்.

பிரிந்துகிட ந்த ஒரு கடிதத்தைப் பார்த்தார் ஞானசீலன். தஞ்சையில் முகாமிட்டிருப்பதாகவும், விரைவில் தம்மைச் சந்திக்க ஆசை மிகக் கொண்டிருப்பதாயும் கடிதம் ஒன்று பேசியது. குரல் ஈந்த பெயர் 'குந்தவ்வை!'

## 18. ஆண்டவன்—யாரை?...

ஸ்ரீமான் கோதண்டபாணி வந்தார். வந்து, விவாக சுப முகூர்த்தப் பத்திரிகையின் பிரதி ஒன்றை எழுதிச் சென்றார். அவர் நொடிக்கு நூறு தரம், 'என் அருமை மகள் வாணியின் கல்யாணம்தான் என் லட்சியம். அவள் திருமணம் முடிந்தால்தான் அவள் அன்னையின் ஆவி சாந்தி பெறும். தன் பங்கிற்கும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்ற தாத்பரியத்துடன் கடமையில் கண்ணாக இருப்பவள் வாணி. அவள் தோழி யாரோ வந்திருக்கிறாளாம், அவளோடுதான் நாலைந்து நாளாக நேரம் கழிக்கிறாள். மனச்சாட்சி, கடமை, நன்றி என்று உயிரைவிடும் இம்மாதிரிப் பெண்ணை இந்த நாகரீக அணுயுகத்தில் காண்பது ரொம்ப துர்லபம்!' என்று

சொல்லிவந்த சொற்கள் பின்தங்கின—தோணி போய்விடும். கரை பின்தங்கிவிடும் என்ற இந்தக் கதையாக!...

அழைப்பு அனுப்பவேண்டிய முகவரிகளை நோட்டில் தயாரிப்பதில் உதவினார்கள் நண்பர்கள். கதாசிரியை குந்தவ்வையின் கடிதத்தைப் பார்த்ததும், அதையும் தம்முடைய கைப்படவே சேர்த்தார். தவசீலியின் பெயரும் விட்டுப் போயிருந்தது. ஓட்டினார்.

ஆனால் அவளுடைய தற்போதைய சரியான விலாசம் தெரியவில்லை. 'தவசீலி'யின் நினைவு காலப்பனி மூட்டத்தைக் கடந்து சென்றது. ஒரு முறை ஆபீசுக்கு வந்திருந்த தவசீலியின் கடிதத்தைப் படித்ததும், அவரது இதயத்தின் இதயம் சந்தோஷப்பட்டதையும், அந்த நிறைவில் அவள் கடிதத்தையே திரும்பப் படித்த விசித்திரத்தையும் அவர் அவ்வளவு லகுவில் மறக்க முடியாதல்லவா? இப்படிப்பட்ட மனச் சலனங்கள் விட்டகுறை—தொட்டகுறையின் விளைவாகக்கூட இருக்கமுடியும் என்று ஒருமுறை படித்த மேலைநாட்டுத் தத்துவச் சிந்தனை இப்பொழுது அவரை முயங்கியது! "என் றென்றுமே உங்கள் நிழலில் அண்டி ஒண்டும் பெரும் பேற்றினை எனக்கு அருளச் செய்வீர்களா?" என்றபடி தவசீலி எழுதியிருந்த வரிகள் எதிரொலித்தன.

ஒரு நாள்!

அலுவலகத்தில் 'அட்வான்ஸ்' கிடைக்காமல், எதிரிலிருந்த கரிக்கடை சாயபுவிடம் ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டு, தவசீலியின் தந்தையைப் பார்த்துவர ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு 'ஆட்டோ'வில் சென்றார். வழியில் சாவுடன் மோத விரும்பி, ஆட்டோவுடன் மோத 'வேண்டுமென்றே' ஓடிவந்த அசல் பிச்சைக்காரன் ஒருவனது உயிரைக்காத்த கடமையும் குறுக்கிட்டது. "என் பசி என் ஒருவன் பசியல்ல; நாற்பது கோடி மக்களின் பசி" என்று விநோபாஜி கூறினாரே! கண்ணீர் மல்க, அவனைப் பார்த்தார்; கேட்டார்.

"ஏனப்பா, நீ இப்படிச் சாகத் துணிந்தாய்?"

"என்னாலே பசி தாளமுடியலே ஸார்!"

"பசியின் உண்மையையும் ரகசியத்தையும் உணர்ந்தவன் தான் நானும். இந்தா ஐந்து ரூபாய். இப்போதைக்கு இதை வைத்துக் கொள். மறுபடியும் திரும்பிவந்து உன்னை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். எங்கள் லாட்ஜில் வேலை தருகிறேன். நீ இங்கேயே, இந்தப் பெட்டிக்கடை வாச லிலேயே நில்," என்று மீண்டார்.

தவசீலி, இரண்டு கைகளாலும் ஏந்திய ரூபாய் நோட்டுக் களைக் கண்டு, மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கினுள். துயரத்தில் மட்டும்தான் கண்ணீர் வருமா? ஆனந்தத்திலும் தான் வருகிறது!

"ஐயா, என் நெஞ்சில் இடம்பெற்ற தெய்வம் நீங்கள்!" என்று உணர்ச்சி வசப்பட்டு, மெய்ம்மறந்த நிலையில், கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னுள் தவசீலி.

தவசீலியின் தந்தையை 'டிஸ்சார்ஜ்' செய்து அனுப்பி வைத்தபோது, தவசீலியிடம் அவள் விருப்பப்படி, சிறுகதை உத்திகளையும் லட்சணங்களையும் உதாரணம் காட்டி விவரித்தார்.

"என் நெஞ்சை உங்களிடம் ஒருநாள் திறந்து காட்டினுல், தான் ஸார், எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படும்; உங்களை என் ஆயுள் பூராவும் மறக்க மாட்டேன், ஸார்...ஆமாம், ஸார். உங்களை நான் என் ஆயுள் பூராவும் மறக்கவேமாட்டேன் ஸார். என்னவோ, தெய்வம்தான் இப்படிச் சொல்லும்படி கட்டளை இடுகிறது...ஆமாம், ஸார்!..."

தவசீலியைப் பார்த்து எவ்வளவோ நாட்கள் ஆகி விட்டனவே?...ஏன் இன்றைக்கென்று தவசீலி ஞாபகம் அடிக்கடி உண்டாகிறது?'

நன்ஞரிவேர் போட்ட தண்ணீரை ஒரு மடக்கு அருந்தி விட்டு வந்து குந்தினுர் ஞானசீலன்.

திரை முதலாளிக்கு அன்புத்திறை செலுத்தி மறுமொழி அனுப்பப்பட்டது.

அதிபர் மணிமுத்து வேலாயும் கடிதம் அனுப்பியிருந்தார்.

"அன்புள்ள ஞானசீலன்,

உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். உங்கள் சொந்த விஷயங்களில் குறுக்கிடும் உரிமையை நான் எப்போதும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். உங்கள் கருத்தை 'வெள்ளையாக'ச் சொல்லிவிட்டீர்கள். எனக்கு ரொம்பத் திருப்தி. உங்கள் காதலி வாணியுடன் நடக்கயிருக்கும் உங்கள் கலியாணத்தை நானே முன்னின்று நடத்தி வைக்கிறேன். எல்லாம் என் செலவு. இது என் கடமைகளுள் ஒன்றல்லவா? நீங்கள் ஆராதிக்கும் அன்பு மகத்தானது!

பிற நேரில்...

அன்புடன்,

மு. மணிமுத்து வேலாயுதம்.

செய்தி ஒன்றைச் சொன்னாள் அம்மா.

வாணிக்கு மூன்றுநாள் லீவு!...

கமலாட்சிக்கு தேதி வைத்ததற்கு ஐந்தாம்நாள் கழித்து ஞானசீலன்—வாணி கல்யாணத்திற்கு நாள் குறித்துக் கொடுத்தார் புரோகிதர்.

அதற்குள் பட்டணத்துக்குப் புறப்பட்டுத் திரும்பிவிட வேண்டுமென்பது அவர் முடிவு. 'என் அதிபரின் அன்பையும் பண்பையும் எப்படிப் புகழ்வது?'

வெயில் ஏறுமுகம் காட்டியது.

வாணி வீட்டுக்குக் குளித்து முழுகி வரவேண்டிய கெடு.

எதிர் நோக்கிக் கிடந்தார் எழுத்தாளர்.

அப்பொழுது, புடவைச் சலசலப்புக் கேட்கவே ஆவல் மீதூரத் திரும்பினார் அவர்.

வாணி இல்லை!

பின்...?

தவசீலி நின்று கொண்டிருந்தாள்.

"வணக்கம் ஸார்!"

"வணக்கம்...வணக்கம்...!"

"சௌக்யமா?"

"ம்!"

"அப்பா நலமாக இருக்கிறாரா?"

"நலமாக இருக்கிறார்...சொர்க்கத்தில்?"

"ஆ!"

"ஆமாம், அவர் கதை முடிந்து ஒரு மாசத்துக்கு மேலாகிறது!"

"நீங்கள் இப்போது..."

"அனாதை!"

'திக்'கென்றது அவருக்கு.

"ஆசிரியர் ஸார்!"

"என்ன தவசீலி!..."

"உங்களுக்குக் குந்தவ்வையை அறிமுகம் உண்டா?"

"இல்லை; என்னை இங்கு வந்து சந்திப்பதாகத் தபால் ஒன்று வந்தது!"

"அப்படியா?"

"சரி; வாணியைத் தெரியுமா உங்களுக்கு?"

"ஓ...தெரியுமே!..."

"அவள் என் உயிர்த்தோழி!"

"பேஷ், பேஷ்!..."

"பரந்த மனமும் பண்புச் செய்கையும், நன்றிக் கடனும் தியாக புத்தியும் கொண்டவள் என் சிநேகிதி!..."

"பேஷ்...பேஷ்!..."

"ஆமாம், குந்தவ்வையை உங்களுக்கு எப்படித் தெரியும் ஸார்?"

"அற்புதமான கதையொன்று அனுப்பினர்கள். பெயர் மனத்தில் பதிந்தது. இந்த இதழில் அட்டைப்படக் கதையாக வருகிறது!"

"சந்தோஷம்!"

"குந்தவ்வையை பார்க்க வேண்டுமென்றுதான் நானும் இரண்டு தினமாகக் காத்திருக்கிறேன்."

"அப்படியா?"

"ம்..."

"குந்தவ்வைக்கு உங்களை முன்பே வெகு நன்ருக்த் தெரியும், ஸார்!"

"நிஜமாகவா?"

"ஊம்!"

"எப்படி? நான் குந்தவையைப் பார்த்தது கிடை யாதே...!"

"உங்களை நான் இதற்கு முன் பார்த்தது கிடையாதா, ஆசிரியர் ஸார்?"

"பார்த்திருக்கிறீர்கள்!..."

"பிறகு இப்படிச் சொல்கிறீர்களே?"

மனக்கருவம் அவளது மார்க்குலேகளுக்கும் கருவம் ஈந்தனவோ?

"ஆ!...நீங்கள்தான் குந்தவ்வையா...?"

"ஆம்," என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் சிந்தலானுள் தவசீலி. "என் நெஞ்சில் இடம் பெற்ற தெய்வம் அல்லவா நீங்கள்!" என்று விம்மி வெடித்து இரண்டாம் முறையாக 'மதிப்புரை' வழங்கினுள் அவள். "என் நெஞ்சை உங்களுக்கு வெகு விரைவில் திறந்து காட்டுவதாக முன்பொரு சமயம் சொன்னேனல்லவா, அதற்காகவேதான் இப்பொழுது என் ஆண்டவனை நாடி வந்திருக்கிறேன், அனுதையாக! ஆனல்,

இனியும் என்னை அனுதையாக விடமாட்டார் என் ஆண்டவன்!" என்று தேம்பத் தொடங்கினுள் தவசிலி. மாரகச் சேலையில் ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது!

## 19. விதியைச் சந்தித்தார்!

ஞானசீலன் 'விதி'யைச் சந்தித்ததில்லை! என்றாலும், அப்பொழுது அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் உருவானது: விதியை அவர் சந்திக்க விரும்பாவிட்டாலும், விதி அவரைப் பழக்கப்படுத்திக் கொள்ள விழைந்ததுபோலும்! அழகைச் சந்திக்கக் காத்திருந்த அவர், அதற்கெனவே காத்திருந்த களி, ஆவல், விண்ணடைந்த விளைவு போன்ற மனோலயப் பின்னணியை உடன் அமர்த்திக் கொண்டு இருந்த சமயத்தில் குந்தவ்வை என்ற மாற்றுப் பெயர் விளையாட்டுக் காட்டி, அப்புறம் சற்றைப் பொழுதிற்கெல்லாம் 'சுய உரு'வைக் காட்ட முனைந்திட்ட திட்டத்தை ஏந்தி நின்ற அந்தப் பெண் தவசிலியை மறுபடிப் பார்ப்பதற்கு அவருக்கு நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் கூடுதலாகத் தேவைப்பட்டன. விதியைச் சந்தித்தாற் போலவே அவருள் ஒரு மன உணர்வும் மனப் பான்மையும் தோன்றலாயின!

வெளிச்சுற்று வட்டத்தில் இதுவரை தவித்துக் கொண்டிருந்த ஞானசீலன், இப்பொழுது இதயத்தின் உட்புறவட்டத்தில் சுற்றினுர். மனிதாபிமானம் மிகுந்த ஞானசீலன் சுற்றினுரா? இல்லை. மனிதாபிமானத்தை நிறுவை இட்டுக் கணிக்கக் கூடிய எழுத்தாளர் ஞானசீலன் சுற்றினுரா? என்னவோ, தவசீலியும் அவள் உரைத்த சொற்களும் சுற்றிச் சுழன்று கொண்டேயிருந்தன.

தாழ்த்திவிட்டிருந்த கண்களை உயர்த்திவிடக் கருதி, மெல்ல—மெல்லத் தலையை நிமிர்த்தினுர்; பூப்போட்ட

சோளிக்கைகளின் நடுக்கத்தைக் கண்டார். ஆனால் பூக்கரங்களின் நளினத்தைக் காணவில்லை. இன்னும் சற்று உயர்த்தினர். அணை உடைந்த வெள்ளத்தைக் கண்டார்; ஆனால் பேசும் விழிகளின் நயத்தைக் காணவில்லை. எடுப்பான நாசி, அதற்கு அழகூட்டிய மூக்குத்தி, சிமிக்கி, பிறை நெற்றியின் பிறைப் பொட்டு, கலைந்தகரிகுழல், கலையாத மரமைப்புச் சேலையின் ஈரம், ஏதோ ஒரு பயங்கரச் செய்தியைக் கொட்டிவிட்டு ஓடக் காத்திருக்கும் லாகவத்துடிப்பு போன்ற வெவ்வேறு வகைக் கோட்டுருவங்களால் ஒன்று சேர்க்கப் பட்டு நின்ற ஓர் உயிர்ச் சித்திரமாக நின்று கொண்டிருந்தாள் தவசீலி.

"ஆசிரியர் ஸார்!"

"..............."

"ஸார்...!"

"..............."

"ஆசிரியர் ஸார்!" என்று கூப்பிட்டதுடன் நிற்கவில்லை அவள். வலப்புறக்கையை ஒடித்து மடக்கி நீட்டினள். அது அவரைத் தொட்டது. உள்ளத்தையா? ஊஹூம், அவரது முதுகை!...

"தவசீலி, ஏன் நின்றுகொண்டே யிருக்கிறீர்கள்? உட்காருங்கள்!"

அவள் அமர்ந்தாள், பாயில். எதிரும் புதிருமாக இருவரும் உட்கார்ந்திருந்தனர். ஞானசீலனுக்கு என்னவோ போலிருந்தது. அவளது தாமரை முகத்தைப் பார்க்க ஓடிய பார்வை, அவளுடைய கஞ்சமலர் 'பாதங்களை மொய்த்தது. மருதாணிச் சிவப்பில் தோய்ந்திருந்த கால்விரல் நகங்களும், பச்சை நரம் போடிய குதிகாலின் பரப்பும், கணுக்கால்களை மறைத்து மூடியிருந்த 'வாயில்' புடவையும், புடவையின் கரையை நெருடிக் கொண்டிருந்த செக்கச் சிவந்த விரல்களும் அவருக்கு இலக்குப் புள்ளிகள் ஆயின. எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் முதலானவர்களுக்கு அப்புறம்தான் மற்ற ரசிகர்கள். கலைக்கண் கொண்டு இந்தப் பிரிவினர் ரசிப்பதே தனிப் பாங்குதான்.

அவரால் தவசீலியின் எழிலை ரசிக்க முடிந்தது.

ஆனல் அவருக்கு அவள் அழுகையை ரசிக்க முடியவில்லையே!

"ஸார்!"

"என்ன, சொல்லுங்கள்!"

"சற்றுமுன் சொன்னது நினைவில் இருக்கிறதல்லவா?"

"ஊம்!"

"நீங்கள் வேறு ஏதோ கவனமாக இருப்பதாகத் தோன்றுகிறதே?"

"எழுத்தாளன் மனம் எப்போதாவது ஓய்வு எடுத்துக் கொள்ள முடியுமா? இல்லை, அப்படி விரும்பினாலும் லீவுதான் கிடைக்குமா? உங்களுக்குத் தெரியாததா? அலைகடலும் கதாசிரியன்மனமும் ஒரே நிறைதானே?

'நல்ல' உதாரணம், ஸார்! உங்கள்கதைகளில் காண்டேகர் மாதிரி புதுப்புது உவமைகள் பேசும்முறை எனக்கு ரொம்பவும் பிடிக்கும்!"

"என்னைப்பற்றி என்னிடம் பேசுங்கள். என் எழுத்துக்களைப்பற்றி உங்கள் தோழிமார் வட்டத்தில் பேசுங்கள்."

"உங்கள் கண்டிப்புக் குணத்தை, நான் முதன் முதலில் உங்கள் ஆபீசுக்கு வந்தபோதே புரிந்து கொண்டேன், ஸார்!"

"சந்தோஷம்; ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு ஒழுகும் முதிர்ச்சியும் பக்குவமும் விளைந்து விட்டால் மனித சமுதாயத்தில் போட்டி, பொறாமை, சூதுவாது போன்ற தீநலப் பண்புகள் இற்றுவிடுமே தவசீலி? சரி; நீங்கள் சொல்ல வந்ததை மாலையில் சொல்லலாமா? இல்லை..."

"இல்லை, இல்லை...! இப்போது சொன்னால்தான் நல்லது. எனக்காகவோ, என் முடிவுக்காகவோ? காலத்தை நிறுத்தி வைக்க முடியுமா? அப்படி நிறுத்தி வைக்கும் கட்டத்திலும் நான் தற்சமயம் இருக்கவில்லை."

மூதன் முதலில் பதவிசாகவும் அமரிக்கையுடனும் கால் பெருவிரல் நகம் தரையில் கோடுகிறுக்கி, பார்த்தும் பார்க்காமலும் 'நாணத்திற்கு வாரிசு நான்தான்' என்கிறுற்போன்று 'கம்' மென்று இருக்கை கொண்டிருந்த பெண்ணு இப்பொழுது இப்படி பாம்பு சீறுகிற பாவனையுடன் வார்த்தைகளைக் கொட்டுகிருள்? கழுத்தை ஒரு சமயம் 'நோட்டம்' பார்த்த அந்தரங்கச் செயல் அவர் நெஞ்சில் குறுகுறுத்தது. கருகுமணிச் சரம் மட்டிலுமே அவளது சிவந்த மேனிக்கு அணிகலன் ஆன உண்மையினையும் அவரால் காணமுடிந்தது.

பெண்ணுக்கு, அழகுதான் நிதி. ஆனுல் அவ்வழகே சமயா சமயங்களில் அவளுக்கு விபத்தாகவும் உருமாறக்கூடும். அப்படிப்பட்ட அழகும் விபத்தும் ஒன்றுகூடி, தற்போது தன்னை ஆட்டிப் படைத்து அம்பலத்தில் நிறுத்தக் கங்கணம் கட்டியிருப்பது மாதிரியாகப் பட்டது ஞானசீலனுக்கு. 'வாழ்க்கை கூட ஒருவித விபத்துத்தானே? அவரவர் வாழ்வு எப்படிப்பட்ட இக்கட்டுக்களை சமாளிக்க வேண்டுமென்று விதித்திருக்கிறதோ அவற்றையெல்லாம் சந்தித்துத்தானே ஆக வேண்டும்? இதற்கெல்லாம் வருந்தலாமா? துன்பத்தையே இன்பமாக கருத வேண்டும் என்பது தமிழ் வேதத்தின் வாக்கு. முடிய வேண்டாமா?'

கூடத்திலிருந்த 'அலாரம் டைம்பீஸ்' துடித்த துடிப்பு அவருக்குக் கேட்டது.

அவள் துடித்த துடிப்பும் அவருக்குக் கேட்டது.

அவளை அவர் விழிநிமிர்த்தி நோக்கினுர். அவள் இதழ்கள் வண்டின் ஸ்பரிசம் பட்டதுபோல சிலிர்த்ததை அவர் உணர்ந்தார்.

மணி பன்னிரண்டு; கச்சிதம்.

'வாணியை இன்னும் காணுேமே?' என்று எண்ணமிட்டார். அது சமயம், "என்னெஞ்சை உங்களுக்கு வெகு விரைவில் திறந்து காட்டுவதாக முன்பொரு சமயம் சொன்னேனல்லவா, அதற்காகவேதான் இப்பொழுது என் ஆண்டவனை

நாடி வந்திருக்கிறேன், அனாதையாக!... ஆனால் இனியும் என்னை அனாதையாக விடமாட்டார் என் ஆண்டவன்!" என்று உறுதியின் பக்கபலத்தோடு பேசிய அவள் நேரில் நின்று, நினைவில் ஊடுருவி, நெஞ்சில் பிரதிபலிப்பதை யூகித்தார். 'என் நெஞ்சைத் திறந்து' என்று தொடர்பற்ற நிலையுடன் வார்த்தைகளை அடுக்கினார். கேஸில் இருக்கும் எழுத்துக்களை வகைமாறி 'ஸ்டிக்கில்' அடுக்கப் பிரயத்தனப் படுகிற புதிய 'கம்பாஸிட்டர்' போல. அடுக்கியதை வாசித்துப் பார்த்ததும் மெல்லிளஞ் சிரிப்பை தனக்குத்தானே கொட்டி வெட்கப் படுகிறது போன்றே அவரும் சிரித்து விட்டு அப்பால் வெட்கப்பட்டார். 'அந்தவெக்கம் நியாயமாக தவசீலியின் சார்பில் அல்லவா தோன்றியிருக்க வேண்டும்? வார்த்தைகள் தறிகெட்டுப் புறப்பட்டால், பொருள்களும் விபரீதமாகத் தானே ஒலிக்கின்றன! ஆமாம்; என்னவோ, ஆண்டவன் அப்படி இப்படி என்றெல்லாம் இந்தக் குமரிப் பெண் ஏதோ பேச்சுக்குச் சொல்வதாக நினைக்கப் போக, இப்போது எதையோ ஒன்றை உள்ளடக்கிப் பேசுவது போலத் தோன்றுகின்றதே?'

"ஸார்!..."

"தவசீலி!..."

"ம்" என்று 'உம்' கொட்டிவிட்டு, பிறகு, சந்தடி ஏதும் காணப்படுகிறதா என்று ஆராய்ந்து பார்த்தவாறு, சந்தடி எதையும் காணாததால் உண்டான அமைதியுடன் அவள் பேசலானாள்: "ஆசிரியர் ஸார்! உங்களுக்குக் காதலில் நம்பிக்கை உண்டல்லவா?"

ஞானசீலன் அவளை இப்போது துணிவின் துணையுடன் ஊடுருவிப் பார்த்துவிட்டுச் சொன்னார்: "சொல்கிறேன். ஊதுவத்தி இருக்கிறது பாருங்கள். அது தன்னை அழித்துக் கொண்டு பிறருக்கு மணம்தரும். ஆனால், காதலோ சம்பந்தப் பட்டவர்களை அழித்துவிட்டு அது உயர்ந்து நிற்கவல்லது! காதல் என்பது ஒரு பொய்விளையாட்டு. கண்டதும் காதல் முளைப்பது எழுத்துக்களில் மட்டுமே ஜீவனுடன் விளங்கும். நடைமுறை வாழ்க்கையில் காதல் என்று சொன்னால், அது அன்பு என்ற

பொருளில்தான் அமையமுடியும். ஆணும் பெண்ணும் பண்புடன் அன்பை வளர்த்துக்கொண்டு, அதன் பரிணும வளர்ச்சியில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ்த்தி, அதன் விளைவாக, இருமனம் ஒன்றுசேர் தம்பதியாவதே சிறந்தது. அப்படிப்பட்ட வாழ்வுதான் ஆதரிச வாழ்க்கையாக அமையும்! புரிகிறதா? இல்லையென்றால், இன்னமும் வெள்ளையாகச் சொல்லி விடுகிறேன்!"

தவசீலியின் உதடுகள் குறுஞ்சிரிப்பை அரவணைத்தன. மீண்டும் கேள்விக்குறி உதித்தது: "ஸார், தியாகத்தைப்பற்றி ஒரு சமயம் நீங்கள் உங்கள் தொடர்கதையில் குறிப்பிட்ட வாசகம் என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. 'தியாகம் என்ற குணநலன் உள்ளத்திலே உதிரத்தோடு ஊறிப் பக்குவப் படும்; இந்த உயர்ந்த குணம்தான் மனிதனை மனிதனுக உயர்த்திக் காட்டவல்லது' என்று நீங்கள் குறிப்பிட்டுக் காட்டியிருந்ததை நான் வெகுவாக ரசித்தேன் ஸார்!"

ஞானசீலனின் பார்வை திசை பிரிந்தது; ஆனல், அவர் சிரிப்பு மட்டிலும் தவசீலியின் சிரிப்புடன் ஐக்கியப்பட்டு விடுவதையொத்து, அண்டிச் சென்றது. "சந்தோஷம்!"

இருதரப்பிலும் பெருமூச்சுக்கள் எறியப்பட்டன; எரிந்தன!

"ஸார்!"

"ஊம்!"

"உங்களுக்கு ஆண்டவனைத் தெரியுமா, ஸார்?"

"தெரியுமே!"

"அந்த ஆண்டவனை நம்புகிறீர்களா?"

"நம்புகிறேன்!"

"விதியில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?"

"ஆண்டவனை நம்புபவன் விதியை நம்பாமல் இருக்க முடியுமா? விதி என்பது தெய்வத்தின் சக்திக்கு ஒரு கிளை. ஆண்டவன் ஒரு தத்துவமென்றுல், விதி அத் தத்துவத்திற்கு

ஒரு நியதியாக ஆகிறது. அதன் மூலம்தான் வாழ்க்கைக்கு ஒரு பொருள்—அர்த்தம் கிடைக்கிறது. ஏன், உங்களுக்கு ஆண்டவனைப் பிடிக்காதோ?"

"ஸார், ஸார்! என்னை நாத்திகத்தின் தலைவியாகக் கணித்து விடாதீர்கள். நான் ஆண்டவனை நம்பாமல் இருப்பேனா? இருக்க முடியுமா? அவ்வாறு நம்பாது இருந்திருந்தால் நான் அல்லல்பட்டு, வெந்து நொந்து, கடைசியில் என் ஆண்டவனைத் தேடிவந்திருக்க வாய்க்குமா?"

தவசீலி இப்போதும் ஞானசீலனைப் பார்த்தாள். ஆனால் இந்தப் பார்வையில் முன்பில்லாத ஒரு புது உரிமையும் நூதனமான உறவும் பொதிந்திருந்தன. தன் நெஞ்சிலும் நினைவிலும் கண்ணாம்பூச்சி ஆடிக்காட்டியவாறு இந்த வாணியை அனுபவித்த நிலையில் இருந்த ஞானசீலனுக்கு இவளைப் பார்க்க வேண்டுமென்னும் சிந்தனை எங்ஙனம் ஏற்பட முடியும்? மனம் வாணியை எண்ணியது. ஆனால் மனத்தின் மனத்தில் தவசீலியின் சொற்கள், குகையில் கிளம்பும் எதிரொலியாக முட்டி மோதிக்கொண்டு புறப்பட்டன. "நான் தப்பித்தேன்!" என்று முத்தாய்ப்பிட்டார் அவர்.

பதட்டத்துடன் இடைமறித்தாள் கதாசிரியை. "ஏன், ஏதாவது விபத்து ஏற்பட்டதா ஸார்?"

"அப்படியெல்லாம் நல்ல வேளையாக எதுவும் நடக்கவில்லை. நீங்களும் என் மாதிரியாகவே ஆத்திகமனம் கொண்டிருப்பதை எண்ணிய எனக்கு, ஏதோ ஒரு விபத்தை எதிர்பார்த்து, உடனேயே அவ்விபத்து விலகிவிட்டதுபோல ஒரு சாந்தி உண்டானது. அவ்வளவுதான். ஆண்டவன் நல்லவன்!"

"ஆமாம் ஸார். ஆண்டவன் நல்லவன்; என் ஆண்டவன் இன்னும் நல்லவர்!" என்று பதிலிறுத்த அவள், ஓரக்கண்ணால் அவரை ஏறிட்டுப் பார்த்து, அக்கணமே, அவ்வாறு பார்ப்பதற்கு நாணம் பூண்டவளைப் போல, தலையையும் விழிகளையும் தரையை நோக்கிக் குனிந்து சாய்த்தபோது, அவர் அவளைக் கண்டார். அவர் அவளது செழித்துப் பூரித்திருந்த அழகின்

திரட்சி மேட்டைக் கண்டார். புலனறிவு பொறி கலங்கியது அவருக்கு.

அவள் தலையையோ, விழியையோ உயர்த்தவில்லை. அவர் மறுபடியும் பார்த்தார். அழகு, இன்னும் கூடுதலான அழகைக் காட்டியது.

மேனியில் ரோமாஞ்சலி கிளர்ந்தெழுந்தது. உடலெங்கும் கொதிப்புணர்வு படர்ந்தது. மனோவிகாரம் அவருள் சுழித்தது. "தவசீலி!" என்று அழைக்கப் பிரித்த உதடுகளிலே "வாணி!" என்ற பெயர் புறப்பட்டது.

தவசீலி துணுக்குற்றுத் திரும்பவேண்டியவள் ஆனாள்.

ஆவி தழுவி நின்ற புல்லரிப்பைத் தட்டிக்கழித்துவிட்ட பரதவிப்பில் மனம் கலங்கிக் காணப்பட்ட ஞானசீலனின் நெஞ்சம் இளக்கம் கண்டது.

"தவசீலி, என்னிடம் சொல்ல வேண்டியதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லி விடுங்கள். சுற்றி வளைத்து நீங்கள் பேசினால், அதைப் புரிந்துகொள்ளக்கூடிய மனோநிலையில் நான் தற்சமயம் இல்லை; ஆமாம், தவசீலி!" என்று குரலில் அழுத்தம் பதித்து, அவ்வழுத்தத்தில் கண்டிப்பையும் ஏற்றித் தெரிவித்தார், ஞானசீலன்.

"ஆகட்டும் ஸார். இன்னும் கொஞ்ச நாழிகைப் பொழுதுக்கு மட்டும் நீங்கள் இந்த அபலையின் நிமித்தம் கொஞ்சம் பொறுமையாக இருங்கள்! ஸார். ஆசிரியர் ஸார்! நான் அனாதையாக இப்போது உங்கள் முன்னே குந்தியிருக்கிறேன். அருவமான ஆண்டவனை நான் இதுவரை கண்டதில்லை. ஆனால், இதோ, உருவமான வடிவத்துடன் என் ஆண்டவனை நான் தரிசித்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஆண்டவன் எனக்கு வைத்த சோதனைகளுக்கெல்லாம் விடிமோட்சம் காட்டப் போகிற இந்த ஆண்டவனைத்தான் நான் இக்கணத்தில் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறேன். அதாவது, என் வாழ்வையும் தாழ்வையும், என் உயிரையும், உடலையும் உங்களுடைய

அன்புக் கரங்களிலே ஒப்படைத்து அடைக்கலம் புகவே நான் வந்திருக்கிறேன்!"

நீர் மட்டத்தில் தளும்பி நிற்கும் தாமரை மொட்டி னின்றும் நீரலைகளின் பெருக்கத்தின் காரணமாகப் பட்டுத் தெறிக்கும் நீர் முத்துக்களுக்குச் சமதையாக, தவசீலியின் நேத்திரங்கள் சுடுநீர் உகுத்தன.

'உயர்நிலை'யில் கருங்கல் துண்டுபட்டுவிட்டாற்போல, ஞானசீலன் துடிதுடித்துப் போனார். உள்ளத்தின் உள்ளம் ஆட, உள்ளத்தின் துடிப்பு ஆடியது. கண்ணின் மணிப்பார்வை நடுங்கியது. மெய் விதிர்த்தது. ஆம்; 'மெய்' விதிர்த்தது! அவரது இதயம் அழுதது; ஆனால், எங்கோ தொலை தூரத்தி லிருந்து தொல்வினை நமட்டுச் சிரிப்பு ஒன்றை நையாண்டிப் பான்மையுடன் வெளியிட்டுக் கொண்டிருந்தது மட்டும் அவருக்குத் துல்லியமாகக் கேட்டது. "தவ...சீலி! நீங்கள் ஆண்டவனைச் சந்தித்ததாகச் சற்றுமுன் கூறினீர்கள். ஆனால் நானோ விதியைச் சந்தித்திருக்கிறேன். காதல், தியாகம், ஆண்டவன் என்று ஏதேதோ கேட்டு என்னைக் குழப்பியதற் குரிய காரணம் இப்பொழுதுதான் எனக்குப் பிடிபடுகிறது. என் வாணி உங்கட்குத் தோழி என்று சிலாகித்துப் பேசினீர் களே? அவளை நான் மணம் புரிந்துகொள்ள நாள் குறித்துள்ள உண்மையை வாணி உங்களிடம் அறிவிக்கவில்லையா? இதோ பாருங்கள், எங்கள் கல்யாண முகூர்த்தப் பத்திரிகையின் பிரதியை!"

விரிந்தது, வதுவை மடலின் கையெழுத்து நகல்.

"சிரஞ்சீவி ஞானசீலனுக்கு சௌபாக்கியவதி வாணியை...!"

தவசீலி வாய்விட்டுப் படித்தாள். இமை வரம்புகளை விரல் நகம்கொண்டு துடைத்தாள். நிமிர்ந்து உட்கார்ந்தாள். காற்று நுகர்ந்த மேலாக்கின் இடதுபுறச் சேலை நுனியைச் சரிசெய்தாள். வெய்துயிர்ப்பு வெடித்தது.

அவளுடைய செய்கை ஒவ்வொன்றிலும் 'மாறுபட்ட உணர்ச்சி'யை யூகம் செய்யவேண்டியவரானார் அவர். தவசீலி, 'குந்தவ்வை' என்ற மாற்றுப் பெயருடன் அனுப்பியிருந்த கதையில், "பெண் சர்வவல்லமை படைத்த மகாசக்தி. தன் சுதந்தரக் கனவு சிதையக் கண்டால், ஊழிப் புயலாக உரு மாறவும் தயங்கமாட்டாள். அப்புறம் அவள் காளிதான்!" என்று கதையை முடித்திருந்த வரிகளில் தம் நினைவைச் செலுத்தினார். 'நான் பெரிதும் அனுபவித்த இவ்வரிகளுக்கு இந்தக் கன்னிப் பெண்ணே விதியாகி விடுவாளோ?' கடந்த கால எண்ணங்களின் தொடர்பு அறுபடத் தக்க நிலையில், அவர் ஊசலாடினார். முதன் முதலாக, தவசீலியின் கடிதத்தைப் படித்தபோது, இனம் தெரியாத மகிழ்ச்சியில் திளைத்த நிகழ்ச்சி ஊர்ந்தது; 'நீங்கள் என் தெய்வம்போல. ஏன் நீங்களே என் தெய்வம்; என் கனவை வாழவைக்கும் அந்தஸ்து உங்கள் ஒருவருக்கே உண்டு! ஆமாம், நீங்கள் என் ஆண்டவன்!' என்று சுட்டிக் காட்டியிருந்த அந்தக் கடிதத்தின் உட்பொருளும் இப்போது அவருக்குப் புரிந்தது. இந்தப் பெண் இங்கு முன்பு வந்த சமயத்தில், அவளது வெள்ளை மனத்தால் ஈர்க்கப்பட்டு' 'தவசீலி, உங்களை எனக்கு நிரம்பவும் பிடித்துவிட்டது!' என்று சொல்லப்போக, 'ஆஹா, நான் பாக்கியவதி!' என்று மண்முட்டிய ஆசையுடனும் விண்முட்டிய கனவுடனும் நகை பூத்துத் திளைத்த சம்பவம் தவழ்ந்தது. பின்னர், பட்டணத்தில் ஏற்பட்ட சந்திப்பில், 'என் நெஞ்சை உங்களிடம் ஒரு நாள் திறந்து காட்டினால்தான் ஸார், எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படும். உங்களை என் ஆயுள் பூராவும் மறக்க மாட்டேன் ஸார்!' என்று 'பூடகமாக'வும் முன் எச்சரிக்கையுடனும் மொழிந்த காட்சியும் விரிந்தது.

அதற்குள், தவசீலி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "எல்லாம் தெரியும் ஸார்!" என்று முத்தாய்ப்பு வைத்தாள்.

இம்முடிவைக் கேட்டவுடன், ஞானசீலனின் கண்களில், சாணைக்கல்லில் தம்பிக் கோட்டை வீச்சரிவாள் உரசும் பொழுது பறந்து சிதறுமே தீப் பொறிகள்,] அம்மாதிரி, விரிந்து

படரலாயின. "தெரிந்துமா, இப்படி என்னைச் சோதிக்கத் தலைப்பட்டீர்கள்?"

கண்களும் கண்களும் மோதின.

"உங்களை—என் ஆண்டவனைச் சோதிக்கும் தைரியம் எனக்கு ஏது, ஸார்?

"பிறகு...?"

ஞானசீலனின் கேள்விக்கு விடை பகர வந்தவளென அங்கு தோன்றிய வாணி, "நீங்கள் தவசீலியையே கல்யாணம் செய்து கொள்ளுங்க...அதுவேதான் தெய்வசித்தமாகவும் இருக்கவேணுமுங்க. ஆமாங்க!" என்று, ஏதோ முன்கூட்டியே திரயோசித்து முடிவு செய்தவள் போன்று அவ்வளவு தீர்க்கமான குரலெடுத்து, சாவதானமாகக் கூறினாள்.

கனவுகளை வளர்த்தவளே கனவுகளை அழித்துவிடப் பார்க்கிறாளே?

ஞானசீலனின் இதயம் அதிர்ந்தது. "வாணி, என்ன சொல்கிறாய்?"

"ஸார், ஆசிரியர் ஸார்! இதைப் பார்த்திருப்பீங்க; நீங்க பார்க்க வேணுமின்னுதான் ஒரு வாட்டி இந்த டைரியை உங்க பைக்குள்ளே திணிச்சேன். இப்ப திரும்பியும் ஒரு தரம் படியுங்க!"

அவர் பார்வைக்கு அந்தப் பழைய நாட்குறிப்புப் பக்கம் இலக்கானது. முன்னேற்பாட்டின்படி அப்பக்கத்தில் மட்டும் காகிதக் கிழிசல் ஒன்று செருகி வைக்கப் பெற்றிருந்தது. "விழித்துக் கொண்டிருப்பவர்களைக் கண்டால் தோல்விகள் கண் உறங்கி விடும் "என்பார்கள். சரி; ஆனால், என் வாணி உறங்காமல்தான் இருக்கிறாள். அவளைப் போலவே விதியும் உறங்காமல் இருந்து தொலைக்கின்றதே? வாழ்க்கை எனும் பேரேட்டில் கனவுகள் வரவாகின்றன; ஆனால் முடிவில் ஐந்தொகை பார்க்கையில், ஏமாற்றங்களல்லவா நிகர லாபமாகின்றன? துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்கிறார்களே?

தெய்வமே! வாணி!' நினைவுப் பூக்களை மன நாரில் சிந்தனைக் கரம் தொடுத்துக் கொண்டிருக்க, அந்த இடைவேளையில், அவர் நோக்கு வாணியின் டைரிக் குறிப்பில் இழைந்தது:

"நன்றி சுரக்கும் நெஞ்சோடு நான் அல்லும் அறுபது நாழிகையும் என்னுடைய அடிநாட்களை ஞாபகப்படுத்தியவாறு தான் இருந்து வருகிறேன். இந்த ஒரு பரிபக்குவம் எனக்கு அப்பியாசப்பட்ட காரணத்தினுல்தான், என்னுள்ளே, என்னையும் அறியாமல், ஒரு தியாகமனம் உருவாகிப் பக்குவப்பட்டு வருவதைக் காண்கிறேன். ஏனென்றால், என் நிமித்தம் பல பல தியாகங்களைச் செய்தவர்களுக்கு நான் நன்றிக் கடன் செலுத்தியே ஆகவேணும். அந்தச் சந்தர்ப்பத்தை ஆண்டவன் எப்போதும்— எந்த ரூபத்தில் எனக்கு அறிமுகப்படுத்தப் போகிருனே? நான் எப்படி உணர முடியும்? நான் அபலை! அதிலும் கன்னி! ஆக, என் கடனை பூர்த்தி செய்துதான் தீருவேன். இல்லாது போனுல், நான் என் மனச்சாட்சிக்கு மட்டுமில்லாமல், தெய்வ மறையாம் திருக்குறளுக்கும் அநீதி இழைத்தவள் ஆவேன்!..."

கொடுத்ததை படித்து முடித்துச் சும்மா இருந்தார் ஞானசீலன்.

"ஆசிரியர் ஸார்! நீங்கள் உங்கள் எழுத்துக்களிலே அடிக்கடி குறிப்பிடுகிற அந்தத் தியாகப் பண்பு என்றோ என்னுள் வளர்ந்து, உதிரத்துடன் உதிரமாகி விட்டது. அதற்கும் காரணம் இருக்கிறது. கவனமாகக் கேட்பீர்களா? உங்கள் நெஞ்சில் நான் நர்த்தனமிடுவதாகச் சதா வேடிக்கையாகப் பேசுவீர்களே? அந்த வாணியை மறந்துவிட்டு, இந்த வாணியின் பேச்சைச் செவிசாய்ப்பீர்களா? நான் ஆடம்பரமில்லாத அழகி என்ற அளவிலும், ஸ்ரீமான் கோதண்டபாணி அவர்களின் அருமைத் திருமகள் என்ற அமைப்பிலும் மட்டுமே தான் தாங்கள் என் சரித்திரத்தை அறிவீர்கள். ஆனுல்,

அதற்குப் பின்னேயும்—அதாவது, அந்தச் சரித்திரத்திற்குச் சரித்திரம் போலவும் சில ரகசியங்கள் மறைந்திருப்பதைத் தாங்கள் அறிந்திருக்க முடியாது. நான் இந்த விந்தை மண்ணில் கண்விழித்தபோது, தாய் தந்தையற்ற அனுதை யாகவே கண்விழித்திருக்கிறேன். நெறி பிறழ்ந்த முறையில் கருவில் உருப்பெற்ற என்னை ஈன்றுபோட்டுவிட்டு அன்னை மறைந்தாள், மறைந்திட்ட அவள் கணவனை நாடி. அனுதைக் குழந்தையான என்னைக் கண்டெடுத்திருக்கிறுர் ஒரு தெய்வ மனிதர். அந்த மனிததெய்வம் யார், தெரியுமா? அவரேதான் தவசீலியின் அப்பா. அந் நாளிலே பெரிய லட்சாதிபதியாகத் திகழ்ந்த அவர், என்னை அங்கு அலுவல் செய்து கொண்டிருந்த கோதண்டபாணியிடம் ஒப்படைத்திருக்கிறுர்! நான் வளர்ந் தேன், என்னுள்ளே—என்னுடன் வளர்ந்து கொண்டேயிருந்த 'பிறப்புக் கதை'யை அறியாமலே! எல்லா விஷயமும். இப் போதுதான், அதாவது, தவசீலி இங்கு வந்து சேர்ந்த சில தினம் முன்னர்தான் எனக்குத் தெரிந்தது; ஸ்ரீமான் கோதண்டபாணி என் வளர்ப்புத் தந்தைதான் என்ற ரகசி யத்தை அறிந்திருந்த எனக்கு என் பிறப்பு விந்தை மட்டும் எப்படியோ தெரியாமலே இருந்துவிட்டது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் விட்டகுறை—தொட்டகுறையின் ஊட்டத்திஞல் தான் விளையாடுகின்றன. ஆகவே, இவற்றின் அலகிலா விளையாட்டுக்கு முன்னே கேவலம், மானுடப் பிறப்புக்களின் அற்பவிளையாட்டுகள் எம்மாத்திரம்?"

வாணி சில கணங்களின் ஓய்வுக்குப் பின்னே, தவசீலியை உன்னிப்புடன் பார்த்து, நாசூக்கான அன்பு மிளிரச் சிரித்து விட்டு, ஞானசீலனைப் பார்க்காமலேயே தன் கதையைத் தொடரலானுள்:

"ஸார், கேளுங்கள்; நீங்களும் நானும் காதலிக்கத் தொடங்கி—அதாவது ஒருவரையொருவர் மனமார விரும்பத் தொடங்கியதற்கு முன்னதாகவே, என் தவசீலி உங்களை மான சீகமாகக் காதலிக்கத் தொடங்கியிருக்கிறுள், ஸார்! உங்கள் எழுத்துக்களையே ஆசாஞக்கி, உங்கள் புகைப்படத்தைப்

பூசிக்கத் தொடங்கி விட்ட அவள் அந்த ஒரு பக்தியுணர்வில் பாசத்தையும் அன்பையும் வளர்த்து வந்த கட்டத்தில்தான் இவள் உங்களைச் சந்திக்க விரும்பி, முன்னதாகத் தபாலும் போட்டிருக்கிறுள்; பிறகு சந்தித்தும் இருக்கிறுள். உங்களையே தன் ஆண்டவனுக வரித்துக் கொண்டிருந்த நிலையில்தான், இவளை நான் அறிந்தேன், வாழ்ந்துகெட்ட இவளது அப்பாவின் தபால்மூலம். அனுதைக்கு வாழ்வளித்த குடும்பப்பெண் அனுதையாகி வந்தாள். என் காதலை வெளியிட விழைந்த நேரத்தில், அவள் தன் இதயத்து ஆசையைக் கொட்டி விடவே, 'உங்களை நான் அறிவேன்' என்ற மட்டோடு நான் அவளிடம் சொல்லி நிறுத்திக் கொண்டேன். என்னை வளர்த்த குடும்பத்திற்கு நான் செய்யக்கூடிய—செய்தாக வேண்டிய கடமையை நான் நிறைவேற்றினுல்தான் எனக்கு நல்ல மூச்சு வரும். அப்போதுதான், ஆண்டவனும் என்னை மன்னிப்பான்; என் மனச்சாட்சியும் என்னை மன்னிக்கும்! ஆகவே, என் வேண்டுகோளுக்கு இணங்கி, தவசீலியை நீங்கள் கைத்தலம் பற்றி வாழ விடுங்கள் ஸார்! என் தியாகத்தை வாழ்த்தி என் நன்றிக்கடனை வாழ விடுங்கள், ஆசிரியர் ஸார்!"

மேலும் ஏதோ சொல்ல வாயெடுப்பதைக் கண்ட ஞானசீலன் பொறுமையை இழந்தார். "வாணி, உன் பிரசங்கம் கேட்கத்தான் இனிக்கிறது. ஆனுல், உன் இஷ்டத்துக்காக என் கனவுகளை குழிதோண்டிப் புதைக்க நான் ஒப்ப மாட்டேன். உன் காதலைத் தெரிந்துகொண்ட பிறகுகூட, விட்டுக் கொடுக்கும் பண்பு இல்லாத இந்தப் பெண்ணிடமா நான் வாழ்நாளெல்லாம் அகப்பட்டு விழிக்க வேண்டும்? ஊஹூம், ஒருகாலும் ஒப்பமாட்டேன். இந்தத் தவசீலியை மணப்பதென்பது பகற்கனவு!" என்று அழுத்தமாகச் சொன்ஞர்.

"அப்படிச் சொல்லாதீர்கள் ஸார். என் நன்றிக் கடனை நிறைவேற்ற ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி யிருக்கிறது தெய்வம். தவசீலி தங்கமான பெண். நான் வேண்டியிருந்தால், அவள் ஒதுங்காமல் இருக்கவே மாட்டாள். ஆனுல்

அப்படி அவள் ஒதுங்கினால், என் மன அமைதி பறிபோய் விடாதா? என் காதலில் குறுக்கிட அவளுக்கு உரிமை இல்லை என்று சினிமாக்களில் வருவது போல வாதாடுவது சுலபம். ஆனாலும், நான் மனிதாபிமானத்துடன், நன்றி மறவாத மனத்துடன் வாழ வேண்டாமா? என்றோ செய்த உதவிக்கு இன்று நான் என் காதலைத் தியாகம் செய்ய வேண்டுமென்று சட்டமில்லை என்று கூறுவது எளிது. ஆனாலும், என் மனச் சாட்சி என்னை நாளெல்லாம் குதறி யெடுக்குமே, அந்தத் தொல்லைக்கு மரணத்தைத் தவிர, டாக்டரால் எனக்கு வேறு சிகிச்சை செய்ய முடியுமா? தியாகம், தியாகம் என்று நொடிக்கு நூறு தரம் சொல்லியும் பேசியும் எழுதியும் வந்த தாங்கள், இப்போது, என்னைத் தியாகியாக்க ஒரு வாய்ப்பு தந்து, அதன் மூலம் நீங்களும் தியாகியாக ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொள்ள மறுக்கிறீர்களே, ஸார்? நீங்கள் முன்பு எழுதியது மாதிரி, காதல் என்பது சிறுபிள்ளைகளின் பொய் விளையாட்டு ஸார்! என்னை மறந்துவிடுங்கள்; நம் காதலையும் மறந்துவிடுங்கள். என்மீதுள்ள மயக்கம் காரணமாக, என் உயிர்த் தோழி தவசீலியின் குணநலத்தைத் தவறுகப் புரிந்து கொள்ளாதீர்கள். நான் ஒரு சொட்டுக் கண்ணீரை அவள் முன் காட்டியிருந்தால்கூட, அவள் என்றோ தன் மனக்காதலை விட்டுக் கொடுத்து ஒதுங்கியிருப்பாள். ஆனால், நான் அப்படிச் செய்யவில்லை. ஏன் தெரியுமா? என்னைக் காட்டிலும் அவள் உங்களை இன்னும் பக்திபூர்வமாக நேசித்ததை அறிந்தேன். எழுத்துப் பித்துக்கொண்ட அவளே உங்களுக்கு உகந்த ஜோடி என்பதையும் உணர்ந்தேன். அதன் பிறகு, நான் வாயடைத்துப் போனேன். எனக்கும் உங்கட்கும் இடையில் நிலவிப் பூத்த காதல் மலரை அவளுக்குக் காட்டாமல் மறைத்தேன், நடக்கவிருந்த திருமணம் ஏதோ இயற்கை வசமாகவே நிகழப் போவதாகவும் சொன்னேன். உங்களை தவசீலியின் நிதிப் பொருளாக ஆக்கித் தருவதாக அவளிடம் வாக்குக்கொடுத்து, அவளை இங்கு வரும்படியும் தூண்டிவிட்டுத்தான் நான் இப் பொழுது வந்திருக்கிறேன்!"

மீண்டும் அவளுக்குச் சோர்வு வந்தது. மனக்களைப்பு வேறு.

"வாணி, உன்னுடைய இந்தத் தர்க்கத்தை சினிமாவில் பேசச் சொல்லிக் கேட்டால்கூட, யாரும் இயற்கைக்கு மீறிய 'டயலாக்' என்று ஒதுக்கி விடுவார்களே! நாவலில்கூட இம் மாதிரிப்பட்ட தியாகங்களைக் காண முடியாதே, வாணி? சிரித்துக் கொண்டிருந்தவனை ஏன் அழச் செய்கிறாய்? சிந்தித்துக்கொண்டிருந்தவனை எதற்காக துடிக்கச் செய்கிறாய்? இலக்கண விதி முறைகளைக் கடந்த பாடலாக நீ வேஷம் போட்டு நடிக்க எத்தனை நாட்கள் கனவு கண்டாய்? உன் தியாக மனத்தை நிருபிக்க நான்தானா அகப்பட்டேன்? என்னை ஆட்டிப் படைக்க தவசீலியை ஆண்டவனா உன் கண்களில் காட்டினான்? ஐயோ!" சீறினார்.

"ஸார்...ஸார்!" என்று உணர்ச்சி பீறிட இடைவெட்டிக் கத்தினாள் வாணி. "நான் வேஷம் போட்டு நடிக்கிறேனா? எவ்வளவு லகுவாகச் சொல்லிவிட்டீர்கள்? சரி, நான் வருகிறேன்!" என்று சொல்லிப் புறப்பட்டாள் வாணி.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில், "வாணி! வாணி! நில்லம்மா!" என்று கூக்குரலிட்டவாறு கோசலை அம்மாள் கதறிய சத்தம் கேட்டது.

ஞானசீலன் ஓடினார். தவசீலியும் விரைந்தாள்.

'விஷம்' என்று 'லேபிள்' ஒட்டப்பட்டிருந்த சின்னச் சீசா ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாள் வாணி. விழிப்புனல் வடிந்துகொண்டேயிருந்தது. துணியின் இரு மருங்கிலும் இருபுள்ளிகள் துலாம்பரமாகத் தெரிந்தன.

"நான் தடுக்காமல் இருந்தாக்க, இந்நேரம் வாணி விஷத்தைக் குடிச்சிருக்கும் தம்பி!" என்று கலங்கிய தொனியில் சொன்னாள் ஞானசீலனின் தாய்.

அப்பொழுதுதான் வாணி தலைநிமிர்ந்தாள்.

"வாணி! என்னை மன்னித்துவிடு. ஆண்டவனைப் பற்றி இதுவரை எவ்வளவோ சந்தர்ப்பங்களில் எழுதியிருக்கிறேன்

நான். ஆனால் இன்றுதான் அவனைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தலைப்பட்டேன். அலகிலா விளையாட்டுடையவன் ஆண்டவன் என்பதைக் கண்முன்னே நிதர்சனமாகப் புரிந்து கொண்டேன் நான்! இனி, என்னை நீ என்ன செய்யச் சொல்கிறாய்? சொல், வாணி, சொல்!'' என்று நைந்த குரலை மறைத்தவராகக் கெஞ்சினார் அவர்.

''என் உயிர்த் தோழி தவசீலிக்கு உங்கள் உள்ளத்தைக் கொடுங்கள்!'' என்று வாணி கெஞ்சிய குரலில் கோரினாள்.

''உன் தியாகத்தை வாழ்த்தி நிறைவேற்றவும், உன் சிநேகிதியின் காதலை வாழ்த்தி அங்கீகரிக்கவும் நான் கடைசி வரை முயலுவேன். இது உறுதி. ஆனால், எனக்குச் சில நாழிகைப் பொழுதிற்கு ஓய்வு கொடு. நாளை இரவுக்குள் உனக்கு செய்தி அனுப்பிவிடுகிறேன், வாணி!''

சிறு குழந்தையாகி, நெஞ்சடைக்க வார்த்தைகளைக் கக்கினார் கதாசிரியர்.

தவசீலியின் கைகளைப் பற்றியவாறு வழி நடந்தாள் வாணி! ''தவசீலி, உனக்குத் தத்தம் செய்து கொடுத்த இவ் வுயிரை என்னுடைய அவசரத் துணிவினால் ஆத்திரப்பட்டுப் போக்கிக்கொள்ள முயற்சி செய்த என் அறியாமையை மன்னித்துவிடு, தவசீலி, மன்னித்துவிடு! உன்னிடம் வாக்குக் கொடுத்தபடி, என்னை மாலையும் கழுத்துமாக நீ பார்த்து ரசிப்பதற்கு என்னை நான் பக்குவப்படுத்திக் கொள்ளவும் செய்கிறேன், தவசீலி!'' என்று சொல்லிக் கொண்டே வழி நடந்தாள் வாணி!

## 20. சமுதாயத்தின் காவலன்!

சண்முகத் தெய்வமணி, வள்ளி—தெய்வானை சமேதராகக் காட்சி யளித்த அந்தக் காலண்டரையே இமை பாவாமல் விழிபிதுங்கப் பார்த்துக்கொண்டிருந்தார் ஞானசீலன். உள்ளம் பிதுங்க துயரவெள்ளம் அலைபாய்ந்தது; கண் பிதுங்க, சுடுநீர் வடிந்தது. "அப்பனே! முருகா! ஆறுமுகக் கடவுளே! என்ன சோதனை செய்துவிட்டாய் அப்பனே!" என்று இதழ் விலக்கி, சொற்சரம் தொடுத்தார். கையில் வைத்திருந்த பேனாவை மேஜைப் பரப்பில் வீசிவிட்டு, கைகள் இரண்டையும் பிசைந்தார்; கிராப்புத் தலையை விநாடிக்கு விநாடி பிய்த்துக்கொண்டார். பூட்டிய கதவுகளைப் பார்த்த சடுதியில், கடை பரப்பிக் கிடந்த பேப்பர், புத்தகக் குவியல்களை நோட்டமிட்டார். நெஞ்சு கனத்தது. குந்தியிருந்த நாற்காலி முள் பத்தை ஆனது. மலர்க்காடாகியிருந்த மனம் சுடுகாடாகி விட்டமாதிரி ஓர் அரிப்பு ஊறியது.

'கைக்கு மெய்யாக வந்து உள்ளங்கைக்கு அடக்கமாகியிருந்த கொம்புத்தேன் விரல் வழி வழிந்துவிட்ட கதையாக ஆகிவிட்டதே என் கதை! வாணி, உன்னை நான் எவ்விதம் மறக்கப் போகிறேன்? நிலைப்படியில் நின்று கடைக்கண் வீச்சைப் பாயச்செய்து என்னை அளந்தாயே, அந்தச் சாகஸத்தைப் புகழ்வதா? மாலையும் கழுத்துமாக என்னைப் பார்த்துப் பரவசம் அடைய விழைந்த அம்மாவிடம், மாலையைக் கொண்டுவந்து கொடுத்து, "உங்க மகனை மாலையும் கழுத்துமாகப் பார்க்க வேணும்னு ஆசைப்பட்டிங்களே, அதுக்காகத்தான் இந்த மாலையை வாங்கியாந்தேன்!" என்று உள்ளர்த்தம் வைத்து நயம் பொருந்திய நகைச் சுவையை வெளியிட்டாயே அந்தக் கற்பனையை மெச்சுவதா? "நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?" என்று மெத்தவும் துடுக்குத்தனம் கொண்டு கேட்டு எனக்குத் தபால் போட்டாயே, அந்தத் தைரியத்தைப்

போற்றுவதா? என் அன்பின்பால் உன்னையே அர்ப்பணித்த பெருமையை நீ மனசில் தாங்கியவளாக, எனக்குச் சென்னைக்கு விடைகொடுத்தனுப்பிய தருணத்திலே, 'என் நினைவு ஒன்றுடனே அங்கிருந்து புறப்பட்டு வாருங்கள்!' என்று மொழிந்தாயே, அந்தத் தன்னம்பிக்கையைப் புகழ்வதா? கற்பனையில் கூட தரிசிக்க முடியாத அவ்வளவு உச்சிக்கு நீ போய்விட்டாயே வாணி? உன்னை நான் எட்டக்கூடாது என்றுதான் அவ்வாறு என்னைவிட்டு எட்டாத் தொலைவுக்குப்போய்விட்டாயா? கனவாகி வந்தவளே, கனிவாகிப் போய் விடுவாயா? உன்னை மறந்து, நான் உயிர்தரிக்க முடியுமா? அழகின் தத்துவப் பொருளான உன்னை என்னிலிருந்து பிரிக்கும் மாயப் பெருவிதியாகி வந்து நிற்கும் தவசீலியை நான் மணப்பதா?... அப்பனே, சண்முகா!"

மேஜை டிராயரை இழுத்து இழுத்து மூடினர். உன்னிப்புடன் பார்த்துப் பார்த்து விழிகளை மூடினர். நெஞ்சு பதைக்க, நிமிர்ந்து எழுந்து நடந்தார். அன்னையின் படம் மஞ்சளும் குங்குமமுமாகத் திகழ்ந்தது. 'அம்மா அம்மா!' முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு கரைந்து உருகினர்.

வாசற்கதவு தட்டப்பட்டது. சத்தம் கேட்டது. 'கோயிலுக்குப் போன அம்மா திரும்பி விட்டார்களா? நேரம் மிகுதியாக ஆகி விட்டதா?' என்று நினைவுகளைச் சொடுக்கி முடுக்கிய கதியுடன் கூடத்துக்கு வந்து தாழ்ப்பாளை விலக்கினர். மஞ்சள் வெய்யிலில் குளித்தவளாக, மஞ்சள் முகம் மஞ்சள் வெய்யிலில் பொலிவு பரப்ப, தூய அழகின் அவதாரம் எடுத்து வந்தாள்—வாணி!

"வா...ணி!..." என்று மெய்ம்மறந்த பாவனையுடன் அலட்டினர் ஞானசீலன்.

"ஸார்!"

மருக்கொழுந்து மணம் நாசிக்கு ஏறியது.

"வாணி, நீ இன்று தேவலோகத்துப் பெண்ணுகவே வந்திருக்கிருய்! இவ்வளவு அன்பும் அந்தமும் கொண்ட

உன்னை என்னிடமிருந்து பிரித்து விலக்கிவிட நீ ஏன் எத்தனம் செய்தாய்? சொல்லமாட்டாயா, வாணி?...சொல்லேன் வாணி! விதி உன் வாயை அடைத்து விட்டு, உன் தோழியின் வாயைத் திறந்து விட்டதோ? ம்...! விதியாவது, தெய்வமாவது! எல்லாம் இந்த மானிடப் பிறவிகள் ஆடுகிற நாடகம்தான்!"

ஞானசீலனுக்கு வெறி மூண்டது: 'வாணி' என்று இன் குரல் ஒலிக்கக் கூவியவாறு அவளை நெருங்கினர்.

"நில்லுங்கள். என் தவசீலியை நீங்கள் மணப்பது குறித்து உங்கள் கடைசி முடிவைக் கேட்டுப்போகவே நான் வந்திருக்கிறேன். அவளுக்கு உடல் நலமில்லை. இரவு தொட்டு பச்சைத் தண்ணீரைத் தொடாமல் படுத்த படுக்கையாகக் கிடக்கிருள். ம்...சொல்லுங்கள்!"

"இதோ என் முடிவைச் சொல்லி விடுகிறேன்!" என்று கிறுக்குக் கொண்டவரெனப் பிதற்றினர். அதன் தொடர்ச்சியாக, வாணியை அண்டி அவளது மென் கரங்கள் இரண்டையும் பற்றினர். பற்று அதிகரிக்க, பாசம்பெருகிக் கொப்புளிக்க, அன்பு பண்பாட அவர் அவளைப் பிடித்து இழுத்து நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு வாணியின் தூய்மை செறிந்த அழகுக் கதுப்புக் கன்னங்களிலே முத்தம் பதிக்க முனைந்திட்ட வேளையிலே "நில்லுங்கள்!" என்ற எதிர்ப்புக்குரல் ஒன்றை முன்னேடவிட்டு பின்னேடி வந்தாள் தவசீலி. அவள் முகம் சோர்ந்திருந்தது.

"சமுதாயத்தின் முதல் காவலன் எழுத்தாளன்தான் என்று பிரமாதமாகச் சொல்லுகிற நீங்களா இந்த பயங்கர செயலைச் செய்யத் துணிந்தீர்கள்? மாசுபடிந்த உங்களையா நான் என் ஆண்டவனுக மதித்துக் கும்பிட்டேன்! ஐயோ என்னைப்போல ஒரு அபாக்யவதி இந்த உலகத்திலே வேறு ஒருத்தியும் இருக்கவேமாட்டாள்!" என்று ஓங்கி ஓங்கி மண்டையில் அடித்துக் கொண்டு அழுதாள் தவசீலி. "நான் கறை

பட்டுப் போனேனே!" என்று கதறியபடி, தன் பாதங்களில் வந்து விழுந்த வாணியை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டுஅவள் கண்களைச் சேலை நுனி கொண்டு துடைத்தாள் தவசீலி.

அடுத்தடுத்து நின்ற கோதண்டபாணியும் கோசலை அம்மாளும் செய்வகை புரியாமல் மலைத்துப் போய்க் காணப் பட்டார்கள்.

"வாணி! நீ என் தொழுகைக்குகந்த தெய்வம், தாயே!" என்று புகழுரை நல்கி, மறுமுறையும் நெஞ்சுடன் நெஞ்சு சேர்த்துத் தழுவிக் கொண்டாள் தவசீலி, அப்போது, "வாணி வாணி!" என்று பெருங்குரலில் புலம்பியவராக ஓடி வந்த ஞானசீலன், தாம் எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றவராகி, அந்தச் சீசாவை வாணியிடமிருந்து பிடுங்கி வீசினார்.

தவசீலி திரும்பினாள். 'விஷம்' என்ற மூன்று எழுத்துக்கள் மட்டிலும் உடையவில்லை! "உன் தந்திரத்தை உணர்ந்து தானே நான் இங்கு ஓடிவந்து சர்வ ஜாக்கிரதையாக உன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் என்னை ஏமாற்றி விடப் பார்த்தயே வாணி? ஏன்? நீ இவ்வுலகை விட்டுப் போய் விட்டால், அப்புறம் நான் மட்டிலும் இங்கு தங்கியிருப்பேன் என்றுதானே மனப்பால் குடித்திருக்கிறாய்? ஐயா! இந்தாருங்கள், உங்களுக்கு ஒரு கடிதம்"! என்று சொல்லி உறை ஒன்றை சமர்ப்பித்தாள் தவசீலி.

நடுங்கிய ஞானசீலனின் விரல்களில் முடங்கல் முடங்கியது.

"ஐயா,

தவசீலி என் அன்பில் விளைந்த உதாரணப் பெண்; உடன்பிறவாச் சகோதரி. அவளை அழச் செய்து விடாதீர்கள். கனவுகளை வளர்த்துக் கொண்ட காதலர்கள் ஒரு பிறவியில் தங்கள்

லட்சியங்களில் வெற்றி பெறுவிட்டாலும், மறு பிறப்பில் நிச்சயம் வெற்றி பெற்றே தீருவார்கள் என்றும், இந்த ஐதிகத்தின் அடிப்படையிலேயே விட்டகுறை—தொட்டகுறை தத்துவமே உருவாகி வழங்கி வருகிறதென்றும் சொன்னீர்கள் ஒருநாள். உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இல்லையானல், திருமணங்களை நிச்சயப்படுத்த சொர்க்கத்தை ஏன் நிர்ணயிக்க வேண்டும்? கனவு, காதல், வாழ்க்கை எல்லாமே சொப்பனமாகத்தான் தோன்றுகிறது. உங்கள் இனிய நினைவு ஒன்றுடனே நான் உங்களை விட்டு விடை பெறப் போகிறேன்! என்கனவை வாழவைக்க நான் மறு பிறவி எடுத்து உங்களைக் கட்டாயம் அடைந்தே தீருவேன். ஏனென்ருல், சாவை அணைப்பவர்களின் இறுதி ஆசைகள் நசிவதில்லையல்லவா?

"என்கதை முடியட்டும்! ஆனல் என் சகோதரியின் கதையைத் தொடங்குவதற்குக் கருணை காட்டுங்கள். உங்கள் அன்பின் நெஞ்சில் தவசீலிக்கு நிழல் தந்து போற்றுங்கள். அப்போதுதான் என் ஆவி ஆறுதலடையும். அப்போதுதானே நான் உங்களுக்காக நிம்மதியுடன் தவம் செய்யக்கூடும்?

வாணி."

"ஐயோ, வாணி!" என்று ஓடி, வாணியின் பாத நிழலில் நெடுமரம் சாய்ந்த பாவனையாகச் சாய்ந்தார் ஞானசீலன். "உன் உள்ளம் தொட்ட நான் உன் உடலையும் தொட்டு அதன் மூலமாக உன் மீதுள்ள என் உரிமையினை ஸ்தாபிதம் செய்து கொள்ளவே உன்னை பலவந்தப் படுத்தி அணைய முனைந்தேன். நான் பாவி! தேவலோகத்துப்'பாரிஜாதம் நீ! உன்னை நுகர எனக்கு அருகதையில்லை! என்னை மன்னித்து விடு வாணி! உன் விருப்பப்படியே தவசீலியைக் கைத்தலம் பற்றச் சம்மதிக்கிறேன். ஆண்டவன் மேல் ஆணை இது!" என்று முடித்தார் ஞானசீலன். சிரிப்பே வடிவமாகி நின்ற தவசீலியின் அழகு

ணர்ச்சிச் சிரிப்பை அனுபவிக்கக் கூட முயலாமல், ஞான சீலன் தம் அறைக்குள் நுழைய அடியெடுத்தார். அப்பொழுது, குறுக்கே பாய்ந்து மேஜைமீது தாவியது பூனை ஒன்று. மறு விநாடியில் மேஜையை விட்டுத் தரைக்குத் தாவியது சிறிய சீசா ஒன்று. சிதறிய உடைசல்களினூடே 'நஞ்சு' என்ற எழுத்துக்கள் செங்குருதித் திவலைகளாக உருக்கொண் டிருந்தன.

"அத்தான்!" என்று புதுச் சொந்தம் கொடுத்து ஓலம் பரப்பினாள் தவசீலி.

"தம்பி!" என்று பழைய பாசம் கொடுத்து மன்றாடினாள் தாய்.

வர்ணியிடமிருந்து விம்மல் வெடித்தது.

கோதண்டபாணி வாயில் கைக்குட்டையை அழுத்தி னார்.

ஞானசீலனுக்கு கிறுகிறுப்பு ஏற்பட்டது. தரையில் சாயப்போனார். நல்லவேளையாக தவசீலி அவரைக் கைப்பிடி யாகத் தாங்கிக் கொண்டாள். அவளும் தரையில் உட்கார்ந் தாள். அப்பொழுது, தன் பெயருக்கு ஒரு கடிதம் இருப்பதைக் கண்டாள். டாக்டருக்கு ஆள் அனுப்பி, ஞானசீலனை படுக்க வைத்து, அதன் பிறகு, அவள் அந்தக் கடிதத்தைப் பிரித் தாள்.

"தவசீலி!

என்னை ஆண்டவள் வாணி.

ஆனால், நான் அவளை ஆள முடியவில்லை.

என்னைப் பைத்தியமாக்கக் கங்கணம் கட்டியிருக் கிறது விதி.

என்னை ஏமாற்றும் சக்தி அந்தக் கடவுளுக்குக் கூட இருக்கமுடியாது.

ஐயோ! என் இல்லற வாழ்க்கையிலும் இலக்கிய '.வாழ்க்கையிலும் நான்கண்ட கனவுகளையெல்லாம் தவிடுபொடியாக்கி விட்டாயே நீ?

நீ தான் விதியா? இல்லை, நீ தான் தெய்வமா?

நீ என் உடைமையாகக் கனவு கண்டு கொண்டிருப்பாய்! பாவம்!

என்னை மன்னித்துவிடு!

பாவம், வாணி!

ஞானசீலன்.

உறையை உதறினாள் தவசீலி.

மற்றொரு துண்டுக் கடிதம் விழுந்தது. வாணியை நாடியது.

“அன்பிற்குரிய வாணி!

நீ என் தெய்வம். இந்தக் கலியுகத்திலே தெய்வத்தை நான் கண்முன் கண்டு கொண்டேனே, அதற்கு நான் பூர்வஜென்மத்தில் தவம் இயற்றியிருக்கத்தான் வேண்டும். உன்னை அழித்துக் கொண்டு, உன் தோழியை வாழவைக்கத் துணிந்த தியாகசீலி நீ; நன்றிக்குக் கிட்டிய இலக்கணம் நீ!

உன்னைப் புகழ அருகதை அற்ற பாவி நான்! கோழை நான்!

இப்பிறப்பில் உன்னை என் உயிரின் மறுபாதியாக அடையக் கனவு கண்டேன். முடியவில்லை. அடுத்த பிறப்பிலேனும் உன்னை அடையத் தவம் செய்வேன். அதற்காகவேதான், இப்பூவுலகிலிருந்து சற்றைக்குள்ளே விடைபெறப் போகிறேன்.

என் திருமணம், ஆம்; நம் திருமணம் பூலோகத்தில் நிச்சயிக்கப்பட்டது. ஆனால் என் திருமணம்—ஆம்; நம் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட வேண்டுமென்பதுதான் தெய்வத்தின் திருவுள்ளம் போலும்!

அடுத்த பிறவியில் என் கனவுகள்—ஆம்; நம் கனவுகள் ஈடேறுவது நிச்சயம்! ஆண்டவன் நல்லவன்!

எனக்கு விடைகொடு, வாணி! மறந்துவிடாதே! என் அன்னையின் உயிருக்கு நீதான் காவல் இருக்க வேண்டும்!

ஞானசீலன்."

தீபத்தட்டில் எரிந்து, பின் அணைவதற்குத் துடிக்குமே சூடன், அது போன்று வாணி துடித்தாள்; துவண்டாள்! கண்ணீரைத் துடைத்துக் கொண்ட பிறகு, தவசீலியையும் ஞானசீலனையும் கரம்பற்றினாள்; ஞானசீலனின் வலதுகையுடன் தவசீலியின் இடதுகையைப் பிணைத்துச் சேர்த்தாள். ஆனந்தமாக வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினாள் வாணி!

மிதந்த காற்றில் அலைந்தாடிய நாள்காட்டியைப் பார்த்தவாறு, நாணம் பூத்து—நகைபூத்து நின்றாள் தவசீலி. கையை விடுவித்துக் கொண்டு, ஞானசீலனின் செவிகளில் ரகசியமொன்றை ஓதினாள். பின்னர், மகிழ்ச்சி ரதமேறி வாணியின் பக்கம் போய் இறங்கினாள். அவள் காதுகளிலும் அந்தரங்கம் பேசினாள். அவளது கன்னங்களைத் தட்டிக் கொண்டே அவளுடைய சம்மதத்தைப் பெற்றாள் தவசீலி!' "இப்போதாவது என்னை இதய பூர்வமான பாசத்துடன் ஏற்பீர்களல்லவா அத்தான்?" என்று கண் கலங்கிக் கேட்டாள் அவள்.

"நீ உன்னுடைய முதல் கடிதத்தை எனக்குக் காரியாலயத்துக்கு எழுதினாயல்லவா? அப்போது அதைப் படிக்கப் படிக்க என்னுள், என்னையுமறியாமல் ஊறிக்கொண்டிருந்த இனம் விளங்காத குதூகலத்தின் உட்பொருள் இப்போதுதான் எனக்கு விளங்குகிறது!" என்று ஆனந்தத்தின் ஊஞ்சலை ஆட்டிக்கொண்டே, அவளது இமை நுனிகளைத் துடைத்தார் ஞானசீலன்!

## 21. பூலோகச் சொர்க்கத்தில் மூவர்!

ஆறுமுகக் கடவுள் சந்நிதியில் வைக்கப்பட்டிருந்த பீங்கான் தட்டில் மூன்று ஜோடி மணமாலைகள் வைக்கப் பட்டிருந்தன.

தியாகமும் கடமையும் வாணியாகவும், தவசீலியாகவும் உருக்கொண்டு கூத்து நடத்திய அதிசயத்தில் திளைத்தவா றிருந்த கதாசிரியர் ஞானசீலன் தம்முடைய கையில் இழைந்த மங்கல நாண் இரண்டையும் பார்த்துப் புளகிதம் எய்தி, அதே மகிழ்ச்சியின் உணர்வுடன் வாணியையும் தவசீலியையும் மாறி மாறிப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார்.

பூலோகத்தில் சொர்க்கம் பிறந்தது.

ஆலயமணியினை முழக்கிய பெருமையைத் 'தமிழரசி' உரிமையாளர் எடுத்துக் கொண்டார்!

முடிந்தது.